www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

டிச.31–ஜன.06,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU ...IONAL TAMIL WEEKLY முரசு 134



சவால்

## புலிகள் விடுத்துள்ள எச்சரிக்கை!



## கரும்புலிகளோடு பிரபா புகைப்படங்கள்



வாசக நெஞ்சங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள் 1996

## பிரசவ நாள் அட்டவணை

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## பலவீனமான திரை

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**
தணிக்கை விலகிவிட்டது.
வரவேற்கக்கூடிய காரியம்.

தணிக்கையால்
அரசு சாதித்தது என்ன?
கூட்டிக் கழித்துப் பார்த்தால்
அரசு தனது முகத்தில்
தானே கரி பூசியதாகிவிட்டது.

தகவல்-தொடர்பு துறைகளில்
தொழில் நுட்ப முன்னேற்றங்கள்
விண்ணுக்கு அப்பாலும்
வியாபித்துள்ள நிலையில்
எந்தவொரு நாடும்
செய்திகளுக்கு திரைபோட முடியாது.

உள்நாட்டுச் செய்தியாளர்களை
வேண்டுமானால்
உத்தரவுக்கு கட்டுப்பட்டு
நடக்க வைக்கலாம்.
அதனால் பலன் என்ன?

வானலைகளில் இருந்து
தவழ்ந்துவரும் செய்திகள்
திருவாளர் பொதுஜனத்தின்
செவிக்கு எட்டவே செய்யும்.

தொலைக்காட்சிகளில்
கட்டம் போட்டு மறைக்கலாம்.
வசதியானவர்கள் வீடுகளில்
'டிஸ் அன்ரெனா'
உலகத்தையே கொண்டுவந்து
உள்வீட்டுக்குள் நிறுத்தும்.
அதில் தணிக்கை தடுக்கமுடியாத
செய்திகளும் இருக்கும்.

ஆக, தற்கால தணிக்கையால்
நேர்மாறான விளைவுகளே
ஏற்படத் தொடங்குகின்றன.

தணிக்கை அமுலில் உள்ளபோது
அரசு சொல்வதையும்
திருவாளர் பொதுஜனம்
சந்தேகக் கண்கொண்டே
நோக்கத் தொடங்கிவிடுகிறார்.

தணிக்கைக்கு
என்ன காரணம் சொன்னாலும்-
அதில் நியாயம் இருந்தாலும் கூட
தணிக்கை-
உண்மைக்கு எதிரானது
என்றுதான் நோக்கப்படும்.

தணிக்கையை தனது கையில்
வைத்திருக்கும் அரசு
தனக்கு சார்பான செய்திகளை
மட்டுமே சொல்லும்
என்றே பரவலாகக் கருதப்படும்.

அரசும் அதன் நிறுவனங்களும்
சொல்லும் உண்மைகளும்
பொய்யாகக் கணிக்கப்படும்
ஆபத்து
தணிக்கையால் ஏற்படுகிறது.

பொதுஜன முன்னணிக்கும்
வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கும்
இடையே இருந்த உறவை
தணிக்கை சேதப்படுத்திவிட்டது!

ஆக, ஒட்டு மொத்தமாகப் பார்த்தால்
தணிக்கையால்
அதிக நஷ்டம் அரசுக்குத்தான்!

முரசைப் பொறுத்தளவில்
தணிக்கையின் பாதிப்பு
வாசகர்களை
வருத்தமடைய செய்யாதளவுக்கு-
முடியுமானவரை-முயன்றோம்.

அதிரடி அய்யாத்துரையார்
சூசகமாக
சொல்லவேண்டியதைச் சொன்னார்.
நமது வாசகர்கள் புத்திசாலிகள்.

தணிக்கை என்றுவிட்டு
பேனாக்களை மூடிவைத்துவிட்டு
செய்திச் சுதந்திரம் உள்ளபோது
பேனாக்களை திறந்து
துள்ளிக் குதிப்பதில்
துளியும் பயனில்லை.

அதேசமயம்,
அடித்தேன்-பிடித்தேன்
பாணியில் குதித்து
பத்திரிகைக்கே பாதிப்பை
ஏற்படுத்துவதும் விவேகமில்லை.

ஆகவே- தணிக்கைக் காலத்தில்
கயிற்றின் மேலே நடந்தாலும்
ஓரளவு கச்சிதமாய் நடந்தோம்.
வாசகர்கள் அறிவீர்கள்.
அதுவே திருப்தி.

□□□

போர் மூண்ட (95)
விடைபெறுகிறது.
பூரிக்க முடியவில்லை.
போரின் மீதிக் கட்டத்தை
(96) இடம் தந்துவிட்டல்லவோ
செல்கிறது!
எனினும்- இனிய உங்களுக்கு
இதய பூர்வ
புத்தாண்டு வாழ்த்துக்கள்.
நல்லது நடக்க
நாமெல்லாம் முயல்வோம்!

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## புத்தாண்டில் புது வாழ்வு

இன்றுடன் இந்த ஆண்டு விடைபெற்றுச் செல்கிறது. இந்த வருடம் முழுவதும், கடவுள் தமது பிள்ளைகளாகிய நம்மீது கொண்ட அளவற்ற அன்பினாலும், இரக்கத்தினாலும் நம்மை நன்மையை நோக்கி வழிநடத்திச் சென்றிருக்கிறார். நமக்கு ஏற்படவிருந்த துன்பதுயரங்கள், விபத்துக்களிலிருந்து நம்மைக் காத்திருக்கலாம். எனவே கடவுளுக்கு நன்றியும், ஸ்தோத்திரமும் செலுத்துவது நமது கடமை.

மனிதனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது. புஷ்பத்தைப் போல பூக்கிறான். காற்று அதன் மேல் வீசினவுடனே அது இல்லாமல் போயிற்று. அது இருந்த இடத்தை அது இனி அறியாது. ஆனால் கடவுள் தமது கிருபையால் நமது நாட்களை நீடிக்கச் செய்து இன்னுமோர் வருஷத்தை நமக்கு அளிக்கிறார்.


கடவுளிடத்தில் முடிவுறும் ஆண்டிற்காக நன்றி செலுத்துவோம்; மலரும் புத்தாண்டில் நல்லதே நடக்க அவரிடத்தில் மன்றாடுவோம். நாம் கேட்பதை நமக்குத் தர இறைவன் சித்தமாயிருக்கிறார்.

'நீங்கள் என் நாமத்தினால் எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்' என்று வாக்குத்தத்தம் தந்திருக்கும் கடவுள் கட்டாயம் நீங்கள் கேட்பதைத் தருவார். புத்தாண்டு உங்கள் வாழ்வில் மகிழ்ச்சியைத் தந்து மலரட்டும்.

**வருஷத்தை உம்முடைய நன்மையால் முடி சூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது! (சங். 65:11)**

ஜி. செல்வா.

## ஆன்மீகம்



### நபிகளார் தொழுத நபில் தொழுகை

நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் ஒரு நாள் சூரிய கிரகணம் ஏற்பட்டு விட்டது. உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கிரகண "நபில்" தொழுகை இரண்டு ரக் அத்து தொழ ஆரம்பித்தனர்.

அத் தொழுகையின் போது அன்னவர்கள் "என் இறைவா! நான் இந்த மக்களுடன் இருக்கும் வரையிலும் தங்கள் பாவங்களை மன்னிக்கும்படி உன்னிடன் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கும் வரையிலும், அவர்களைத் தண்டிக்கப் போவதில்லை என்று நீ எனக்கு வாக்களித்து இருக்கிறாய் அல்லவா" என பல முறை படைத்தவனிடம் பிரார்த்தித்ததாக அன்னவ ஸஹாபாக்கள் சான்று பகிர்ந்துள்ளனர்.

ஆனால் இன்று நாம் இதற்கு மாறாக செயல் படுகிறோம். பூகம்பம், புயல்காற்று, சூரிய-சந்திர கிரகணங்கள் ஏற்படும் போது அதற்கான விஞ்ஞான விளக்கத்தை கண்டுபிடிக்க முயலுகிறோம். இவை அனைத்தும் அல்லாஹ்வின் அற்புதங்கள் என்றும் அவன் அடியானுக்கு அச்சமூட்டுபவை என்றும் உணரக் கூடாதா?

எம்.சி. கலீல்-கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-131

### பரிசுக்குரிய கவிதை

#### சமாதானக் குடை

வான் மழை தவிர்க்க நீ பிடிப்பாய்-
வண்ணக் குடை!
போர் மழை தவிர்க்க யார் பிடிப்பார்-
சமாதானக் குடை?

மோகன் மகாலிங்கசிவம், மட்/கல்லடி.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

#### செக்பொயிண்டில்!

சைக்கிளை கொஞ்சம்
நிறுத்துங்கப்பா!
அடையாள அட்டை இல்லை
என்று
அண்ணாவை நிறுத்திட்டாங்க!

ஹப்புத்தளையூர் மனோகோபாலன்.

#### வெட்கப்படுநிலமே......

கொட்டும் மழையினிலும்
சுட்டெரிக்கும் வெயில் தாண்டி
கட்டறுத்து ஒடுது பார்
எங்கள் பயணம்......
வெட்கப்படு நிலமே!
வேதனைப்படு மனமே!!
தொடருது பார்
எங்கள் வாழ்க்கைப் பயணம்!

எம்.ஆர்.ஜூட், சாரதா வீதி,
காரைதீவு-05.

#### துன்பமெல்லாம் சகஜமாச்சு

நாடோடி வாழ்க்கை போலாச்சே,
சயிக்கிள் சவாரி எளிதாச்சே,
நாளுக்கொரு ஊர் புதிசாச்சே,
எல்லாத் துன்பமும் நமக்காச்சே.

விநோத் தேவதாஸ், நில அளவைத் திணைக்களம்,
புத்தளம்.

## கவிதைப் போட்டி இல-134



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 60.01.1996.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 133. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

#### இன்பப் பயணம்

அப்பாவோடு பயணஞ்செய்ய ஆசையாக இருக்கு
அவருக்கென குடை பிடித்தால் அதிலும் சுகம் எனக்கு
தப்பாமலே பயணஞ் செய்தோம் பத்து மைல் கணக்கு
தங்கச்சியும் அம்மாவோடு பின்னால் வாறா கடைக்கு.

திருமதி. மல்லிகா பத்மநாதன், டெமேரியா குறூப், பசறை.

#### நிலையாமை

பயணம் முடியும்
நிலையில்
நிலைத்திருப்பது
பையனின் உயிரா?
தந்தையின் உயிரா?

செல்வி.என்.ஏ.புவேனஸ்வரி,
த.ம.வி, பசறை.



#### செல்லடி

மழைக்கஞ்சி
குடைபிடிக்கலாம்..!
செல்லடிக்கஞ்சி
எது பிடிப்போம்...?

அரவிந்தன், கல்லடி.

#### இதுவரை..! இனி...?

இதுவரை..
ரிவிரெஷ மழை!
இனி......
என்ன மழையோ?

வடிவேல் சுரேஸ்கண்ணா,
இருதயபுரம், மட்டக்களப்பு.

#### கொடி பிடி

மழை வரும் முன்
குடை பிடி!
பாண் தீரும் முன்
வரிசையில் இடம் பிடி!
தேசமே! -நீ
அழியும் முன்
சமாதானக் கொடி பிடி!

ஆகாஷ்குமார், தல்வத்தை,
கண்டி.

#### நாள் வருமா?

ஆனந்தச் சைக்கிலேறி
அழகாய் குடை பிடித்து
நானெந்தன் ஊர் ரோட்டில்
'தடை' யின்றிப் பவனி வரத்
தக்கதொரு நாள் வருமா?

பாண்டியூர் பொன், நவநீதன்.

#### மரணப் பொறி

செப்பனிட்ட தெருவில்
செல்கையிலும் நாம்
மாண்டொழிந்து
போய்விடலாம்.....!
நம் தேசமெங்கும்
மரணப் பொறி!

இ.பவானி, சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

#### மனமொத்தால்..!

தந்தை மிதிக்க,
தனயன் பிடிக்க,
மழையோ, வெயிலோ,
இடரோ, இன்பமோ
மனமொத்தால் வாழலாம்!

செல்வி கே. இஸ்மத் இர்பானா,
ஏறாவூர்-02

#### மறைப்பு

மாரியும் பொழியவில்லை,
கோடையும் காயவில்லை;
ஆயினும் குடைபிடிக்கிறோம்-
மனிதத் தலைகளை
மறைப்பதற்காக இங்கே.

கோ.குணசீலன், லக்சபான வீதி,
தோணிக்கல், வவுனியா.

#### விதி!!

திக்கற்றவனுக்குத்
தெய்வமே துணை!
தென்மராட்சி செல்பவனுக்கு
துவிச்சக்கர வண்டியே துணை!!

காரைத்தீவூர் சிவம், குருக்கள்மடம்.

### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

கஸன் நவ்யாத், கிண்ணியா - 02.
எம்.எல்.எம். நியாஸ், காத்தான்குடி - 05.
எம். மங்களேஸ்வரன், மட்/முறக் கொட்டாஞ்சேனை.
ரோஜா - பாலையூற்று, திருமலை.
குமாரசாமி ஜெகதீஸ்வரன், புசல்லாறு.
ஜெ. ரமீஸா, நுகவல.
எ. புஸ்வராணி, கெட்டியாதன்ன.
கே. இஸ்மத் இர்பானா, பிரதானவீதி - ஏறாவூர்.
எம்.ஏ.எம். நிஸாம், கிண்ணியா.
ஐ.எல். சபீனா, அக்கரைப்பற்று - 06
செல்வி. நுஸ்ரத் ஜஹான், மாத்தளை.
மு. ரஞ்சன் துரைசிங்கம், நோட்டனுார்.
ஜெ. பிரகாஷ், கோணக்கலையூர்.
எம்.எஸ். சனூதா, பதுளை.
உதயகுமார் - கோமளா, நுவரெலியா.
இல்முன் நிஷா, திருக்கோணமலை.
செல்வி ஜெயா செல்லத்தம்பி, கிண்ணியா - 01.
செல்வி - சிவாஜினி சதாசிவம், மாத்தளை.
எம்.எஸ்.எம். கைஸ், கிண்ணியா.
செல்வி. ஹிதாயா ஹுஸைன், தியத்தலாவ.
எஸ். மோகன், வவுனியா.
டி. திவாகரன், பதுளை
எஸ். சரவணேஸ் டெயிசி, கலவான.
ரெங்கசாமி ஜீவராணி, பொகவந்தலாவ.
கணேசன் இராஜேஸ்வரி, தலாத்து ஓயா.
ஏ.எஸ். இம்கான், தர்காநகர்.
றசீட் காசிம், புதிய காத்தான்குடி-03.

## வாசகர் சாலை

தமிழ் அரசியல் கட்சிகள் பல அறிக்கை விடுவதில் சுகம் கண்டு வருகின்றன. அறிக்கைகளைக் கண்டு மக்கள் நம்புமளவுக்கு இல்லை என்பதை அவை எப்போது அறியப் போகின்றன. "சென்றனர்- கண்டனர்- வந்தனர்." என்று தமிழ் கட்சிகளுக்கு நாரதர் கோபமூட்டிவிட்டார்.

ஏ. விசாகன், வவுனியா.

□□

தமிழ் அரசியல் கட்சிகளின் துணிச்சல் கடுகளவு, அறிக்கைகளும் பேச்சுக்களும் மலையைவிட பெரிது, பெரிது. நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் சொல்லப்பட்ட சங்கதிகள் முற்றிலும் சரி.

வ. மகேந்திரன், கல்முனை.

□□

தணிக்கை மத்தியிலும் அந்தக் குறையே தெரியாமல் செய்தி தர முரசால் மட்டும்தான் முடிந்தது.

சோ. இந்திராணி, ஹட்டன்.

□□

இராஜகுமாரனின் இராமாயணத் தொடர் ஓவியத்துடன் மிளிர்வது தனிச் சிறப்பு. 'லேடிஸ் ஸ்பெஷல்' சின்ன சின்ன குறிப்புக்கள் பயன்மிக்கதாக உள்ளன.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன், லேக்வீதி - மட்டக்களப்பு.

□□

இராஜதந்திரியாரின் அலசல் பிரமாதம். முக்கொடிகள் மத்தியில் மூச்சுத்திணறும் மக்களின் கதியை நினைத்து நாமும் வருத்தப்படுகிறோம்.

என். பரமானந்தன், கண்டி.

□□

கார்லோஸ் தொடர் சூப்பர். ரசனையுள்ள பயங்கரவாதியா கார்லோஸ்?

எம்.எல். கழர், புத்தளம்.

□□

உலகப் புகழ் கார்லோஸ் கொடுத்துவைத்தவனய்யா. திரும்புமிடமெல்லாம் காதலிகள் கிடைத்துவிடுகிறார்கள். பொறாமையாக இருக்கிறது.

சி. ரஞ்சித்குமார், மட்டக்களப்பு.

என் இனிய முரசிற்கு,


உனது அனைத்து அம்சங்களும் பிரமாதம், வாரம் ஒரு முறை வலம் வந்தாலும் தினமும் என் கரம் கிட்ட மாட்டாயா? என்ற ஏக்கம் ஒரு புறம். இராஜதந்திரியின் அரசியல் அலசல், ரசிகனின் இலக்கிய நயம் என்பன உன்னில் என்னைக் கவர்ந்தவை. வளர்க உன் பணி! வாழ்க! உன் சேவை.

செல்வன். ரா. சாந்தராஜா, பாம்காடின், இரத்தினபுரி.

□□

பட்டுக் கோட்டையாரின் விலை உயர்ந்த குற்றம் வாரா வாரம் அசத்தல்தான்.

ஏ. குமுதா, கெட்டியாதன்ன.



□□

பட்டுக்கோட்டை பிரபாகரின் 'விலை உயர்ந்த குற்றம்' சூடு பிடிக்கிறது. பரத்; சுசிலாவை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி. அப்துல் ரகுமானின் கவிதைகள் இனிமை. தேன் கிண்ணம் தேன். மொத்தத்தில் முரசின் ஆக்கங்கள் 'ஏ-வன்' - வாழ்த்துக்கள்.

செல்வி - ஷர்மிளா றஹீம், பிரதானவீதி, நிலாவெளி.

□□

தினமுரசில் 'பாப்பா முரசு' படிக்கும் சிறுவர்களுக்கு பயன் தருகின்றது. தினமுரசுக்கு எங்கள் நன்றி.

எம். கரீமா சனூன், புத்தளம்.

□□

தினமுரசே உன் ஆக்கங்கள் முழுதும் தூள் பறக்கிறது. குறிப்பாக லேடீஸ் ஸ்பெஷல், சிறுகதைகள், சிந்தியா பதில்கள், இராமாயணம் என்பனவாகும்.

ஜெ. ஜெகதீஸ்வரன், லிங்கநகர், திருமலை

□□

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கிழக்கில் மேலும் புதிய தாக்குதல்கள்

# யாழ்ப்பாணத்தில் உளவறியும் நடவடிக்கைகள்

## "கிளிநொச்சியில் ஒரு வாரத்தில் 100 பேர் இணைந்தனர்"

(யாழ் நிருபர் வர்மா)

**கிழக்கு மாகாணத்தில் படையினருக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்த புலிகளின் தலைமைப்பீடம் திட்டமிட்டுள்ளது. 96ம் ஆண்டு நடுப்பகுதிக்குள் புலிகளை செயலிழக்கச் செய்துவிடலாம் என்று அரச தரப்பு திட்டமிட்டுள்ளது. இதேவேளை கிழக்கில் பாரிய தாக்குதல்களை புதிய ஆண்டில் தீவிரப்படுத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர். கடற்பரப்பில் தாக்குதல்களை நடத்துவது மூலம் படையினரின் விநியோகப் பாதையில் தடங்கல் ஏற்படுத்துவதிலும், வன்னித் தளபிரதேசத்துக்கும் கிழக்குக்கும் இடையே தமது கடற் போக்குவரத்தை நடத்தவும் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.**

### முதலில் சிறு தாக்குதல்கள்

யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரம் படையினர் நிலைகொண்டிருப்பதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் படைத்தரப்பினர் எந்நேரமும் உஷார் நிலையில் இருப்பதால் உடனடியாக அங்கு பாரிய தாக்குதல் நடவடிக்கை எதிலும் புலிகள் ஈடுபட மாட்டார்கள் என்று தெரிகிறது.

தாக்குதல் நடவடிக்கைகளுக்கு முன்னர் உளவறியும் பணிகள் செய்ய வேண்டி இருக்கும். படையினர் விழிப்பாக இருப்பதால் முன்னரங்க நிலைகளுக்குள் ஊடுருவி உளவறியும் நடவடிக்கைகளை செய்ய முடியாது.

தற்போது யாழ்ப்பாணத்திற்குள் பதுங்கியிருக்கும் புலிகளது அணிகள் சிறு தாக்குதல்களிலும், உளவறியும் பணிகளிலும் மட்டுமே ஈடுபடுமாறு பணிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண போர் முனையில் அமைதி நிலவுவது தொடருமானால், இடம் பெயர்ந்த மக்கள் திரும்பிச் செல்ல விரும்புவார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்பதால் யாழ்ப்பாணத்திற்குள் விரைவில் தாக்குதல் நடத்த வேண்டிய அவசியமும் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

### எந்தத் திசையில்?

ஆனையிறவு முகாமிலிருந்து படையினர் முன்னேறி வரக்கூடும் என்று கருதுவதால் அங்கும் புலிகளது அணிகள் நிறுத்தப்பட வேண்டியுள்ளன.

ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் படையினர் முன்னேறுவார்களா? அல்லது தென்மராட்சி நோக்கி முன்னேறுவார்களா என்று தீர்மானிக்க முடியாத நிலையில் புலிகள் உள்ளனர். எனவே இரு முனைகளிலும் தமது அணிகளை நிறுத்தி வைத்துள்ளனர்.

யாழ்-குடாநாட்டுக்கு அடுத்ததாக இருக்கும் பெரும் நிலப்பரப்புத்தான் கிளிநொச்சி. யாழ்-குடாநாட்டில் இருந்து கிளாலி வழியாகச் செல்லும் மக்கள் கிளிநொச்சிக்குத்தான் போகவேண்டும்.

கிளிநொச்சியில் இடம்பெயர்ந்த யாழ்-குடாநாட்டு மக்கள் 2 1/2 இலட்சம் பேர் தங்கியுள்ளனர்.

ஆனையிறவு முகாமிலிருந்து தென்திசையில் கிளிநொச்சி இருக்கிறது. 15 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டும். கிளிநொச்சிக்கு இடையில் பரந்தன் இருக்கிறது. ஆனையிறவு முகாமிலிருந்து இது 10 கிலோ மீட்டர்.

ஆனையிறவு முகாமிலிருந்து கிளாலிக் கடலேரி வடமேற்கு திசையில் உள்ளது. கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் தூரம்.

படையினர் எந்த திசையில் முன்னேறப் போகிறார்கள் என்பதை புலிகளால் தீர்மானிக்க முடியாமல் உள்ளது.

எனினும், கிளிநொச்சியைவிட வன்னிதான் பாதுகாப்பான பகுதி என்று புலிகள் தெரிவித்து வருகின்றனர்.

### வன்னியே பாதுகாப்பு

சமீபத்தில் தென்மராட்சியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் புலிகள் அமைப்பின் பிரமுகர் கண்ணன் என்பவர் உரையாற்றினார். "வன்னிதான் பாதுகாப்பான பகுதியாகும். அங்கு மக்கள் செல்வதுதான் நிரந்தரமான பாதுகாப்புக்கு உத்தரவாதமாக இருக்கும்." என்று அவர் கூறினார்.

கிளிநொச்சியும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் செல்லக்கூடும் என்பதை சூசமாக தெரிவிப்பதாகவே புலிகளது கருத்துக்கள் உள்ளன.

இதேவேளை கடந்த இரண்டு வாரங்களில் கிளிநொச்சிப் பகுதியில் 100 பேர் இயக்கத்தில் இணைந்தனர் என்று புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பில் திருமணமாகி 6 மாதமான இளம் தம்பதியினர் (கணேஸ்வரன் வயது 24, மாலினி, வயது 21) புலிகள் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

தற்போது கிளிநொச்சியில் இருந்து வெளியாகும் 'ஈழநாதம்' பத்திரிகையில் ஆட்திரட்டலுக்கான உணர்ச்சிமிகுந்த கட்டுரைகள் வெளியிடப்பட்டுவருகின்றன.

## பேட்டியளித்தவர்கள் கொல்லப்பட்டனர்?

இலங்கை ரூபவாகினிச் செய்தியில் கடந்தமாதம் ஒரு பேட்டி ஒளிபரப்பப்பட்டது. செய்திக்கிடையில் காண்பிக்கப்பட்ட அந்தப் பேட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு ஆணும், பெண்ணும் பேட்டியளித்தனர்.

புலிகள் அமைப்பினர் தங்களை வெளியேறச் சொன்னதாகவும், தாங்கள் வெளியேறாமல் ஒளிந்திருந்ததாகவும் அவர்கள் கூறியிருந்தனர். பாரிசில் இருந்து புலிகளது பிரமுகர் திலகர் சொல்வதெல்லாம் பொய் என்றும் அவர்கள் கூறியிருந்தனர்.

அதன் பின்னர் அவர்கள் இருவரும் புலிகள் அமைப்பினரால் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடமாடும் புலிகளது அணியினர் அவர்களை தேடிச்சென்று சுட்டுக் கொன்றுவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இதனை உடனடியாக உறுதிசெய்ய இயலவில்லை.

இதேவேளையில் யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் வெளியேறாமல் ஒளிந்திருப்போரை புலிகள் தேடிப்பிடித்து எச்சரித்து வருகின்றனர்.

வலிகாமம் பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போதும் புலிகள் அப்பகுதிகளில் நடமாடி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற மறுத்தமைக்காக புலிகள் அமைப்பினரால் மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பசுபதிப்பிள்ளை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவரது கணவரான பசுபதிப்பிள்ளையும் முன்னர் புலிகள் அமைப்பினரால் கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய அமைதிப்படையோடு தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் கொல்லப்பட்டார்.

திருமதி பசுபதிப்பிள்ளையிடம் சென்ற புலிகள் அமைப்பினர் அவரை வெளியேறுமாறு கூறிய போது, "என் கணவரையும் கொன்றீர்கள். இப்போது நம்மையும் போகச் சொல்கிறீர்கள். நான் போகமாட்டேன். என்ன நடந்தாலும் என் வீட்டில் நடக்கட்டும்" என்று பிரச்சனைபட்டாராம். திருமதி பசுபதிப்பிள்ளைக்கு மூன்று பெண்பிள்ளைகள். அதே போல சுன்னாகம் ஸ்கந்தா அதிபர் கமலநாதனும் வெளியேற மறுத்ததால் புலிகள் அமைப்பினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## தென் மராட்சியில் எம்.ஜி.ஆர். நினைவுதினம்

## போர்க்களம் வருமாறு வணபிதா அழைப்பு

**த**மிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி. ஆரின் எட்டாவது நினைவுதினம் யாழ்-குடாநாட்டில் தென்மராட்சியில் 24.12.95 அன்று அனுஷ்டிக்கப்பட்டது.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெற்ற நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு யாழ்-கத்தோலிக்க மறைமாவட்ட குரு முதல்வர் வணக்கத்துக்குரிய எஸ்.ஜெ.இம்மானுவேல் உரையாற்றினார்.

அவர் தனது உரையில்: "தமிழினம் இன்று விடுதலைப் பயணத்திற்கு அழைக்கப்பட்டுள்ளது. நாம் ஒருவரையொருவர் சேர்த்துக்கொண்டு, இலட்சியப் பற்றுடன் முன்செல்ல வேண்டும். நாம் எவருமே போர்க்களத்திற்கு செல்ல தகுதியற்றவர்கள் அல்லர்.

தமிழீழப் போராட்டத்தில் கலந்து கொள்வது ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். தமிழீழ இலட்சியத்தில் மக்கள் உறுதியோடு இருக்கவேண்டும். போராட்டம் எவ்வளவு வலிமையடைய வேண்டும் என்று விரும்புகிறோமோ, அந்த அளவுக்கு இலட்சியப் பாதையில் பயணம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம்." என்று இம்மானுவேல் அடிகளார் தனது உரையில் தெரிவித்தார்.

"இராணுவத்துடன் சேர்ந்து வாழலாம் என்று மக்கள் நினைக்கக்கூடாது" என்று நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றிய புலிகள் இயக்கப்பிரமுகர் பாப்பா தெரிவித்தார்.

## கூட்டுறவுச் சங்க லொறியில் உணவுக் கடத்தல்

### பத்தாயிரம் கிலோ அரிசி மாட்டியது

(ஏறாவூர் நிருபர்)

**வா**ழைச்சேனை கோறளைப்பற்று ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான 26-6944 இலக்க லொறி, 10,000 கிலோ அரிசியை வாழைச்சேனையிலிருந்து செங்கலடி நோக்கி ஏற்றிவரும்போது கொம்மாதுறை இராணுவ முகாமில் வைத்துப் பிடிக்கப்பட்டு ஏறாவூர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த லொறியில் இருந்த 200 மூடை அரிசியும் கள்ளத் தனமாக ஏற்றி வரும் தகவல் தெரிந்தே பிடிக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், பொது முகாமையாளர், லொறிச் சாரதி, உதவியாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கொள்வனவு உத்தியோகத்தர் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஏறாவூர் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்ட பின் மேலதிக விசாரணைக்காக மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வித உத்தியோக பூர்வ அங்கீகாரமும் இல்லாமல் தலைவரின் பணிப்பின்படியே லொறி வாடகைக்கு பெறப்பட்டு கூட்டுறவுச் சேவையின் நிமித்தமே லொறி அரிசி ஏற்றி வருவதாக பொய்க்காரணம் கூறப்பட்டுள்ளது.

இந்த அரிசி செங்கலடி கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்றி வரப்படுவதாக தலைவர் பொய் கூறியுள்ளார். ஆனால் தமக்கும் இதற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று செங்கலடி கூட்டுறவுச் சங்கத்தினர் பொலிஸில் மறுத்துக் கூறியுள்ளார்.

இந்த உணவுப் பொருள் விநியோகம் நெடு நாட்களாக இடம் பெற்றிருக்கலாம் என்றும் இது புலிகளுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் படைத்தரப்பிடம் உள்ளது.

இதற்கிடையில் வெளியாரிடமிருந்து ப.நோ.கூ. சங்கங்கள் அரிசி கொள்வனவு செய்யக் கூடாது என மட்டக்களப்பு அரச அதிபர் இரு முறை சுற்று நிருபத்தின் மூலம் கேட்டிருந்தும் மாவட்டத்தில் உள்ள பல கூட்டுறவுச் சங்கங்கள் வெளியாரிடமிருந்து பாவினைக்குதவாத உக்கிப்போன அரிசியை கொள்வனவு செய்து உணவு முத்திரை பெறும் குடும்பங்களுக்கும், அகதி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கும் வழங்கி வருகின்றன. இது குறித்து பல தடவை புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப் அவர்கள் கொண்டு வந்த அகதி நிவாரண முத்திரைக்குப் பதிலாக பணம் வழங்கும் திட்டத்தை அகதி மக்கள் வெகுவாக வரவேற்றிருந்தனர். மட்டு மாவட்டத்தில் இரு மாதங்கள் பணம் வழங்கப்பட்ட பின் அத்திட்டம் இடை நடுவே நிறுத்தப்பட்டது. தமக்கு மீண்டும் பணம் வழங்கப்பட்டால் தரக் குறைவான, தமக்கு வேண்டாத பொருட்களையும் கூடிய விலையில் பெற நிர்ப்பந்திக்கப்படுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம் என மக்கள் தெரிவிக்கிறார்கள்.

## புலிகளின் வரியும் புதிய விலையேற்றமும்

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் தற்சமயம் காட்டுப் பகுதிகளிலிருந்து கிடைக்கக் கூடிய பொருட்களின் விலைகள் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. இப்பொருட்களை அப் பகுதிகளிருந்து கொண்டு வருவோரிடம் புலிகள் வரி அறவிடுவதே புதிய விலையேற்றத்திற்கு காரணமாகும். விறகு, மரம், மணல், செங்கல், கருங்கல், மாடு, நெல் என்பனவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. மாடு விற்பனை செய்யும் பொது மக்கள் அவற்றை நேரடியாக வேறுயாருக்கும் விற்காமல் தமக்கே விற்க வேண்டுமென்று புலிகள் கட்டுப்பாடு விதித்துள்ளனராம். மாடு தேவையானவர்கள் தற்சமயம் புலிகளிடமிருந்து வாங்க வேண்டியுள்ளதால் விலை அதிகரித்துள்ளது. இதனால் இங்கு இறைச்சிக் கடைக்காரர்களும் 60/- ரூபா விற்ற ஒரு கிலோ இறைச்சியின் விலையை 80/- ரூபாவாக உடனடியாக அதிகரித்துள்ளதாக இறைச்சிக் கடைக்காரர்கள் தெரிவிக்கிறார்கள்.

இப் புதிய விலையேற்றத்திற்கு பிரதேச சபையின் எந்த அங்கீகாரமுமில்லை.

### மூடப்பட்டுள்ள வீதி

(ஏறாவூர் நிருபர்)

**ஏ**றாவூர்-கொழும்பு பிரதான வீதிப் போக்கு வரத்து தற்சமயம் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைத் தவிர்த்து புன்னைக்குடா வீதி, புகையிரத நிலைய வீதி, காளி கோயில் வீதி, பிரதான வீதி என்பவற்றினூடாக திருப்பி விடப்படுகின்றன. பொலிஸ் நிலையம் இருக்கும் 200 யார் தூரத்தைக் கடக்க இப்போது ஒன்றரை மைல் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

## ஆறுமணியுடன் இருளாகும் மட்டுநகர்!

## வீதிகளுக்குக் குறுக்கே கட்டைகள்!

(காத்தான்குடி நிருபர்)

**க**டந்த 5ம் திகதி இடம்பெற்ற புதுக்குடியிருப்பு, டிசம்பர் 23ம் திகதி இடம் பெற்ற சித்தாண்டி ஆகிய விஷேட அதிரடிப் படை, இராணுவ முகாம்கள் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரம் 5:30 மணியுடன் வெறிச்சோடி விடுகிறது.

நகரின் பலபாகங்களிலும் தொடர்ச்சியாக படை, பொலிஸ் முகாம்கள் உள்ளதால் அநேகமான இடங்களில் மின்சாரத்திலியங்கும் மின்குமிழ்களை அணைத்தே வைத்துள்ளனர். இதனால் அநேகமான பிரதான பாதைகள் இருளடைந்தே காணப்படுகின்றன.

மட்டு- திருமலைவீதி 6.00 மணியுடன் முற்றாக மக்கள் நடமாட்டத்திற்குத் தடை செய்யப்பட்டுவிடுகிறது. விஜயாதியேட்டர் வீதியால் வந்து, புகையிரதநிலைய வீதியினாலேயே கல்லடி வீதிக்கு வரவேண்டும்.

கல்லடி வீதியில் பிரதான பொலிஸ் சோதனைமுகாமிற்கு 100 மீட்டர் வரையான தூரத்தில் 6.00 மணியுடன் பென்னம் பெரிய பனை மரங்கள் இரண்டை வீதிக்குக் குறுக்கே படையினர் போட்டுவிடுகின்றனர்.

மட்டு, வைத்தியசாலை போன்ற முக்கிய தேவைகளின் நிமித்தம் 6.00 மணிக்குப் பின்னர் பயந்து பயந்து வரும் பொதுசனங்கள் மோட்டார்சைக்கிள்களையும், வாகனங்களையும் அதில் முட்டிக் கொண்டு நிற்கின்றனர். காரணம் அப்பகுதியால் வாகனங்கள் 'லைட்' போட்டு வரமுடியாது.

இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

## புலிகள் காணி பகிர்ந்தளிப்பு

**யா**ழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப் பகுதிக்கு சென்றுள்ள மக்களுக்கு புலிகள் அமைப்பினர் காணிகளைப் பகிர்ந்து கொடுத்து வருகின்றனர்.

இதுவரை பத்தாயிரம் குடும்பங்களுக்கு முப்பதாயிரம் ஏக்கர் காணி பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி நகர்ப்பகுதி இடம் பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகிறது. வீதியோரங்களில் துண்டுகளை விரித்துப் போட்டு பெருவாரியான மக்கள் தூங்குகின்றனர்.

பாணுக்கு கியூ, பவுண் விக்கவும் கியூ. என்ற நிலைதான் எங்கும் காணப்படுகிறது. இடம்பெயர்ந்த மக்கள் பலர் தம்மோடு கொண்டு வந்த கோழிகள், கால்நடைகள் என்பவற்றை இறைச்சியாக்கி உணவுத் தேவைக்கு பயன்படுத்துகின்றனர். வேறுபலர் கால்நடைகளை விற்று பணம் பெறுகின்றனர்.

இறைச்சி வகைகளை விட மீன் விலை கட்டுப்பாட்டில் இருக்கிறது. மீன் விலையை ஒரு வரையறைக்கு மேல் உயர்த்தக் கூடாது என்று புலிகள் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

## திருமலையில் மரண தண்டனை

திருக்கோணமலையில் ஆசிர் தம்பிராசா என்பவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாகப் புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

மல்லிகைத்தீவைச் சேர்ந்த ஆசிர் தம்பிராசா படையினருடன் சேர்ந்து செயற்பட்டார். காட்டிக் கொடுப்புக்களிலும் ஈடுபட்டார். அதனால் மரணதண்டனை விதிக்கப்பட்டது என்று புலிகள் கூறியுள்ளனர்.

## புலிகளின் விதிகளில் மாற்றமில்லை

## விதி தொடர்பாக படையினருக்கு தெளிவில்லை

தென்னிலங்கையில் உள்ள தமிழ் மக்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற அரசு முயற்சி செய்வதாக புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா செல்வதற்கு பாஸ் கேட்டுச் செல்லும் மக்களிடமும் புலிகள் அதனைத் தெரிவித்துவருகின்றனர்.

வவுனியா சென்றால் அங்கு முகாமில் வைத்திருந்துவிட்டு, பின்னர் உங்களை யாழ்ப்பாணம் கொண்டு போய் விடுவார்கள் என்றும் புலிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து வவுனியா வருவதற்கான கட்டுப்பாட்டு விதிகளில் பெரிய மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

நவம்பர் மாதம் 21ம் திகதி முதல் பாஸ் வழங்குவதை புலிகள் திடீரென்று நிறுத்தி வைத்திருந்தனர். வவுனியா செல்லும் மக்களை படையினர் விமானம் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லக்கூடும் என்று கருதியே பாஸ் வழங்குவது நிறுத்தப்பட்டது. பின்னர் மீண்டும் டிசம்பர் மாத இறுதியில் முன்னர் போல புலிகளால் பாஸ் வழங்கப்பட்டுவருகிறது. முன்பிருந்த விதிகளின் படியே பாஸ் வழங்கப்பட்டு வருகிறது. வயதுக் கட்டுப்பாடு உடையர்வளுக்கு பாஸ் வழங்குவதில் கடுமையான கட்டுப்பாடுகள் தொடர்ந்து அமுலில் உள்ளன.

இதேவேளையில் வவுனியா வரும் மக்கள் மீது மீண்டும் பாதுகாப்புக் காரணங்கள் கூறப்பட்டு கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

வவுனியா வரும் மக்கள் தொடர்பாக எவ்வாறான விதிகளை அனுசரிப்பது என்பது பற்றி பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிசார் மத்தியில் குழப்பம் நிலவுகிறது. இதனால் சாதாரண மக்களே சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாக வவுனியா வரும் வடபகுதி மக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

## மலையக மக்கள் முன்னணி

## இ.தொ.கா. மோதல்

இவ்வருடத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் சுயேட்சைக் குழுக்களை நிறுத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் திட்டமிடுவதாக மலையக மக்கள் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சப்பிரகமுவ பிரதேச சபைக்கும், நுவரெலியா பிரதேச சபைக்கும் இரு சுயேட்சைக் குழுக்களை நிறுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதன் மூலம் மலையக மக்கள் முன்னணிக்கு கிடைக்கும் வாக்குகளை சிதறடிக்க இ.தொ.கா. திட்டமிடுகிறது என்று மலையக முன்னணி வட்டாரங்கள் கூறுகின்றன.

மலையக மக்கள் முன்னணியில் இருந்து தற்போது ஒதுங்கியிருப்பவர்களைக் கொண்டு அந்தச் சுயேட்சைக் குழுக்கள் உருவாக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களில் இ.தொ.காவும் மலையக மக்கள் முன்னணியும் மோதிக்கொள்ள இருக்கின்றன. இரு அமைப்புக்களின் தலைவர்களும் ஆளும் தரப்பில் இருப்பதோடு அமைச்சர்களாகவும் இருக்கின்றனர்.

பொது ஜன முன்னணித் தலைவர்கள் மலையகத்தில் யாருக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வது என்பதில் சங்கடங்கள் ஏற்படலாம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# மந்தநிலையில் வடக்கு ~கிழக்கு மாகாண நிர்வாகம்

# பதவி உயர்வுக்குப் பதிலாக பதவி இறக்கம்

(திருமலை நிருபர்)

வழக்கமாக திணைக்கள ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகளே கிடைப்பதுண்டு. ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண சபை ஊழியர்களைப் பொறுத்த வரையில் நேர்மாறான அனுபவங்கள் கிடைப்பது வழக்கமாகி விட்டது.

இந்தப் பட்டியலில் தற்போது தட்டெழுத்தாளர்கள் சேர்க்கப்பட்டு பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அரச வர்த்தமானி விதிகளுக்கேற்ப முறைப்படி தமது திணைக்களங்களூடாகவே பரீட்சைக்கு விண்ணப்பித்து சித்தியெய்தியதன் பலனாக மாகாணத் தட்டெழுத்தாளர் சேவையின் இரண்டாம் வகுப்பு 'அ' பிரிவுக்கு 22.01.1994 அன்று தொடக்கம் நியமனம் பெற்றவர்கள் 18.11.95ந் திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பழைய பதவிக்கே செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி சார்பாக பிரதிப் பிரதம செயலாளர் க.பரமலிங்கத்தால் ஒப்பமிட்டு வழங்கப்பட்டுள்ள இக் கடிதத்தின் மூலம் அவர்களது பதவி உயர்வுகள் ரத்துச் செய்யப் படுவதோடு பதவி உயர்வு காரணமாக வழங்கப்பட்டிருந்த கூடுதல் சம்பளம் அவர்களது வேதனத்திலும் மாதாந்தம் கழிக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அடிப்படை உரிமையை மீறும் இந்தச் செயலால் ஆறு தட்டெழுத்தாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

"எங்களில் எந்தவிதமான தவறுகளும் கிடையாது. நாங்கள் சரியாகத்தான் செயல் பட்டிருக்கிறோம். எமது விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களூடாகவே அனுப்பி வைக்கப்பட்டன. அவை நன்றாகப் பரிசீலிக்கப்பட்டே ஏற்கப்பட்டன. அதிகாரிகளினதும் செயலாளர்களினதும் திறமைக் குறைவுக்காக நாங்கள் பலியாவது அடாத்தான செயலாகும்" என பாதிக்கப்பட்ட ஊழியர்கள் முரசுக்குத் தெரிவித்தனர்.

மாகாணசபை விருத்தியடையாத ஒரு நிர்வாகத்தைக் கொண்டு இயக்குவதாலேயே இச்சிக்கல்கள் எழுகின்றன. இதற்கு முன்னரும் இவ்வாறான பதவி இறக்கங்கள் நடைபெற்றுள்ளன. இந்தத் தவறுகளுக்கு கட்புலன் செவிப்புலன் குறைந்த வயது போன உத்தியோகத்தர்களும் ஒரு காரணம் என்கிறார் மாகாணசபையைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர்.

## காட்டூண் மூலை




அமைச்சர் தொண்டமானுக்கும் கொழும்பு சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் அடிக்கடி மோதல் நடப்பது வாடிக்கை. சமீபத்தில் 'சண்டே லீடர்' பத்திரிகை வெளியிட்டுள்ள காட்டூண் இது. (தொண்டாமீது கடும் கோபத்தில் இருக்கிறார்களாக்கும்)

# ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியும் பழைய மாணவர்களும்

இரண்டு வருட இழுபறி நிலையிலிருந்த பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி சென்ற மாதத்திலிருந்து மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. கடந்த 92 ஆம் 94 ஆம் கல்வியாண்டில் 50 சதவீதமாக இருந்த மலையக தமிழ் மாணவர்களின் தொகை, 95 ஆம் 96ம் கல்வியாண்டிற்கு 75 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

இந்த 25 சதவீத உயர்வுக்கு காரணம் இக்கல்லூரியிலிருந்து 92ஆம் 94 ஆம் ஆண்டில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாட நெறியை முடித்துக் கொண்டு வெளிவந்த ஆசிரியர்களின் போராட்டமும் மலையகத் தொழிற்சங்க- அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகளின் பிரச்சாரமுமாகும்.

இவ்வேளையில் இக்கல்லூரிக்கு புதிதாக ஒரு தமிழ் பீடாதிபதியும் நியமிக்கப் பட்டுள்ளார். இவரிடம் இக்கல்லூரியின் பழைய ஆசிரிய மாணவர்களால், இவ்வாண்டில் புதிதாக வந்த ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு வரவேற்பு நிகழ்ச்சியொன்றை நடாத்துவதற்கு அனுமதி கேட்டபோது மறுத் துள்ளார். மற்றும் இக்கல்லூரியில் புதிய ஆசிரிய-மாணவரிடத்தில் பழைய ஆசிரிய மாணவர்கள் பற்றி ஒரு பிழையான அபிப்பிராயத்தை ஏற்படுத்தப் பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

எனவே, கல்வியியற் கல்லூரி என்பது பல்கலைக்கழகமோ அல்லது பாடசாலையோ அல்ல- பிரச்சனைகள் வருவதற்கு! இங்கு கற்பவர்கள் எதிர்கால ஆசிரியர்கள். ஆகவே, பழைய - புதிய ஆசிரிய மாணவர்களிடத்தே ஒரு சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலமே, எதிர்காலத்தில் மலையக சமுதாயத்துக்கு இக்கல்லூரியிலிருந்து சிறந்த பயனை வழங்கலாம். இதற்கு புதிய பீடாதிபதி அவர்கள் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பாரா? என்று இக்கல்லூரியின் பழைய ஆசிரிய - மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்!

**சோ.ஸ்ரீதரன், போகவந்தலாவை.**

# அலட்சியப் போக்கால் மாணவர்கள் அவதி

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் அல்முனீறா பாலிகா மகா வித்தியாலத்தில் இம்முறை க.பொ.த.(சாதா) பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகள் எவருக்கும் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் சென்ற நவம்பர் மாதம் 1ம் வாரத்தில் தான் இப்பாடசாலையிலிருந்து ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் சரியாகப் பூரணப்படுத்தப்படாததாலும், உரிய ஆவணங்கள் (நிழற் படங்கள்கூட) இணைக்கப்படாததாலும் அவை திணைக்களத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டன.

பரீட்சை எழுதப்போகும் கடைசிநேரத்தில் ஒருமாணவிக்குக் கூட தேசிய அடையாள அட்டை கிடைக்காததால் அவசர அவசரமாக ஒவ்வொரு மாணவியும் ரூபா 80/- விகிதம் செலுத்தி நிழற்படமெடுத்து அதிபரின் உறுதிப்படுத்தலுடனேயே பரீட்சை எழுதவேண்டியிருந்தது.

அடையாள அட்டைக்காக ஒவ்வொரு மாணவியும் ரூபா 165/- ஐச் செலவு செய்துள்ளதாக அறியமுடிகிறது. அஞ்சல் அடையாள அட்டைகூட இம்மாணவிகளுக்கு உரிய வேளையில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

குறித்த வேளையில் விண்ணப்பங்களை அனுப்பாததும், விண்ணப்பங்களை சரியாகப் பூர்த்தி செய்து தேவையான பத்திரங்களை இணைத்து அனுப்பாததும் அதிபர்-ஆசிரியர் போன்றோரின் அசிரத்தையான செயலென்றும் இது முறைகேடானது என்றும் பெற்றோர் விசனப்படுகிறார்கள்.

# கவனிக்க மறுக்கும் மாகாண கல்வி அமைச்சு

## கட்டிட நிர்மாணப் பணிகள் தாமதம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் பாடசாலை கட்டிடநிர்மாணப்பணிகளை தொடர முடியாதவாறு கட்டிட ஒப்பந்த தாரர்கள் சிரமப்படுகின்றனர்.

கட்டிட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்ததாரர்களுக்குரிய பகுதி கொடுப்பனவுகளையும், பூர்த்தி செய்தோருக்குரிய கொடுப்பனவுகளையும் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சு வழங்காததால் பலத்த நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறார்கள்.

ஐ.எஸ்.டி. திட்டத்தின்கீழான நிர்மாணப் பணிகளை மேற்கொள்வோருக்கு 120 இலட்சம் ரூபாவும், உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நிர்மாணப் பணிகளுக்குரிய 75 இலட்சம் ரூபா வும், தேசிய பாடசாலை நிர்மாணப்பணிகளுக்கான 16 இலட்சம் ரூபாவும் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தினால் ஒப்பந்த தாரர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டக் கல்வித்திணைக்களம் மொத்தமாக 211 இலட்சம் ரூபாவை வழங்க வேண்டியுள்ளது. விரைவில் இதனை வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால் பாடசாலை கட்டிட நிர்மாணப்பணிகளில் ஈடுபடாது பகிஷ்கரிக்கப்போவதாக கட்டிட நிர்மாணிப்பாளர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# பெருகிவரும் நுளம்புகள்

அண்மையில் புத்தளம் மாவட்டத்தில் கடுமையாகப் பெய்த அடை மழையின் காரணமாக வீடுகளில் இருக்கவோ படுக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நுளம்புத் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்தமைதான் இதற்குக் காரணமாகும்.

இத் தொல்லையினால் நோய்கள் ஏற்படும் என்று கொத்தாந்தீவு, பெருக்கு வெட்டான், சமீரகம், கட்டைக்காடு, கணமூலை, கடையாமோட்டை ,விருதோடை, புழுதிவயல் ஆகிய கிராம மக்கள் பயப்படுகிறார்கள்.

ஆகவே இந்நுளம்புத் தொல்லையை தீர்ப்பதற்கு சுகாதார அதிகாரிகள் கூடிய விரைவில் கவனம் எடுக்கும் படி தினமுரசு மூலமாகவும் மக்களின் சார்பாகவும் வேண்டுகிறேன்.

**எம். ஏ.ஏ. யுனூத், கொத்தாந்தீவு.**


## தாவர வளர்ப்பு பயிற்சி

சகல காய்கறிகள், பழவகைகள், பூஞ்செடிகளையும்

✧ வளர்த்தல்
✧ பசளையிடுதல்
✧ அலங்கரித்தல்
✧ பராமரித்தல்

ஆகியன பற்றிய விரிவான விளக்க வகுப்புகள்

| கண்டியில் | கம்பளையில் |
| --- | --- |
| ஜன. 2ல் செவ்வாய் | ஜன. 4ல் வியாழன் |
| மு.ப. 9 மணிக்கு | மு.ப. 9 மணிக்கு |
| NIC, 127,KOTUGODELLA, ST. | ETI, 100, KANDY RD. (NEAR ZAHIRA COLLEGE) |


# தரிப்பிடமின்றித் தவிப்பு

மட்டக்களப்பு பஸ் டிப்போவிற்கு முன்பாக இரு பஸ் தரிப்பிடங்கள் உள்ளன. இவ்விடத்திலிருந்து நாளாந்தம் பெருந்தொகையான ஆசிரியர்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களும் பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்ய காத்திருப்பது யாவரும் அறிவர். ஆனால் இவ்விடத்தில் பயணிகள் காத்திருக்க ஒரு தரிப்பிடக் கட்டிடமேனும் கிடையாது. இதனால் கொட்டும் மழையிலும் கொழுத்தும் வெயிலிலும் பயணிகள் காத்துக்கிடப்பது பரிதாபகரமாக உள்ளது. ஒதுங்குவதற்கு ஒரு கட்டிடமோ மரநிழலோ இன்றி கஸ்டப்படுவது அன்றாடக் காட்சியாக உள்ளது. இவ்வாறானவர்களின் துயரினைப் போக்க அவ்விடங்களில் பஸ் தரிப்பிட நிலையங்களை அமைக்க மட்டக்களப்பு மாநகரசபையோ மட்டக்களப்பு பஸ் டிப்போ அதிகாரிகளோ நடவடிக்கை எடுக்க முன்வந்தால் மிகப் பெரிய புண்ணியமாய் இருக்கும் என சகலரும் அங்கலாய்க்கின்றனர்.

**வீ.சதீஷ்பிரகாஷ், கிழக்குப் பல்கலைக்கழகம்.**

# பணிப்பாளரின் விளக்கம்

டிச 17 - 23, 1995 தினமுரசு வாரமலரில் வெளிவந்த, "திருத்த வேலையில் மோசடி", தலைப்பைக் கொண்ட செய்தி தொடர்பாக நாம் கீழ்க் காணும் தகவலை தங்கள் கவனத்திற்கு அறியத்தர விரும்புகிறோம்.

மட்டக்களப்பு கெயார் ஸ்தாபனம் 1994ல், 11 சிறு நீர்ப்பாசன குளங்களை திருத்தியமைத்தது. இவ் வேலையை கெயார் கமநல சேவை திணைக்கள அனுசரணையுடன் செய்தது. இதற்கான சகல ஆவணங்களும் எமது காரியாலயத்தில் உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

இப்படிக்கு உண்மையுள்ள,

பிராந்தியப் பணிப்பாளர்., கெயார்-கிழக்கு, மட்டக்களப்பு.


## விளம்பரப் பகுதி

கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள், நூல்கள் என்பவற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல: T95, மே/பா:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல.1772, கொழும்பு.

இல:511 ,தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளையைச் சேர்ந்த தருமினி நாகலிங்கம் என்பவரது அடையாளஅட்டை (518210211V) கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

— புறூஃப் ரீடர் தேவை —

பதிப்பகம் ஒன்றிற்கு தமிழில் நல்லறிவுள்ள அனுபவமிக்க ஒப்பு நோக்காளர் (புறூஃப் ரீடர்) தேவை. தொடர்பு கொள்ளவும்:

மே/பா. தினமுரசு வாரமலர், த.பெ.இல:1772, கொழும்பு.



### அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்தீரிக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
**P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD**
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

## தூய தோமஸ் கல்லூரி, குருத்தலாவ

# புதிய ஆரம்ப / உயர்தர தமிழ் வகுப்புகள்


### 1996 ஆம் ஆண்டிற்கான,

1. ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை
2. ஆண்டு 12.இற்கான வர்த்தகம்/விஞ்ஞானப் பிரிவுகள்.
3. ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரை (சில வெற்றிடங்கள்)


ஆகிய தமிழ் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உணவு மற்றும் தங்குமிட வசதிகள் கல்லூரியில் வழங்கப்படும்.


விண்ணப்பங்கள் 31 மார்கழி 1995 இற்கு முன் கிடைக்கத் தக்கவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்,
தூய தோமஸ் கல்லூரி,
குருத்தலாவ.



சகலவிதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்





SAI SANGEETHA
L. G .123, PEOPLES PARK, COLOMBO 11.
TEL: 445102 FAX: 440925

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சமரின் முடிவும் புதிய சவால்களும்

கூட்டாகச் சென்று தமிழ் கட்சிகள் பல ஜனாதிபதியைச் சந்தித்தது பத்திரிகைச் செய்தி.

கூட்டுச் சந்திப்பில் ஒரு சம்பிரதாயக் கோரிக்கை மாதிரி போர் நிறுத்தம் கேட்டாலும் கூட, சில தமிழ் கட்சிகளின் நோக்கமெல்லாம் வேறாக இருந்தது.

சந்திப்பு முடிந்து ஜனாதிபதி இருக்கையைவிட்டு எழுந்ததும் ஒரு சின்னக் கியூ வரிசை நின்று கொண்டிருந்தது.

ஜனாதிபதியை தனித் தனியாகச் சந்தித்து பேசுவதற்கு அனுமதி கேட்கத்தான் அந்த காத்திருப்பு.

அரசியல் தீர்வு திட்டம் குறித்து விவாதிக்க ஜனாதிபதியைச் சந்திக்க அனுமதி கேட்டும் இதுவரை கிடைக்கவில்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது பத்திரிகையில் வருத்தப்பட்டிருந்தது.

நேரில் சந்தித்து அனுமதி கேட்பதற்காக ஒரு வாய்ப்பாக கூட்டுச் சந்திப்பை பயன்படுத்திக் கொண்டது.

கூட்டணி, புளொட், இ.தொ.கா. ஆகிய கட்சிகளும் தனியான சந்திப்புக்கு அனுமதி பெற்றுக் கொண்டன.

அனுமதி கிடைத்தது. கடந்தவாரம் தனித் தனியாக நடந்த சந்திப்பில் மூன்று தமிழ் கட்சிகள் கலந்து கொண்டன.

இ.தொ.கா. தலைவர் தொண்டமான் காலையில் சென்றபோது, "உங்களைச் சந்திக்க ஒதுக்கப்பட்ட நேரம் மாலையில் தான்" என்று சொல்லி திருப்பியனுப்பி விட்டார்கள்.

மாலையில் சென்றபோதும் ஜனாதிபதிக்கு நேரம் வாய்க்காமையால் சந்திப்பு நடக்கவில்லை. ஏமாற்றத்தோடு திரும்பியது இ.தொ.கா. தூதுக்குழு.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது சந்திப்பில் ஏனைய தமிழ் கட்சிகள்மீது புகார் பட்டியல் சொல்லியது. குறிப்பாக புளொட் அமைப்புமீது குற்றச்சாட்டு கூறப்பட்டது.

அதன்பின்னர் ஜனாதிபதியை புளொட் தூதுக்குழு சந்தித்தது. தம்மீதான புகாருக்கு விளக்கம் சொன்னார்கள்.

கூட்டுச் சந்திப்பு முடிந்து ஒருவாரம் கூட செல்லவில்லை. அதற்குள் தமிழ் கட்சிகளின் ஒற்றுமையின் இலட்சணத்தை ஜனாதிபதி புரிந்துகொள்ள நல்லதொரு வாய்ப்பு வழங்கிவிட்டார்கள்.

கூட்டணி தனது சந்திப்பில் அரசியல் தீர்வு யோசனைகளை தை மாதத்தில் முன்வைத்தால் நன்றாக இருக்கும் என்று நல்லாலோசனை சொன்னார்களாம்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று ஜனாதிபதிக்கு சகுனம் நல்லாயிருக்கக்வேண்டிய அக்கறையை வெளிப்படுத்தி தமது உறவை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

வெளியே வந்து ஜனவரியில் தீர்வு யோசனை என்று ஜனாதிபதிதான் சொன்னார் என்பது போல அறிக்கை விட்டார்கள்.

தனித் தனிச் சந்திப்பில் தமிழ் கட்சிகள் போர் நிறுத்தம் பற்றி மூச்சே விடவில்லை.

கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகளுக்குள் யாழ்ப்பாணம் செல்வதில் லேசாக ஒரு போட்டி நிலவுகிறது.

கூட்டணி இவ்வாறான சந்தர்ப்பங்களில் 'ரிஸ்க்' எடுக்க விரும்புவதில்லை.

புலிகளால் பிரச்சனை ஏற்படமுடியாத உத்தரவாதம் இருந்தால் மட்டுமே கூட்டணி யாழ்ப்பாணத்திற்கு செல்லும். அதுவரை யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதை தமிழ் பத்திரிகைகளுக்கான அறிக்கைகளில் கூட்டணி பலமாக கண்டித்துக் கொண்டிருக்கும்.

●—●

யாழ்ப்பாணத்தில் புலிகள் பாரிய தாக்குதல்கள் எதிலும் இதுவரை ஈடுபடவில்லை.

அரசாங்கத்திற்கும், படைத்தரப்புக்கும் மனதுக்குள் ஒரு கேள்வி குடைந்து கொண்டு இருக்கத்தான் செய்யும்.

இது புயலுக்கு முந்தைய அமைதியா என்பதுதான் அந்தக் கேள்வியாகும்.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின்னர் அரசாங்கத்திற்கும், படைத்தரப்புக்கும் இரண்டு முக்கிய சவால்கள் முன் நிற்கின்றன.

ஒன்று: இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவது.

இரண்டு: புலிகளின் எதிர்காலக் கெரில்லாத் தாக்குதல்கள்.

யுத்தத்தில் மூன்று பிரதான கட்டங்கள் உள்ளன. 1. தற்காப்பு யுத்தம். 2. தாக்குதல் யுத்தம். 3. அழித்தொழிப்பு யுத்தம்.

மூன்றும் ஒன்றோடொன்று தொடர்பு உடையவையாகும்.

வடபுலப் போர்முனையில் இரு தரப்புக்களும் தற்காப்பு யுத்தம், தாக்குதல் யுத்தம் என்ற கட்டங்களுக்குள்தான் மாறி மாறி நின்று கொண்டிருக்கின்றன.

இரு தரப்பில் ஏதாவது ஒரு தரப்பு அழித்தொழிப்பு யுத்தத்தில் கணிசமான வெற்றிபெறாதவரை தற்காப்பு யுத்தம், தாக்குதல் யுத்தம் என்ற இரு கட்டங்களும் இரு தரப்புக்கள் இடையேயும் மாறிக் கொண்டே இருக்கும்.

அழித்தொழிப்பு யுத்தம் இருவகைப்படும். ஒன்று: எதிரியின் ஆட்பலத்தை அழிப்பது. இரண்டாவது: எதிரி அணிகளது எதிர்க்கும் ஆற்றலை அழிப்பது.

விநியோகப் பாதைகளை தடை செய்து முற்றுகைக்குள் வைத்திருப்பது மூலம் எதிர்க்கும் ஆற்றலை இல்லாதொழிக்கலாம்.

தற்போதைய நிலையில் இரு தரப்புக்குமே அழித்தொழிப்பு யுத்தத்தில் கணிசமான வெற்றிகளைப் பெறுவதற்கு முடியாத சூழல்தான் இருக்கிறது.

மூன்றாம் கட்ட ஈழப் போரில்-வடபுலப் போர் முனையில் ஆட்பல இழப்பு படைத் தரப்பைவிட புலிகளின் தரப்புக்குத்தான் அதிகம். (இன்று வரையான நிலவரம்)

மணலாற்று முகாம் தாக்குதலும், இடி மின்னலுக்கான பதிலடியிலும் ஒரேயடியாக முன்னூறு பேரை புலிகள் இழந்தமை அவர்களுக்கு பாரிய நஷ்டம்.

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் இன்றுவரை வடபுலப் போர் முனையில் குறைந்தது 500 புலிகள் வரை பலியாகி இருக்கிறார்கள்.

வடபகுதியில் நன்கு பயிற்றப்பட்ட புலிகளின் எண்ணிக்கை ஐந்தாயிரம் பேர்வரை தான்.

யாழ்-குடாநாட்டில் மட்டும் என்று எடுத்துக்கொண்டால் மூவாயிரம் பேர் இருப்பார்கள்.

திரும்பிய பக்கமெல்லாம் புலிகளின் அலுவலகங்களும், நிர்வாகப் பிரிவுகளும் இருந்தமையால் புலிகளின் எண்ணிக்கை உண்மை நிலையை விட பல மடங்கு அதிகமாகத் தெரிந்தது.

ஆனால், புலிகளின் காவல்துறை உட்பட நிர்வாகப் பிரிவுகளில் இருந்தவர்கள் போருக்குக்காகப் பயிற்றப்பட்ட நிலையில் இருக்கவில்லை.

எனவே-வடபுலத்தில் புலிகளது எண்ணிக்கை ஐயாயிரம் பேர் என்றால் 500 பேரை இழந்தது 10 வீதமான வீழ்ச்சிதான்.

ஆனால், ஒரு கெரில்லா இயக்கத்திற்கு 5000 பேர் என்பது பெரிய பலம்.

நேரடிச் சமர்களுக்கு அந்த எண்ணிக்கை போதாதே தவிர, 50 ஆயிரம் பேர் கொண்ட படையைக்கூட தொடர்ந்து தொல்லைப் படுத்திக்கொண்டிருக்க 5 ஆயிரம் கெரில்லாக்கள் தாராளமாகப் போதும்.

அதுதவிர தற்போதும் புலிகளுக்கு ஆட்கள் சேர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

முன்புபோல கணிசமான அளவில் உறுப்பினர்கள் திரட்டல் அமையவில்லை. வெற்றி குறித்து ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனங்களும், சலிப்பும் 'புதிய உறுப்பினர்கள் புலிகளை நோக்கி பெரியளவில் செல்வதைத் தடுத்துள்ளன.

ஆனாலும், ஒரு குறிப்பிட்ட அளவில் உறுப்பினர்கள் சேர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஒரு அரசாங்க அதிகாரியின் மகள் கிளிநொச்சியில் வைத்து புலிகளோடு சேர்ந்து விட்டாள். "வீட்டுக்குள் வைத்து பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளை. பக்குவமாக கிளிநொச்சிக்கு கொண்டுவந்து சேர்த்தோம். விடிந்தபோது ஆளைக் காணவில்லை" என்று அழாக்குறையாகச் சொல்கிறார் அந்த அதிகாரி.

அதேவேளையில் புலிகளின் கண்களில் படாமல் ஒளித்துக்கொள்ளும் இளம் வயதினரும் இருக்கவே செய்கிறார்கள்.

தொழில் நுட்பக் கல்லூரியில் படித்த ஒரு மாணவர் கிளிநொச்சிக்கு வந்தபின்னர் தான் எங்கு படித்தேன் என்பதையே சொல்லத் தயங்குகிறார். தெரிந்தால் புலிகள் வந்து அழைத்துச் சென்று வேலை தந்து விடுவார்கள் என்று பயப்படுகிறார்.

புலிகளுக்குள்ள ஆட்பற்றாக்குறைதான் வடபுலத்தில் படைத்தரப்பின் பாரிய நடவடிக்கைக்கு சாதகமான அம்சம்.

அதே வேளையில் படைத்தரப்பின் எதிர்கால நடவடிக்கைகளும், அரசாங்கத்தின் போக்கும் வெற்றிப் பெருமிதத்தில் வரம்பு மீறுமானால், அதுவே புலிகளுக்கு சாதகமாக மாறும்.

இன்று ஒளித்தும், மறைந்தும் புலிகளுக்கு போக்குக் காட்டும் இளம் வயதினர் புலிகளை நோக்கித் தாமாகவே செல்லத் தொடங்குவார்கள். யாழ்ப்பாணத்தை கைப்பற்றியுள்ளது மூலம் ஒரு சமரில் அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது. பல சமர்களைக் கொண்டதே ஒரு யுத்தம்.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசாங்கம் வெற்றி பெற்றுவிட்டதாக சொல்ல முடியாது.

அதே சமயத்தில், ஒரு பாரிய யுத்தத்திற்கு தேவையான மனோபலத்தை தனது படைகளுக்கு யாழ்ப்பாணச் சமர் மூலம் அரசாங்கம்

**நாரதர்**

பெற்றுக் கொடுத்துள்ளது.

இது வரைகால வடக்கு-கிழக்கு யுத்த வரலாற்றில் படைகளுக்கு முதல் முறையாக ஏற்பட்டுள்ள மனோபலம் இதுதான். ஒரு வாகனத்திற்கு எரிபொருள் எவ்வளவு முக்கியமோ அது போன்றதே யுத்தத்தில் ஈடுபடும் தரப்புக்கு மனோபலமும்.

ஆக, வடபுலத்தில் படைத்தரப்புக்கு போதியளவு எரிபொருள் கிடைத்துவிட்டது. இனி வாகனம் சென்று கொண்டேயிருக்கும்.

புலிகளின் பாதைத்தடைகளைப் பொறுத்தே வாகனம் எந்தளவு தூரம் செல்ல முடியும் என்பது தீர்மானிக்கப்படப் போகிறது.

ஒரு விடயத்தை நன்கு கவனிக்க முடிகிறது. எரிபொருள் இருக்கிறது என்பதற்காக வாகனத்தை பாதையறியாமல் செலுத்தக்கூடாது என்பதில் படைத்தலைமை உஷாராக இருக்கிறது.

அதனால்தான் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அவசரப்படாத தன்மை காணப்பட்டது.

சமீபத்தில் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து படையினர் ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டனர். புலிகளும் பதிலடி நடத்தியதோடு அந்த நடவடிக்கை நின்று போனது.

ஆனால், ஆழமறியக் காலை விட்டுப் பார்க்கும் ஒரு முயற்சியாகவும் அது இருந்திருக்கலாம். புலிகளது எதிர்ப்பு வேகத்தை கணிப்பிட்டு, ஆனையிறவில் இருந்து பாரிய நடவடிக்கை ஒன்றை படையினர் மேற்கொள்ளக் கூடும்.

1993 ஆண்டில் ஆனையிறவில் இருந்து கிளாலிவரை படையினர் சென்று திரும்பினார்கள். 'யாழ் தேவி ஒப்பரேசன்' என்று அதற்கு பெயரிடப்பட்டிருந்தது.

அதே பாதையில் புலிகள் எதிர்பார்த்திருக்கலாம் என்று கருதி; வேறு பாதை வழியாக படைத் தரப்பு முன்செல்லக் கூடும்.

அல்லது வேறுபாதையால் போக்குக் காட்டிவிட்டு கிளாலி நோக்கி படைத்தரப்பு செல்லக் கூடும்.



எப்படியானாலும் கிளாலியை தமது பிடியில் கொண்டு வருவதன் மூலமாக மட்டுமே யாழ் குடாநாட்டு முற்றுகையை படைத்தரப்பு பூரணப்படுத்த இயலும்.

அவ்வாறு ஏற்படுமானால் வடபுலப் போர் முனையில் புலிகளின் தரப்பு கணிசமான பின்னடைவை எதிர்நோக்கியே தீர வேண்டியிருக்கும்.

அதேவேளை முழுக் குடாநாட்டிலும் 24 மணிநேரமும் கண்ணும் கருத்துமாக இருப்பது படைத்தரப்புக்கு தலையிடியான விஷயம்.

பரந்த நிலப்பரப்பில் அங்குலத்திற்கு அங்குலம் படைகளை நிறுத்திவைத்திருப்பதும் இயலாத ஒன்று.

சமீபத்திய வடபுலப் போர்முனையில் குறைந்தது 25 ஆயிரம் படையினர் இறக்கப்பட்டதாக கணிப்பிடலாம். 40 ஆயிரம் படைகள் ஈடுபடுத்தப்பட்டதாகப் புலிகள் கூறுகிறார்கள்.

ஒட்டு மொத்தமாக யாழ் குடாநாட்டில் 40 ஆயிரம் படையினர் நிலைகொண்டிருந்தால்கூட, புலிகளது கெரில்லா அணிகளால் ஊடுருவித் தாக்க முடியும்.

ஒரு இலட்சம் இந்தியப் படைகள் வடக்கு, கிழக்கில் தரித்து நின்றபோதும் புலிகளால் ஊடுருவும் தாக்குதல்களை நடந்த முடிந்தது.

ஆனால் ஒரு வித்தியாசம். அப்போது மக்களோடு மக்களாக புலிகளின் அணிகள் மறைந்திருந்தன. இப்போது மக்களே இல்லாத சூழ்நிலையில் ஊடுருவும் நடவடிக்கைகள் சற்றுச் சிரமமாக இருக்கும்.

ஆனால், படையினரை நோக்கி ஷெல் தாக்குதல்களை புலிகள் நடத்தலாம். மக்கள் இல்லாதது வசதியாக இருக்கும்.

படையினர் பதிலடியாக ஷெல்லடி நடத்தினால், அது மக்களுள்ள பகுதியில் விழுந்தால் பாதிப்பு புலிகளுக்கு இருக்காது. அதனை தமது அரசியல் பலத்திற்கும், போருக்கான நியாயத்திற்கும் புலிகளால் பயன்படுத்த முடியுமானதாக இருக்கும்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து படையினர் ஏவிய ஷெல்கள் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் சரமாரியாக விழுந்து வெடித்தன.

இவ்வாறன தாக்குதல்களை படைத் தரப்பு கைவிடமுடியாத நிலையில் இருக்கும் வரை, அரசாங்கம் வெளியிடும் நம்பிக்கையூட்டும் கருத்துக்கள் அங்கு எடுபடாமல் போவதும் சாத்தியம்தான்.

அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் தற்போதைய வெற்றியை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதுதான் பெரிய சவால்.

யாழ்ப்பாணத்தில் போர் ஓயாது. விரைவில் உக்கிரமான தாக்குதல் நடத்தப்படும் என்று புலிகள் தெரிவித்திருப்பது தான் அரசுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை.

சவாலையும், எச்சரிக்கையையும் எதிர் கொள்ள வேண்டுமானல் ஜனாதிபதி துணிச்சலாக சில முன் முயற்சிகளை எடுத்தாக வேண்டும்.

அரசியல் தீர்வு யோசனைகளை இந்தா அந்தா என்று தள்ளிப் போட்டுக் கொண்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள் தான் வெளியே ஊகிக்கப்படும்.

ஒன்று: சிங்கள இனவாதிகளிடம் உள்ள பயம், இரண்டாவது: தமிழ் மக்களின் பேரம் பேசும் பலம் வீழ்ச்சியடையும் வரை காத்திருப்பது.

இவ்வாறான கருத்து ஏற்பட ஜனாதிபதி அனுமதிப்பாரேயானால், தமிழ் மக்களின் மனங்களை வெல்வது என்பதில் தோல்வி காத்திருக்கும்.

யாழ்நகர் கைப்பற்றப்பட்டபின்னரும் அரசியல் தீர்வு யோசனைகளை பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் முன்வைக்காமல் அரசு கைகளை கட்டிக் கொண்டிருப்பது ஏற்கெனவே தமிழர் தரப்பில் சந்தேகங்களை விதைக்கத் தொடங்கிவிட்டது.

சமரில் பெற்ற வெற்றியைவிட, இனப்பிரச்சனை தீர்வுக்கான சமரச முயற்சியில் சந்திரிக்கா எதிர்நோக்கும் சவால்தான் பாரியது.

இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளை ஆரம்பிக்கும்போது இனவாதிகளின் தடைகளும், அதற்கு முகம் கொடுத்து அரசு காட்டப்போகும் உறுதியும்தான் தமிழ் மக்களின் நம்பிக்கைகளைத் தீர்மானிக்கப் போகின்றன.

உண்மையில் ஜனாதிபதி வெடிகுண்டின்மீது அமர்ந்திருக்கிறார்.

புலிகளின் கொலைப்பட்டியலில் முதலாம் இடத்திலும் அவர்தான் இருக்கிறார்.

எப்போது சறுக்குவார் என்று எதிர்க்கட்சியால் எந்நேரமும் கவனிக்கப்பட்டுக் கொண்டுருக்கிறார்.

ஜனாதிபதியே கூறுவதுபோல அவரது சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு புறம் புலிகள். மறுபுறம் இனவாதிகள் மற்றும் அரசியல் எதிரிகள்.

அதற்கிடையே சற்று மூச்சுவிடக் கிடைத்துள்ள சந்தர்ப்பம்தான் வடபுலச் சமர் வெற்றி. சவால்களை துணிச்சலாக சந்திக்க முடியாமல் போனால் மீண்டும் மூச்சு முட்டக்கூடும்.

'96 பெப்ரவரி மாத முடிவுக்குள் புலிகளை ஒரு வழி பண்ணிவிடலாம் என்று அரச தரப்பில் ஒரு நம்பிக்கை இருக்கிறது.

யாழ்-குடாநாட்டை கட்டுப்பாட்டில் கொண்டு வருவது மூலம் மட்டும் யுத்தம் முடிவுக்கு வரும் என்று தவறான கணிப்பில் இருந்துதான் அந்த முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

புலிகள் வடபுலப் போரில் பலவீனப்பட்டுள்ளார்கள் என்பது உண்மை. ஆனால் மீண்டும் பலமாகும் சாத்தியங்கள் இல்லையென்று அரச நினைத்துக் கொண்டிருக்க முடியாது.


யுத்தம் நீண்டதாகப் போகிறது என்ற நிலைக்கு முடிவு கட்டும் பொறுப்பு ஜனாதிபதியின் கையில்தான் இருக்கிறது.

அவர் திருப்திப்படுத்த வேண்டியது பேரினவாத தீவிரவாதிகளையல்ல; தமிழ் பேசும் மக்களைத்தான். இருதரப்பையும் ஒரே நேரத்தில் திருப்பதிப்படுத்தும் ஒரு தீர்வு இருக்க முடியுமானால், அது அரைகுறைத் தீர்வு மட்டும்தான்.

அவ்வாறான தீர்வு போர் ஓயாது என்ற புலிகளின் எச்சரிக்கையை மெய்ப்பித்து விடும்.

---

## அதிரடி அய்யாத்துரை



அயலகத்தில் தொப்புத் தொப்பென்று வானிலிருந்து விழுந்தது ரெண்டு எழுத்தாருக்கு வந்த படைக்கலன்கள் என்று சிலர் நினைச்சுப்போட்டினம். அயல்நாட்டிலையும், எங்கடை நாட்டிலையும் எது விழுந்தாலும் உடனடியாக ரெண்டு எழுத்தார் மீதுதான் சந்தேகம் வருகுது பாருங்கோ. அவையும் சில விஷயங்களை மறுக்காமல் இருந்து நமட்டுச் சிரிப்பொன்றை வீசுறதுதான் சஸ்பென்ஸின் வெப்ப நிலையை உயர்த்திப் போடுது. விழுந்தது அயலகத்தில் உள்ள வேறு ஒரு அமைப்புக்காம்.

ரெண்டு எழுத்துத் தலைவரால் விவசாய மன்னன் எண்டு பட்டம் வழங்கப்பட்டவராம் அவர். அவசரமாய் வெளியேறிப்போட்டு, திரும்பச் சென்று வீட்டைப் பார்த்தாராம். வீடு சுத்தமாக இருந்ததாம். அதாகப்பட்டது ஒரு பொருளும் இல்லை. மன்னனுக்கே இந்தக் கதியென்றால்?!

அயலகத் தலைவருக்கு மாலைபோட, அல்லது கட்டியணைக்ககரும் ரெண்டெழுத்தார் அனுப்பப்பட்டதாக புரளி கிளப்பினவை புத்திசாலிகள். ரெண்டு எழுத்தாருக்கு ஆதரவாக தமிழ் நாட்டு கட்சிக்காரர் பேசமுடியாமல் வாயடைக்கும் தந்திரம்தானாம் அது. ஏற்கெனவே ஒரு முறை மாலை போட்டதில் இருந்தே மீளமுடியேல்லை, மீண்டும் ஒரு முறை மாலை போட அனுப்புவினமோ? என் சிற்றறிவுக்கு உண்மை எண்டு படேல்லை.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அதிகாரக் கட்சியினர் மேலிடத்தை தனியாகச் சந்திச்சவையல்லோ. சந்திப்புக்கு கட்சியின் முக்கியமான எவரையும் கூட்டிக்கொண்டு போகாமல் செயலாளரும், அவரது வியாபார நண்பரும் மட்டும்தான் போனவையாம். கேட்டால் அரசியல் தீர்வைப் பற்றி விவாதிக்கப் போனதாகச் சொல்லுவினம். கூட்டுச் சந்திப்புக்கு மூன்று பேருடன் போனவர், தனிச் சந்திப்புக்கு ஒருவரோடு மட்டும் போனதன் மர்மம் என்ன? குறைந்தது ஐந்து பேராவது போயிருக்கலாம்.

பச்சை அணித் தலைவர் ஒரு விருந்துபசாரம் வைத்தவர். அதற்கு எதிரணிக் கட்சிகளுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டதாம். மலையக தனித்துவக் கட்சி வெகுஜனப் பிரதிநிதிகள் அனைவருக்கும் மறக்காமல் அழைப்பு விடுத்தவை அதில் ஒருவரை மட்டும் மறந்து போச்சினம். மறக்கப்பட்டவர் தனித்துவத் தலைவர். அவரை ஏன் அழைக்கவில்லை எண்டு கேட்டபோது, அவர் ஆளும் தரப்பில் அல்லோ சபையில் இருக்கிறார் எண்டு கூறப்பட்டதாம். தாத்தாவுக்கு அழைப்பில்லையெண்டாலும் பேரன் வரத் தவறவில்லையாம்.

சபையிலுள்ள தமிழ் கட்சிகளுக்கு ஒரு சௌகரியம் என்னவென்றால், ஆளும் தரப்பு விருந்துவைத்தாலும் அழைப்பு வரும். எதிர்த்தரப்பு விருந்து வைத்தாலும் அழைப்பு வரும். சபையில் எதிர்தரப்பு இருக்கையில் இருப்பதால் எதிரணிப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளார்கள். ஆளும் தரப்புக்கு ஆதரவாக வாக்களிப்பதால் ஆளும் தரப்பின் ஆதரவுக் கட்சிகளாகவும் இருக்கிறார்கள். எதிரணித் தலைவரும் விருந்து கொடுத்தார். போய் ஒரு பிடி பிடிச்சினம். பின்னர் கல்விக்கு பொறுப்பானவர் கொடுத்த விருந்திலும் ரசித்து சுவைத்து ஒரு பிடியாம்! வாழ்க ஜனநாயகம்.

சமீபத்தில் என்னைச் சந்தித்த நண்பர் ஒருவர் சொன்ன தகவல், 'சனத்தை வெளியேறுமாறு ரெண்டு எழுத்தார் அறிவிச்சுக் கொண்டிருக்கும்போது' பள்ளிக்கூடம் விடும் நேரத்திலை கேட்கும் அமர்க்களச் சத்தம்மாதிரி ஒரு ஒலி எழுந்ததாம். சனம் எல்லாம் பதறிக்கிதறி வெளிக்கிடத் தொடங்கிய சத்தம்தான் அது. யாழ்ப்பாண வரலாற்றிலையே மறக்க முடியாத சத்தமுங்கோ அது. பள்ளிக் கூடத்திலை கேட்கிற சத்தம் அமர்க்களம். யாழ்பபாணத்திலை கேட்டது அமங்கலம். எப்போது வரும மங்களம்?!

வானொலியிலை நேயர்கள் தீர்பைக் கேட்டுப்போட்டு, கடைசியாக தாங்கள் நினைத்தது போல பரிசுகள் பெறுவோர் பெயர்கள் சில அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டதாம். கேட்டதற்கு சீனியர், ஜூனியர் பிரச்சனை சொல்லப்பட்டதாம்! அது சரி, பிறகெதற்கு போட்டி எண்டு அறிவிச்சு போஸ்ட் காட் செலவு வைச்சவை?

சினிமாப்பாடல்களை ரசனைக்கு ஏற்ப மாற்றிப் பாடும் ஆட்களுக்கு இந்தப் பாட்டு உதவும். மாற்றிப் பார்த்தவர் சுஜாதா.

*"பாலிருக்கும் பசியிருக்கும்*
*பழமிருக்காது.*
*பஞ்சணையில் தூக்கம் வரும்*
*காற்று வராது."*

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ~தூயதமிழும்~ 'உழன்றி' வதையும்

**அரசியல் தொடர்** அற்புதன்- எழுதுவது

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




### தூய தமிழ்

புளொட் தலைவர் உமாமகேஸ்வரனுக்கும் தனித் தமிழ் இயக்கத்தைச் சேர்ந்த பெரும்சித்திரனாருக்கும் இடையே நல்ல நெருக்கம்.

இந்தியாவில் தனித் தமிழ்நாடு உருவாக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர் பெரும் சித்திரனார்.

பெரும் சித்திரனாருக்கு தமிழ் மீது மட்டற்ற காதல். தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்கள் கலவாமை வேண்டும் என்று கூறிவந்தவர்.

கூறியதோடு நிற்காமல், தனிப்பட்ட ரீதியில் உரையாடும் போதும் தூய தமிழில்தான் பேசுவார்.

வீட்டுக்குச் சென்றால் விருந்து போடுவார். உணவு தயாரானதும் நண்பர்களிடம், "உண்ண ஏகலாமா?" என்றுதான் கேட்பார்.

பெரும் சித்திரனார் வெளியிட்ட பிரசுரமொன்றில் "கமுக்கக் காவலர்கள் துமுக்கியால் சுட்டனர்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பழந் தமிழ் அகராதியின் உதவியோடு அந்தத் தமிழை மொழி பெயர்த்துப் பார்த்துத்தான் பலரும் அர்த்தத்தை புரிந்து கொண்டனர்.

கமுக்கம்=இரகசியம். துமுக்கி= துப்பாக்கி. "இரகசியப் பொலிசார் துப்பாக்கியால் சுட்டனர்" என்பதுதான் பொருள்.

பெரும்சித்திரனாரின் நட்பு உமாமகேஸ்வரனுக்கு பிடித்தமாகிவிட்டது. அவரது கொள்கைகளிலும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கிவிட்டார்.

புளொட் அமைப்பினர் வெளியிட்ட பிரசுரங்களிலும் தூயதமிழ் சொற்கள் தலைகாட்டத் தொடங்கியிருந்தன.

புளொட் அமைப்பினர் சென்னையில் ஆரம்பித்த அச்சகமும் பெரும் சித்திரனாரின் மேற்பார்வையில்தான் இயங்கிவந்தது.

தூயதமிழ் சொற்களை பிரசுரங்களில் மட்டுமல்ல, இயக்க தண்டனைக் கூடத்திலும் உமாமகேஸ்வரன் அறிமுகம் செய்து வைத்தார்.

அதில் ஒன்றுதான் உழன்றி. உழன்றி என்றால் கப்பி. கிணற்றில் வாளியால் தண்ணீர் அள்ள பயன்படுத்தும் கப்பி.

### உழன்றி வதை

ஆளை உயரத்தில் கட்டித் தொங்க விட்டு கப்பியின் உதவியால் உயர்த்தியும், இறக்கியும் வேடிக்கை காட்டலாம். கீழே நெருப்பு எரியும். அல்லது ஆளை பதியச் செய்து உருட்டைக் கட்டைகளால் அடித்துவிட்டு மீண்டும் உயரத்தில் தொங்கச் செய்யலாம்.

மிகப் பழமையான சித்திரவதை முறை அது. அதனால் தூய தமிழில் பெயர் சூட்டிவிட்டார் உமாமகேஸ்வரன்.

உமாமகேஸ்வரனின் கட்டளைப்படி புளொட் இயக்க பயிற்சி முகாம்களில் சித்திரவதைகளை முன்னின்று நடத்தியவர்களில் முக்கியமானவர்கள் பரந்தன் ராஜன். வாமதேவன். சங்கிலி என்றழைக்கப்படும் கந்தசாமி ஆகியோராவர்.

ஒவ்வொரு இயக்கத்திலும் தமது தலைவர்களை உறுப்பினர்கள் பெயர் சொல்லி அழைக்கும் முறை வெவ்வேறாக இருக்கும்.

புலிகள் அமைப்பினர் பிரபாகரனை தம்பி என்று குறிப்பிடுவார்கள். தற்போது தலைவர் என்று குறிப்பிடுகிறார்கள். அண்ணை என்றும் சொல்லிக் கொள்வதுண்டு.

புளொட் அமைப்பில் உமாமகேஸ்வரன் பெரியவர் என்று அழைக்கப்பட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் பத்மநாபாவை 'தோழர் எஸ்.ஜி.' என்றுதான் குறிப்பிடுவார்கள். 'எஸ்.ஜி.' என்பது செயலாளர் நாயகத்தின் சுருக்கம்.

ஈரோசில் யார் தலைவர் என்பதே முதலில் குழப்பமாக இருந்தது. பொதுவாக தோழர் என்று தலைமையில் உள்ளவர்களும் அழைக்கப்பட்டார்கள்.

ரெலோவில் சிறிசபாரத்தினம் சிறி அண்ணா என்று அழைக்கப்பட்டார். தலைமையைப் பற்றிக் குறிப்பிடும்போது 'மெயின்' என்றும் ரெலோ உறுப்பினர்கள் சொல்லிக் கொள்வார்கள்.

### போஷகர்கள்

ஈழப் போராளி அமைப்புக்கள் ஒவ்வொன்றும் தமிழ்நாட்டில் தங்களுக்கென்று ஒவ்வொரு போஷகர்களைக் கொண்டிருந்தன.

புலிகள் அமைப்புக்கு ஆரம்பகாலப் போஷகர் நெடுமாறன். இவர் முதலில் இந்திய காங்கிரஸ் கட்சியில் இருந்தவர். காமராஜரும் இந்திராகாந்தியும் பிரச்சனைப்பட்டுக் கொண்டு காங்கிரஸ் இரண்டாக உடைந்தபோது காமராஜரோடு இருந்தவர்.

காமராஜர் மறைவுக்குப் பின்னர் இரண்டு காங்கிரசும் இணைந்துவிட்டன. நெடுமாறன் அதிலிருந்தும் விலகி காமராஜர் காங்கிரஸ் என்ற தனிக் கட்சியை ஆரம்பித்தவர். சொல்லிக் கொள்ளக் கூடிய அரசியல் செல்வாக்கு எதுவும் அவருக்கு கிடையாது.

இலங்கைப் பிரச்சனையால் அடிக்கடி சிறை சென்று பிரபலம் பெற்றுக்கொள்ள முடிகிறது.

ரெலோவுக்கு கலைஞர் கருணாநிதிதான் ஆரம்பகால போஷகர். (தற்போதல்ல)

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு கும்பகோணம் ஸ்டாலின்தான் போஷகர். இவர் தந்தை பெரியாரின் தீவிரமான தொண்டர். திராவிடர் கழக மாணவரணியில் தலைவர்களில் ஒருவராக இருந்தவர். பெரியார் மறைவுக்குப் பின்னர் திராவிடர் கழகத் தலைவரானார் கி.வீரமணி.

"இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுக்க வேண்டும். போராட்டம் நடத்த வேண்டும்" என்று வீரமணியிடம் சொன்னார் ஸ்டாலின்.

அதற்கு வீரமணி சொன்னார். "அது அந்த நாட்டின் உள்நாட்டுப் பிரச்சனையாச்சே. நாம் தலையிடவேண்டாம்."

திராவிடர் கழகத்திற்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு வந்துவிட்டார் ஸ்டாலின்.

அதே வீரமணி பின்னர் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார். திராவிடர் கழகம் மூலமாக புலிகளுக்கு நிதி திரட்டல் நடந்தது. திரட்டிய நிதியில் திராவிடர் கழகத்துக்காக ஒரு குறிப்பிட்ட வீதம் எடுக்கப்படும் என்ற முன்நிபந்தனையோடுதான் நிதி திரட்டப் பட்டது.

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கோடி கோடியாக நிதி வைத்திருக்கும் கட்சிகள்.

திராவிடர் கழகம் தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவி பெரியளவில் நடத்தி வருகிறது. அனுமதி பெறவேண்டுமானால் பல இலட்ச ரூபாய்கள் டொனேஷனாகச் செலுத்த வேண்டும். அவற்றின் மூலமாகவே வருடாந்தம் பல கோடி ரூபாய்கள் புரளுகின்றன.

அப்படியிருந்தும் அந்த இருகட்சிகளும் தமது கட்சி நிதியிலிருந்து ஈழப் போராளி அமைப்புக்களுக்கு உதவ முன்வரவில்லை.



பெங்களூரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உமாமகேஸ்வரன். (இடமிருந்து வலமாக மூன்றாவது)

### எம்.ஜி.ஆரின் உதவி

எம்.ஜி.ஆர் தனது சொந்த நிதியிலிருந்தும் புலிகளுக்கு உதவியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர். புலிகளுக்கு உதவி செய்தது பற்றிய ஒரு சம்பவம் பரவலாக பேசப்பட்டது.

எம்.ஜி.ஆருடன் இருந்த நெருக்கத்தை வைத்தே பல கோடிகள் சம்பாதித்தவர் ஒரு தொழிலதிபர்.

ஒரு தடவை தனக்கு வியாபாரம் ஒன்றில் கிடைத்த லாபத்தை எம்.ஜி.ஆரிடம் குறைத்துச் சொல்லி விட்டார்.

எம்.ஜி.ஆர் எப்படியோ மணந்து பிடித்து விட்டார். அந்தத் தொழிலதிபரிடம் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை கொண்டுவருமாறு கூறினார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் கட்டளையை மீற முடியுமா? பெட்டியில் வந்தது பல லட்சங்கள். பெட்டியை வாங்கிக் கொண்டது பிரபாகரனின் ஆள்.

கும்பகோணம் ஸ்டாலின் தனது சொத்துக்களை விற்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்காக உதவியவர். விளம்பரம் விரும்பாத மனிதர்.

கும்பகோணத்தில் ஈ.பி.ஆர். எல்.எஃப். கால்வைக்க முன்னர் ஸ்டாலினிடம் ஒரு அம்பாசிடர் கார், இரண்டு பெரிய பேக்கரிகள், சொந்த வீடு எல்லாம் இருந்தது.

இப்போது கால் நடையாகத்தான் திரிகிறார் ஸ்டாலின்.

புளொட் அமைப்புக்கு போஷகராக இருந்தவர் எஸ்.டி. சோமசுந்தரம்.

எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் அவர் பவர்ஃபுல்லாக இருந்தபோது புளொட்டுக்கு நல்ல பயன் கிடைத்தது. ஜெயலலிதாவுக்கு முக்கியத்துவம் தரப்பட்டதால் எம்.ஜி.ஆரோடு பிரச்சனைப் பட்டுக் கொண்டு வெளியேறினார். 'நமது கழகம்' என்று தனிக்கட்சி ஆரம்பித்தார். இடைத்தேர்தலில் படுதோல்வி. மீண்டும் அ.தி.மு.கவுக்கு திரும்பினார். இப்போது எஸ்.டி. சோமசுந்தரத்திற்கு ஜெயலலிதா ஆதி பராசக்தியாகத் தெரிகிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக தற்போது எஸ்.டி. சோமசுந்தரம் வாயே திறப்பதில்லை.

### பொதுவான பெயர்

1985 காலப்பகுதியில் இலங்கையில் புலிகள் அமைப்பினர் நடத்திய தாக்குதல்கள் தமிழகப் பத்திரிகைகளில் பரபரப்பாக வெளியாகிக் கொண்டிருந்தன.

சகல ஈழப் போராளி அமைப்புக்களையும் பொதுவாக விடுதலைப் புலிகள் என்றே தமிழக மக்கள் அழைத்து வந்தனர்.

ரெலோ நடத்திய தாக்குதலாக இருந்தாலும் புலிகள் தாக்கிவிட்டார்களாம் என்றே தமிழக மக்கள் பேசிக் கொண்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈரோஸ், புளொட் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதைவிட புலிகள் என்று பொதுவாகக் குறிப்பிடுவதே அவர்களுக்கு வசதியாக இருந்தது.

ஈழப் போராளி இயக்கத் தலைவர்கள் மத்தியிலும் பிரபாகரனும், உமாமகேஸ்வரனுமே தமிழக மக்களிடம் அறியப்பட்ட பெயர்களாக இருந்தன. உமாமகேஸ்வரனை முகுந்தன் என்று சொன்னால்தான் தெரியும்.

பாண்டிபஜாரில் புளொட்டுக்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பிரபாகரனையும், முகுந்தனையும் பிரபலம் செய்திருந்தது.

சாதாரண மக்கள் மட்டுமல்ல தமிழக அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் மத்தியில் கூட ஈழப் போராளி அமைப்புக்களின் பிரிவுகள் குறித்து தெளிவு இருக்கவில்லை.

அதற்கு ஒரு உதராணம் சொல்கிறேன். மதுரையில் ஒரு புகைப்பட கண்காட்சி நடத்தியது ஈ.பி.ஆர்.எல்.எஃப். கணகாட்சியை முன்னிட்டு ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொள்ள மதுரை மேயர் பழனிவேல்ராஜன் (பெயர் சரியாக நினைவில்லை) அழைக்கப்பட்டிருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் சார்பாக டேவிற்சன் அவரை வரவேற்றார். மதுரை மேயர் கேட்ட முதல் கேள்வி; "உங்க தலைவர் பிரபாகரன் சௌக்கியங்களா?"

அவருக்கு நீண்ட நேரமாக விளக்கம் கொடுத்தார் டேவிற்சன். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, கூட்டத்திலும் உரையாற்றி முடித்துவிட்டு, விடைபெறும்போது டேவிற்சனிடம் சொன்னார் மதுரை மேயர்; "பிரபாகரனிடம் நான் ரொம்பக் கேட்டதாகச் சொல்லுங்கள்." டேவிற்சன் முகத்தில் ஈயாடவில்லை.

### உமாவின் விளக்கம்

ஈழப் போராளி அமைப்புக்கள் தமது பிரிவுகள் வேறுபாடுகள் பற்றிச் சொன்ன விளக்கங்கள் தமிழக மக்களுக்கு புரியவில்லை.

பொதுவாக இரண்டே இரண்டு கேள்விகள் கேட்பார்கள்.

"நீங்கள் அனைவரும் ஏன் ஒன்றுபடக் கூடாது?"

"புலிகள்தானே தாக்குதல் நடத்துகிறார்கள்? யார் பெரிய இயக்கம்?"

நான்கு இயக்கக் கூட்டமைப்பு உருவான பின்னர் புளொட் அமைப்புத்தான் வெளியே நின்றது.

எனவே, மேற்கண்ட இரு கேள்விகளுக்கும் புளொட்தான் கூடுதலாகப் பதில் சொல்ல வேண்டியிருந்தது.

1985 மே மாதம் 16ம் திகதி பெங்களூரில் ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தினார் உமாமகேஸ்வரன்.

ஏன் பரவலான தாக்குதல்களை புளொட் அமைப்பு நடத்தவில்லை என்பதற்கு உமா சொன்ன விளக்கம் இது;

"பொதுவாக கெரில்லா போர் முறை எல்லா நாடுகளிலும் வெற்றி பெற்றுவிடாது. இலங்கையைப் பொறுத்தவரை பூகோள அமைப்பு முறையை வைத்து கணித்தால் இங்கு கெரில்லாப் போர் வெற்றி பெற வழியில்லை. ஆகவேதான் தொழிலாளர், விவசாயிகள், மாணவர்களைத் திரட்டி மக்கள் யுத்தம் நடத்த வேண்டும் என்கிறோம்.


யாழ்ப்பாணத்திற்குள் தாக்குதல் நடத்துவது கூடாது. ஒரு சிறிய வெற்றிக்காக பெரிய இழப்புக்களை ஏற்படுத்திக் கொள்வது சரி இல்லை. இதில்தான் புலிகளோடு நாங்கள் வேறுபடுகிறோம்." என்றார் உமாமகேஸ்வரன்.

புளொட் அமைப்புத்தான் பெரியது என்று சொல்லவும் அவர் மறக்கவில்லை.

"தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் 6 ஆயிரம் பேர் கொண்ட படை வைத்திருக்கிறது. ஏனைய இயக்கங்கள் அனைத்தும் சேர்ந்து 4 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். மொத்தம் 10 ஆயிரம் பேர் கொண்ட படை இருக்கிறது" என்று சொல்லியிருந்தார் உமாமகேஸ்வரன்.

அதாவது ஏனைய இயக்கங்கள் அனைத்தும் சேர்ந்தால்கூட புளொட் அமைப்பில் உள்ளவர்களின் எண்ணிக்கைக்கு கிட்டவும் வரமுடியாது என்று மறை முகமாகச் சொல்லிவிட்டார்.

உண்மையில் அப்போது ஏனைய இயக்கங்களைவிட (தனித்தனியாக) புளொட் அமைப்பில்தான் உறுப்பினர்கள் தொகை அதிகம். ஆனால் அது உமா சொன்ன கணக்கல்ல. புளொட் மட்டுமல்ல சகல இயக்கங்களுமே போட்டி காரணமாக தமது ஆட் பலத்தை மிகைப்படுத்தியே கூறி வந்தன. *(தொடர்ந்து வரும்)*



# துறைமுகத்திற்குள் புகுந்த கரும்புலிகள்

17.10.1995 அதிகாலை 3.40 மணிக்கு திருமலை துறைமுகத்திற்குள் ஊடுருவி கடற்கரும்புலிகளால் இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான 3 கடற்படகுகள் தாக்கப்பட்டன.

ஒரு தரையிறங்கு கப்பல், ஒரு அதிவேகப் படைவீரர் கப்பல், ஒரு டோறா அதிவேகப் பீரங்கிப் படகு என்பனவே த்ாக்கப்பட்ட படகுகளாகும். இத்தாக்குதலை சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவின் கரும்புலிகளும், அங்கையற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவின் கரும்புலியும் மேற்கொண்டு பலியாகினர்.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் திருமலை துறைமுகத்தில் கடற்கரும்புலிகள் நடத்திய இரண்டாவது தாக்குதல் இது.

இடமிருந்து வலமாக- விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் கடற்கரும்புலிகள் மேஜர் சிவசுந்தர், கப்டன் ரூபன் வலது மேல்- சிவகாமி



# போரா? சமாதானமா? என்பதற்கு நாம்மவரே விடை பகரவேண்டிய நிலை!

## ஆளில்லாத பிரதேசத்தை புனரமைக்க முயலும் ஆட்சியாளர்கள்

## சர்வதேசம் கரிசனைப்படாத இலங்கைப் பிரச்னை

அலசுவது-இராஜதந்திரி

"எதிர்வரும் தமிழ்-சிங்கள சித்திரைப்புதுவருடக் கொண்டாட்டத்துக்கு முன்பதாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அங்கே சென்று குடியமரச் செய்வோம்" என்று பாதுகாப்பமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்த கடந்தவாரம் தமது அமைச்சரவையில் இடம் பெற்ற வைபவமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

அமைச்சர் ரத்வத்தயினதும், அரசாங்கத்தினதும் நோக்கம் வடக்கே யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய மக்களை மீளவும் அங்கே குடியமரச் செய்வதாக இருக்கின்ற போதிலும், யாழ்ப்பாண மக்கள் மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்ப முன்வருவார்களா? அல்லது எல்.ரி.ரி.ஈ.யினர் அம்மக்களை மீளவும் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிப்பார்களா? என்பதே பிரதான கேள்விகளாக இருக்கின்றன.

இராணுவம் ஆரம்பித்து, நிறைவு செய்துள்ள 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை வடக்கே நிலவிய மிகச் சொற்பமான அமைதியையும் முற்றாகக் குலைத்து விட்டுள்ளதுடன், வடபகுதிமக்களையும் என்றுமில்லாதவாறு பாரிய யுத்த அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கச் செய்துள்ளது.

தமது இன்னல்களை எவரிடம் சென்று முறையிட்டுத் தீர்வு காண்பது என்ற நிலைக்கு அவர்கள் உள்ளாகியுள்ளனர்.

ஒப்பரேஷன் 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதும் யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளியேறியிருந்தனர். வடமராட்சி, தென்மராட்சி போன்ற பிரதேசங்களுக்கும், கிளிநொச்சி, வன்னிப் பகுதிகளுக்கும் அவர்கள் இடம் பெயர்ந்திருந்தனர்.

மீண்டும் வடக்கே இராணுவநடவடிக்கை ஆரம்பிக்கப்படும். எல்.ரி.ரி.ஈ.யினர் ஒழிக்கப்படுவார்கள் என்றெல்லாம் பாதுகாப்பமைச்சர் ரத்வத்த தற்போது சூளுரைத்து வருகின்றார்.

மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈ.யினரும் தாம் படையினரை விரட்டியடிக்கப் போவதாகவும், இதற்கென மீண்டும் தமது பலத்தைக் கட்டி எழுப்பி வருவதாகவும் கூறிவருகின்றனர்.

எனவே இக் 'கெடுபிடி'யான கருத்துப்பரிமாற்றங்களை அவதானிக்கையில் இருசாராரும் தத்தமது போராட்ட முஸ்தீபுகளை எவ்வகையிலும் கைவிடப்போவதில்லை என்பது மட்டும் தெளிவாகியுள்ளது.

இந்நிலையில் வடக்கே அகதிகளாகக் குடிபெயர்ந்துள்ள லட்சோபலட்சம் மக்களின் கதியே பரிதாபகரமானதாக இருக்கின்றது.

கடந்த 12 வருட காலயுத்தத்தில் உயிர், உடமைகள் என்று பறிகொடுத்து வடபகுதி வந்த மக்கள் இன்று அனைத்தையுமே இழந்து, இனி இழப்பதற்கு எதுவுமே இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகைய சூழ்நிலையில் அரசாங்கமும், எல்.ரி.ரி.ஈ.யினரும் மீண்டும் ஒரு நீடித்த மோதலை ஆரம்பித்தால் பிணங்கள் மட்டுமே மலை போல குவிந்து மிஞ்சுமென்பதையே ஊகிக்க முடிகின்றது.

வடக்கே இருந்து கிடைக்கும் தகவல்கள் அங்கே நாளுக்கு நாள் பட்டினி, வயிற்றோட்டம் ஆகியவற்றுக்கு மக்கள் பலியாகி வருவதாகத் தெரிவிக்கின்றன.

அயல் நாடான பங்களாதேஷில் புயல், வெள்ளம் போன்ற அனர்த்தங்கள் ஏற்படும்போது பல லட்சக்கணக்கில் மக்கள் புலம் பெயர்ந்து அகதிகளாவதுண்டு.

ஆனால் கடந்த இரு தசாப்த காலத்தில் தென்னாசியாவில் யுத்தம் காரணமாக தற்போது இலங்கையிலேயே லட்சக்கணக்கானவர்கள் அகதிகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு யுத்தம் ஆரம்பித்த கடந்த 12 வருட காலத்தில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருசாராரும் 'கண்ணாமூச்சி' ஆட்டம் போன்றே சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இரு சாராரிடமும் வடக்கு-கிழக்குப் பிரச்னையை நேர்மையாகவும், நிதானமாகவும், நிரந்தரமாகவும் தீர்த்து வைக்க வேண்டுமென்ற நோக்கம் காணப்பட்டிருக்கவில்லை.

பேச்சுவார்த்தை, சமரசம் என்று ஆரம்பித்தபோதும் கூட இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் விசுவாசமற்ற நிலையிலும், விரைந்து அணுகப்படவேண்டிய விடயங்களை தட்டிக்கழித்துமே வந்திருந்தனர்.

இதன் காரணமாகவே வடக்கு-கிழக்குப் பிரச்னை என்றுமில்லாதவாறு சிக்கலடைந்து தற்போது பூதாகாரமான நிலையை எட்டியுள்ளது.

எனவே வடக்கு-கிழக்கு மக்களும் எதிர்காலம் எப்படி அமையும் என்று ஊகிக்கமுடியாதவர்களாக தொடர்ந்தும் ஓர் இருள்மயமான சூழ்நிலையில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளாகியுள்ளார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கட்டிட நிர்மாணத்துறை அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வா தற்போது வடபகுதிக்கு அடிக்கடி விஜயம் செய்து வருகின்றார்.

இவர் வடபகுதியில் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை முன்னெடுக்கும் பொறுப்பையும் ஏற்றுள்ளார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பின்னர் கொழும்பு திரும்பிக் கருத்து வெளியிட்டபோது, யாழ்ப்பாணத்தில் விரைவில் புனர் நிர்மாணப்பணிகள் ஆரம்பமாகும் என்று கூறியிருந்தார்.

இதற்கென வேலையாட்கள், மற்றும் கட்டிடப் பொருட்கள் என்பவையும் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளர்.

ஆளில்லாத மண்ணில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா புனர்வாழ்வுப்பணிகளை ஆரம்பிக்கப் போவதாகக் கூறியிருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

எந்த மக்களுக்கான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா புனர்வாழ்வுப் பணிகளை ஆரம்பிக்க முன் வந்துள்ளாரோ அம்மக்கள் தற்போது 'அதளபாதாளத்தில்' வீழ்ந்த நிலையில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே அம்மக்களை தற்போது அவர்கள் அனுபவிக்கும் மோசமான நெருக்கடி நிலையிலிருந்தும் காப்பாற்ற வேண்டியதே அவசியமானதாகின்றது. இதன் பின்னரே அவர்களுக்குப் புனர்வாழ்வை அமைத்துக் கொடுப்பது குறித்து சிந்திக்கமுடியும்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்பாதவரை புனர்வாழ்வு மட்டுமல்ல, வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வு கூட சாத்தியப்பட்டு வரப்போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது.

இக்கட்டத்தில் ஆட்சியாளர்கள் வடக்கே புனர்வாழ்வு, புனரமைப்பு என்பனபற்றிச் சிந்திப்பதை விட போரை நிறுத்தக் கூடிய வழிமுறைகளை ஆராய்வதே உசிதமான நடவடிக்கையாக அமைய முடியும்.

ஆயினும், எல்.ரி.ரி.யினரும் போரை நிறுத்த முன்வராத பட்சத்தில் போரை



நிறுத்துவது என்பது சாத்தியமாகாத ஒன்றாகவே தென்படுகின்றது. இருதரப்பும் தமது நடவடிக்கைகளை அரசியல் தளத்துக்கு நகர்த்த முன்வருவது மூலமே போரை முடிவுக்குக் கொண்டுவரலாம்.

ரிவிரெச இராணுவ நடவடிக்கை முடிவுற்றது முதல் ஆட்சியாளர்கள் தெரிவித்து வரும் கருத்துக்களில் அரசியல் அணுகுமுறைகள் பற்றி எதுவும் ஆக்க பூர்வமாகக் குறிப்பிடப் படாதிருக்கின்றது.

கொழும்பில் காணப்படும் நிலைமைகளை அவதானிக்கையில் ஆட்சியாளர்கள் என்றுமில்லாதவாறு தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவின் வாசஸ் தலமான அலரிமாளிகையின் பாதுகாப்பு என்பது கொழும்பின் பிரதான நெடுஞ்சாலையான காலி வீதியையே மூடிவிடுமளவுக்கு பலமடைந்துள்து.

இரு வழிப் பாதையாக இருக்கும் காலிவீதி அலரி மாளிகைக்கு முன்பாக ஒரு வழிப்பாதையாக்கப்பட்டுள்ளது.

இது தவிர, கொழும்பில் முப்படைத்தளபதிகள் வசித்துவரும் பகுதியின் வீதிகளும் மூடப்பட்டு கொழும்பில் போக்குவரத்து என்பது தாறுமாறாகியுள்ளது.

இத்தகைய எற்பாடுகள் நாட்டு நிலைமை தொடர்ந்து மோசமடைந்து செல்வதையே புலப்படுத்துகின்றனவேதவிர, எவ்வகையிலும் ஒரு சுமூகமான சூழ்நிலைகள் தோற்றம் பெறுவதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை.
கடந்த காலங்களில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக கரிசனை காட்டிய நாடுகள் பலவும் தற்போது இப்பிரச்சனையை கருத்தில் எடுப்பதாக இல்லை.

இதற்கு இன்றைய அரசாங்கத்தின் சர்வதேச மட்டத்திலான பிரசாரம் வலுவடைந்திருப்பது மட்டுமல்ல, இலங்கியின் பிரச்னையை விட பன்மடங்கு சிக்கலான பிரச்னைகளில் உலக நாடுகள் ஆர்வங்காட்டிவருவதே முக்கிய காரணமாகும்.

பொஸ்னியாவுக்குள் தற்போது நேட்டோ நாட்டுப் படைகள் பிரவேசித்துள்ளன. ஐ.நா. அமைதிப் படையினர் பொஸ்னியாவிலிருந்தும் தமது பணிகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

இது தவிர பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளும், இந்தியாவும் அடுத்தாண்டில் பொதுத்தேர்தல்களைச் சந்திக்கவுள்ளன. எனவே இந்நாடுகளின் அரசுகள் தந்தமது அரசியல் நடவடிக்கைகளில் கூடுதல் கவனமெடுத்து வருகின்றன.

இவையாவற்றுக்கும் மேலாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை பேச்சுவார்த்தைகள் மூலமாகவே தீர்க்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டு வருகின்றதே தவிர, எங்கே, எதிலிருந்து பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதென்பது தெளிவற்ற தாகவே இருக்கின்றது.

அத்துடன் வடக்கு-கிழக்குப் பிரச்னையின் அரசியல் பெறுமானங்கள் உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி தகுந்த வரையறைக்குட்பட்டதாகவே இருக்கின்றன.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள எல்.ரி.ரி.ஈ.யினர் மட்டுமல்ல, ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் தகுந்த உத்வேகத்துடன் அரசியல் ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமானதாகின்றது.

அரசாங்கம் எதிர்காலத்திலும் எதுவித தயக்கமுமின்றி யுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கத்தயாராக இருப்பதையே அது வெளியிட்டுவரும் கருத்துக்கள் மூலம் அறிய முடிகின்றது.

வெறுமனே இருதரப்பினரும் ஆட்களைத்திரட்டியும், ஆயுதங்களைப் பெருக்கியும் போரிடுவதால் அழிவு தான் மிஞ்சுமே தவிர, எதுவுமே ஆக்கம் பெறப்போவதில்லை.

இந்தியாவின் மேற்கு வங்காளக் கிராமங்களில் பாரசூட்களில் ஆகாயமார்க்கமாக நவீனரக ஆயுதங்கள் போடப்பட்டுள்ளனவென்றும், இவை எல்.ரி.ரி.ஈ.யினருக்காகப் போடப்பட்டிருக்கலாமென இந்திய புலனாய்வாளர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆயுத விவகாரத்தில் எல்.ரி.ரி.ஈ.யினரும் சம்பந்தப்பட்டிருப்பது உண்மையானால், எல்.ரி.ரி.ஈ. மீண்டும் விரிவான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு தன்னை தயார் படுத்தி வருகின்றதென்பதே தெளிவாகியுள்ளது.

மறுபுறத்தே அரச படையினரும் ஆயுதங்கள், விமானங்களை மேலதிகமாகக் கொள்வனவு செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் உலக சமூகமும் பாராமுகமாக இருக்கும் இத்தருணத்தில், எமது பிரச்னையை நாமே தீர்க்க வேண்டியது அவசியமானதாகின்றது.
எனவே போரா? சமாதானமா? என்ற கேள்வியை நம்மவர்களே கேட்டு அதற்கான விடையையும் நம்மவர்களே பகர வேண்டியதாக இருக்கின்றது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# கார்லோஸ் மனித வெடிகுண்டு 16

## ஒரு குள்ள நரி

பாரிஸ் விமானநிலையத்தில் இலண்டன் நோக்கிப் புறப்பட ஆயத்தமானான் கார்லோஸ்.

இலண்டன் செல்லும் விமானம் தயாராகிக் கொண்டிருந்தது. விமானத்தை நோக்கி கார்லோஸ் புறப்பட ஆயத்தமான போதுதான்–

"கார்லோஸ் நில்!"

என்று பெண்குரல் பின்னால் இருந்து கேட்டது.

சட்டென்று ஒரு அதிர்ச்சி நெஞ்சுக்குள் மின்னிமறைந்தது. திரும்பிப் பார்த்தான். அங்கே–

அஞ்செலா வந்து கொண்டிருந்தாள். வந்தவள் பொது இடம் என்னும் பாராமல் அவன் கழுத்தை தன் கைகளால் கட்டிக் கொண்டு அழுத்தமாய் முத்தமிட்டாள்.

"புறப்படுகிறாயா?" என்று கேட்டாள். அன்று காலையில் தினசரியைப் பார்த்த போதுதான் கார்லோஸ் பற்றிய உண்மைகள் அஞ்செலாவுக்கு தெரிந்திருந்தன.

அஞ்செலாவை கார்லோஸ் சந்தித்து பல மாதங்கள் ஆகிவிட்டன.

இப்போது அஞ்செலா எப்படி இங்கே வந்தாள் என்று யோசித்தான் கார்லோஸ்.

அவன் மனதில் ஓடிய எண்ணங்களை முகத்தில் படித்தவளாய் அஞ்செலாவே அவன் சந்தேகத்தைப் போக்கினாள்.

தனது 8 வயது மகளான தினாவை தனது சகோதரியுடன் வழியனுப்பி வைப்பதற்காக அஞ்செலா வந்திருந்தாள்.

வந்த இடத்தில்தான் கார்லோஸ் அவள் கண்ணில் பட்டிருக்கிறான்.

கார்லோஸ் அஞ்செலாவை அணைத்தபடி விமான நிலையத்தின் ஒரு ஒதுக்குப்புறமான பகுதிக்குச் சென்று, தான் இலண்டன் போக வேண்டிய அவசியம் பற்றிச் சொன்னான். அது இரகசியமாக இருக்க வேண்டும் என்பதையும் நினைவூட்டினான்.

கண்களில் நீரோடு கார்லோஸுக்கு விடைகொடுத்தாள் அஞ்செலா.

இலண்டனில் கார்லோஸ் சென்று இறங்க முன்னரே, கார்லோஸ் பற்றிய பிரமிப்பூட்டும் செய்திகள் தினசரிகள் மூலமாக பரவிவிட்டன.

♦♦

இலண்டனில் பெரிய நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்தான் கார்லோஸ்.

வாடிக்கையாளர்களை அடிக்கடி கவனித்து, அவர்களின் குறைகளை கேட்டு தீர்த்துவைக்கவென்றே அழகான பெண்கள் பணியில் இருந்தார்கள்.

அவர்களே உணவு பரிமாறுவார்கள். கோப்பையில் மது ஊற்றிக் கொடுப்பார்கள்.

"வேறென்ன வேண்டும் ஜென்டில் மேன்?"

கார்லோஸ் சற்றும் யோசிக்காமல் "நீ" என்று சொன்னபோது, 'சீ' என்று சீறாமல், அவன் தலை முடியை கோதி விட்டு சிரித்தாள்.

"இப்போது வேண்டாம்." என்றதில் சம்மதம் அடங்கியிருந்தது.

இரவு வந்தவளிடம் கார்லோஸ் கேட்டான்: "நீ பத்திரிகை வாசிப்பாயா?"

"யெஸ்!"

"கார்லோஸ் உன் முன் வந்தால் என்ன செய்வாய்?"

அவள் சட்டென்று சொன்னாள்.

"கேட்பதைக் கொடுப்பேன், கேட்கா விட்டாலும் கொடுப்பேன்?"

"என்ன கொடுப்பாய் கேட்காமல்?"

"முத்தம். கார்லோஸை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். பத்திரிகைகள் மூலமாக மட்டும்" அவள் அதை ஒரு ஜோக்காக எடுத்து லிப்ஸ்ரிக் உதடுகளால் முத்துக்களை சிந்தினாள்.

"என்னைக் கார்லோஸாக நினைத்துக் கொள்ளேன்."

"நினைத்து...?"

"கேட்டதையெல்லாம் தாயேன்!"

கைகளை மூடி அவன் நெஞ்சில் குத்தி, கட்டிலில் சாய்த்து, மேலே பரவினாள்.

விடிந்தபோது தினசரிகளில் ஒரு அதிர்ச்சியான செய்தி இருந்தது.

பாரிசில் அஞ்செலாவை பொலிசார் கைது செய்திருந்தனர்.

"கார்லோஸின் காதலி கைது" என்று கொட்டை எழுத்தில் இலண்டன் தினசரிகள் செய்தி போட்டிருந்தன.

பாரிஸ் நகர பொலிஸ் அதிகாரி ஒருவர் மிக்க உறுதியோடு சொன்ன செய்தியும் பிரசுரமாகியிருந்தது:

"கார்லோஸின் காதலியை கைது செய்து விட்டோம். கார்லோஸை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். கார்லோஸ் பாரிஸ் நகரில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறான். தப்ப முடியாது. விமான நிலையங்களில் கடும் கண்காணிப்பு போடப்பட்டிருக்கிறது.

> ஒரு தனிமனிதன்......!
> ஆனால் துணிச்சல்காரன்; விவேகமானவன்;
> இளைஞன் – கம்பீரமானவன்!
> காதலித்தான் – காதலிக்கப்பட்டான்!
> சாகசக்காரன்.....!
> அச்சமூட்டினான் – ஆச்சரியப்படுத்தினான்;
> அவன்தான் கார்லோஸ்!
> பாலஸ்தீனப் போர்க்களம்
> உலகுக்கு அறிமுகம் செய்த
> அதி பயங்கர மனிதன்!

செய்தியைப் படித்த கார்லோஸ் மனதுக்குள் அஞ்செலாவுக்கு நன்றி சொன்னான்.

"டியர் அஞ்செலா, நீ எனக்கு உண்மையாக இருக்கிறாய். அதனால்தான் பொலிசாருக்கு மிக உறுதியாய் பொய் சொல்லி இருக்கிறாய்!"

கார்லோஸை தேடிப்பிடித்து தளபதி வாடி ஹாட்டாட்டின் ஆட்கள் அவரது தகவல் கொடுத்தார்கள்.

"உடனே புறப்படுவா! அனைத்தும் அறிவேன். யோசிக்காதே. பேசவேண்டியது நிறைய உண்டு. வா உடனே!"

தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட செய்தி தெரியாமல் தளபதி வாடி ஹாட்டாட்டை சந்திக்க ஆயத்தமானான் கார்லோஸ்.

அதற்கிடையே கார்லோஸுக்கு பாதகமான ஒரு சம்பவம் நடந்தது.

கார்லோஸ் பாரிசில் இருந்தபோது இலண்டனில் இருந்த நடியாவிடம் போலிக் கடவுச்சீட்டு ஒன்று தயார் படுத்தி அனுப்பச் சொல்லியிருந்தான்.

அன்ரன் பௌலியர் என்ற பெயரில் ஈக்குவேடர் நாட்டு கடவுச்சீட்டு ஒன்றை தயார் செய்து நடியா அனுப்பிவைத்தாள்.

தனது நண்பர் ஒருவரின் முகவரி சொல்லி, அதற்கு அனுப்புமாறுதான் கார்லோஸ் கூறியிருந்தான்.

நடியா பதட்டத்தில் முகவரியைத் தவறாக எழுதிவிட்டாள்.

முகவரி தவறாக இருந்தமையால் பார்சல் தலைமைத் தபாலகத்திற்கு திரும்பியது. பார்சலில் அனுப்பியவர் முகவரி இல்லையென்பதால் உறையை உடைத்துப் பார்த்தார்கள்.

ஈக்குவேடர் கடவுச்சீட்டு இருந்ததைக் கண்ட தலைமைத் தபாலகத்தினர் அதனை ஈக்குவேடர் தூதரகத்திற்கு அனுப்பிவைத்தார்கள்.

கடவுச்சீட்டு போலியானது என்று கண்டுபிடித்த ஈக்குவேடர் தூதரகம் துரித நடவடிக்கையில் இறங்கியது.

சர்வதேசப் பொலீசான 'ஸ்கொட்லண்ட் யார்ட்' பிரிவிடம் கடவுச் சீட்டு போய்ச் சேர்ந்தது.

ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசாருக்கு கடவுச் சீட்டில் இருந்த படத்தைப் பார்த்ததும் மின்சாரம் பாய்ந்தது போன்ற அதிர்ச்சி.

"இவன்தான் கார்லோஸ்!" உலகெங்கும் அந்தப் புகைப்படப் பிரதிகள் பறந்தன. சர்வதேசப் பத்திரிகைகள் யாவற்றிலும் கார்லோஸின் புகைப்படம் வெளியாகியது.

அந்தப் புகைப்படத்தோடு முதன் முதலாக கார்லோஸுக்கு செய்தி நிறுவனங்களும், பொலிசாரும் ஒரு பொதுவான பட்டத்தைச் சூட்டினார்கள்.

அந்தப் பட்டம்–

**'குள்ளநரி'. (ஜக்கோல்)**

**'கார்லோஸ் ஒரு குள்ளநரி!'**

(பின்னர் கார்லோஸின் கதையை வைத்து ஹொலிவூட்டில் எடுக்கப்பட்ட படத்திற்கும் 'டே ஒஃப் த ஜக்கோல்' என்று பெயர் சூட்டப்பட்டது.)

புகைப்படம் உலகெங்கும் வெளியாகி விட்டதால் கார்லோஸ் தனது தோற்றத்தை முதன் முதலாக மாற்றிக்கொண்டான்.

முடியை ஒட்ட வெட்டிக் கொண்டான். சின்னதாய் ஒரு மீசை வைத்துக் கொண்டான்.

தளபதி வாடி ஹாட்டாட்டிடமிருந்து அல்ஜீரியா நாட்டு கடவுச் சீட்டு ஒன்றும், செலவுக்கான பணமும் வந்து சேர்ந்தது.

அதேநேரம் கார்லோஸ் இலண்டனில் இருக்கும் செய்தி ஃபிரான்ஸ் உளவுத் துறைக்கும் எட்டியது.

தமது நாட்டில் மூன்று கொலைகளை செய்துவிட்டு மாயமாக மறைந்தவனை மன்னித்து மறந்துவிட ஃபிரான்ஸ் அரசு தயாராக இல்லை.

இலண்டனில் வந்திறங்கினார்கள் ஃபிரான்ஸ் உளவுத் துறையினர்.



எவ்வாறான திறமைசாலிக்கும் ஒரு பலவீனம் இருக்கும். அந்தப் பலவீனமே சில சமயங்களில் அவனது காலை வாரி விடும்.

கார்லோஸின் பலவீனம் பெண்கள். தினம் ஒரு விதமாக தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டபோதும், தனது பழக்கத்தை மாற்ற அவனால் முடியவில்லை.

இலண்டன் நகர இரவு கேளிக்கை விடுதிகளில் கார்லோஸ் காணப்பட்டான்.

மோப்பம் பிடித்துவிட்டது ஃபிரான்ஸ் உளவுத் துறை. கார்லோஸ் தொடரப்பட்டான்.

தொடரப்படுவது தெரியாமலேயே அல்ஜீரியாவுக்கு தனது போலிக் கடவுச் சீட்டில் போய் இறங்கினான்.

அங்கிருந்து தளபதி வாடி ஹாட்டாட்டை சந்திக்க யேமன் நாட்டுக்குச் செல்வதே திட்டம்.

அல்ஜீரியாவில் சில நாட்கள் தங்க வேண்டி ஏற்பட்டது. அங்கும் கார்லோஸ் தனது பழக்கத்தை மாற்றவில்லை. பலவீனம் அழைத்தது.

அல்ஜீரியாவின் இரவு விடுதிகளில் கார்லோஸ் பொழுதுகளைக் கரைத்துக் கொண்டிருந்தான்.

அல்ஜீரியாவின் அல்ஜீயேர்ஸ் நகரில் இருந்து ஃபிரான்ஸ் உளவுத் துறையை சேர்ந்த ஒருவன் ஃபிரான்சிலுள்ள தனது மேலதிகாரியிடம் போனில் கேட்டான்:

"கார்லோஸை தீர்த்துக் கட்ட பொன்னான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. செய்யலாமா?"

"எங்கே இருக்கிறான் அந்த குள்ளநரி?"

"அருகில்–மிக அருகில். இரவு விடுதியில் ஓர் அழகியின் மடியில். சுடுவது சுலபம். சுட்டுவிட்டு தப்புவது அதைவிடச் சுலபம்."

"பொறு. அடுத்த அரை மணி நேரத்தில் முடிவு சொல்கிறேன். மீண்டும் தொடர்பு கொள்!"

அடுத்த அரை மணி நேரத்தில் ஃபிரான்சிலிருந்து வரப்போகும் முடிவைப் பொறுத்தே தனது ஆயுட்காலம் தீர்மானிக்கப்படப் போவது தெரியாமல், அழகியின் மடியில் தலைவைத்து, தன் முகத்துக்கு நேராக உயர்ந்து தாழும் அழகுகளை இரசித்துக் கொண்டிருந்தான் கார்லோஸ்.

**(தொடர்ந்து வரும்)**

**எழுதுவது – ரசிகன்**

---

## ரவுண்டப் "என்ன செய்யலாம்? சொல்லுங்கள்"

## ஒரு காதலரின் உருக்கமான கேள்வி



கொழும்பு காலிமுகத் திடலில் கால் வைக்க இடமில்லாமல் சனத்திரள் கூடுவது இப்போதெல்லாம் கிடையாது.

"காதல் ஜோடிகள் வருகையும் வீழ்ச்சி அடைந்துள்ளதும் வருத்தமான செய்தி" என்கிறார் காலிமுகத்திடலில் குளிர்பானக் கடை நடத்தியவர். துணிச்சலான காதலர்கள் மட்டும் காலிமுகத்திடலில் காற்று வாங்க வரும் சாக்கில் தங்கள் வழக்கமான கடமைகளையும் செய்துவிட்டுப் போகிறார்கள்.

"தமிழ் காதலர்கள் பாடுதான் திண்டாட்டம். அடையாள அட்டைப் பிரச்சனைதான் தலைநகர தமிழ் காதலின் முதல் எதிரி" என்கிறார், முன்பெல்லாம் வாரத்தில் குறைந்தது மூன்று நாட்களாவது காலிமுகத் திடலுக்கு காதல் விஜயம் செய்யும் உதயன். கொழும்பில் தனியார் கம்பனி ஒன்றில் நல்ல சம்பளம் வாங்கும் உதயனுக்கு காலிமுகத் திடலை இழந்ததுதான் வாழ்க்கையில் பெரிய சோகம்.

"வீட்டில் பேசி லைசன்ஸ் பெற்றுக் காதலிக்கலாமே!" என்று கேட்டோம். 'அதில் ஒரு திரில் இருக்காது' என்கிறார் உதயன்.

பாராளுமன்றம் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுரம் புதிய காதலர் மைதானமாக மாறிவிட்டது. கூட்டம் திரள ஆரம்பித்து விட்டது.

முன்பெல்லாம் கார்களிலும் வேன்களிலும் வந்து உள்ளேயேயிருந்து காதலித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது கீழேயே இறங்கி காதலிக்கத் தொடங்கி விட்டார்கள்.

காற்றாடவும், தொந்தி குறையவும் நடப்பவர்கள் சிலருக்கு காதல் காட்சிகள் இலவசமாக பார்க்கக் கிடைப்பது நல்ல பொழுது போக்கு. குடும்பத்தோடு வருபவர்களுக்கு மகா சங்கடம். சில காதலர்களுக்கு விவஸ்தையே இருப்பதில்லை. தாங்கள் நான்கு சுவர்களுக்குள் இருப்பதாக கற்பனையில் நினைத்துக் கொள்கிறார்களோ என்னவோ?!

உள்ளூரப் பயந்துகொண்டுவரும் காதலர்களும் துணிச்சலான காதலர்களைப் பார்த்து தைரியம் பெற்றுக் கொள்கிறார்கள்.

முன்பெல்லாம் குடை ஒரு திரையாக இருந்தது. தற்போது மரநிழல் காதல்கள் சகஜமாகிவிடுவதால் குடைகூட ஒரு நொந்தரவு என்று அதுவும் கிடையாது.

"இதிலே வெட்கப்பட என்ன இருக்கிறது.?" என்று உண்மையாகவே ஆச்சரியப்படும் லியனகேக்கு இன்னும் 20 வயதேயாகவில்லை. "உங்களுக்கு பயமாக இல்லையா?" என்று, லியனகேயின் காதலியைக் கேட்டால்: "ஆரம்பத்தில் இருந்தது. இப்போதில்லை. ஏன் பயப்பட வேண்டும்?" என்று திரும்பிக் கேட்கிறார். தலைநகர பிரபல கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருக்கிறார் இவர்.

இதனை காலிமுகத்திடலுக்கு வார இறுதி நாளில் வரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான பொன்சேகாவிடம் கூறி அபிப்பிராயம் கேட்டோம். "அவர்கள் ஏன் பயப்படவேண்டும்? பிள்ளைகளோடு வர நாங்கள்தான் பயப்பட வேண்டியிருக்கிறது." என்கிறார்–கொஞ்சம் சூடாக.

பெரேரா வயது 22. அரச அலுவலகம் ஒன்றில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். அவர் ஒரு நியாயமான கேள்வியைக் கேட்டுவைக்கிறார். "காலிமுகத்திடலில் கூட்டம் அதிகம் என்பதனாலும், அங்கு வருவோருக்கு ஏன் தொல்லை என்றும் ஒரு பொது நோக்கத்தோடு நாம் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பக்கம் ஒதுங்கிக் கொண்டோம். இப்போது இங்கேயும் கூட்டம் அதிகமாக வரத்தொடங்கிவிட்டது. எங்களை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? ஒரு நாள் கூட இவளைப் பார்க்காமல் இருக்க என்னால் முடியாது. என்ன செய்யலாம்?" என்று சீரியஸாகவே கேட்கிறார்.

பார்த்துக் கொண்டிருக்க மட்டும் தான் வருகிறீர்களா? என்று கேட்டிருக்கலாம். கேட்கவில்லை.

---

## மது குடித்தால் போகுமா?

### ஹலோ டாக்டர்

"வணக்கம் டாக்டர்! இன்று முதல் கேள்வி, மலேரியாக் காய்ச்சல் தொடர்பானது."

"நல்லது. கேளுங்கள்."

"மலேரியாக் காய்ச்சல் சிலருக்கு விட்டு விட்டு வருடக் கணக்கில் வருவதாகச் சொல்கிறார்கள். அது ஏன்?"



"மலேரியா கிருமிகள் கொசுக்கள் (நுளம்புகள்) மூலம் ஒரு மனிதனின் உடலில் செலுத்தப்படும் போது, அந்தக் கிருமிகள் இரத்தத்தின் மூலம் ஈரலை அடைகின்றன. ஈரலில் இந்தக் கிருமிகள் பெருகி இடையிடையே ஈரலில் இருந்து வெளியேறி இரத்தத்தில் சிவப்பு அணுக்களைத் தாக்கும்போதுதான் காய்ச்சல் வருகிறது.

ஈரலில் உள்ள கிருமிகள் பல வருடங்கள் உயிரோடு இருக்கலாம். அவை இடையிடையே இரத்தத்தில் சேரும்போது அவ்வப்போது காய்ச்சல் வரும். இதனால்தான் மலேரியாக் காய்ச்சல் ஆபத்தான ஒன்றாகக் கருதப்படுகிறது."

"ஆபத்தான மலேரியாவை ஒழிக்க மக்களின் பங்கு என்ன டாக்டர்?"

"நம்முடைய வீடுகளைச் சுற்றிலும் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டின் அருகிலுள்ள சிறிய குப்பைத் தொட்டிகள், தேங்காய் மூடி ஆகியவற்றில் சிறிது தண்ணீர் இருந்தாலும் கொசுக்கள் உற்பத்தியாகிவிடும். வீடுகளில் காற்றோட்டம், சூரிய ஒளி வருவதுபோல் செய்தால் கொசுக்கள் வராது. படுக்கும்போது கொசுவலை உபயோகிப்பது நல்லது."

"இது, ஆஸ்துமா பற்றிய கேள்வி. ஆஸ்துமா உள்ள பெண்கள் கர்ப்பம் தரிக்கலாமா? அதனால் குழந்தைக்கு ஆஸ்துமா வருமா?"

"கர்ப்பம் தரிக்கலாம். ஆனால் அதற்கு முன் மருத்துவரின் ஆலோசனையைக் கேட்பது அவசியம். அவருடைய ஆலோசனைப்படி மருந்து மாத்திரைகள் சாப்பிட்டுவந்தால் குழந்தை நல்ல படியாகப் பிறக்கலாம். குழந்தைக்கு ஆஸ்துமா வராது என்று உறுதியாக சொல்ல முடியாது.

அப்பாவுக்கு ஆஸ்துமா இல்லாமல் இருந்து தாய்க்கு நூறுசத வீதம் ஆஸ்துமா இருக்கிறது என்றால், பிறக்கும் குழந்தை அப்பாவினுடைய இரத்தப் பிரிவையும், பண்பையும் முழுமையாகப் பெற்றிருந்தால் ஆஸ்துமா இருக்காது. இருவருடைய பண்பையும் கலந்து பிள்ளை பிறந்தால் ஆஸ்துமாவின் அளவு குறைவாக இருக்கும். குழந்தை வளர்ந்து 12 வயதாகும் போது நோய் எதிர்ப்பு சக்தி அதிகமானால் அப்படியான ஆஸ்துமா மறைந்து போகும். அம்மாவின் இரத்தப் பிரிவை குழந்தை முழுமையாக பெற்றிருந்தால் ஆஸ்துமா தாயைப் போலவே இருக்கும்."

"மது அருந்துவதால் ஆஸ்துமா சரியாகிறதாமே, உண்மையா டாக்டர்?"

"மது அருந்தும் போது உடலில் உள்ள நரம்புகள் கொஞ்சம் விரிவடையும். அதேபோல மூச்சுக் குழலில் உள்ள நரம்புகளும் விரிவடையும். இதனால் சிரமமின்றி மூச்சுவிட முடியும். தவிர போதையின் காரணமாகவும் இந்த சிரமங்கள் தெரிவதில்லை. இதை சிலர் தவறாக எடுத்துக்கொண்டு ஆஸ்துமாவுக்கு மது அருந்தினால் சரியாகிவிடும் என்கிறார்கள்."

"நன்றி டாக்டர். கடைசிக் கேள்வி கஷ்டமான கேள்வி."

"அப்படியென்ன கேள்வி?"

"ஒரு ஜோக்!"

"டாக்டரிடம் நர்ஸ் சொன்னாள்" "நீங்கள் ஒப்பரேசன் செய்த மூன்றாவது கட்டில் நோயாளி பிழைத்துவிட்டார்." டாக்டர் அலட்டிக் கொள்ளாமல் சொன்ன பதில்: "அப்படியானால் அவருக்கு ஒப்பரேசன் செய்யும்போது ஏதோ தவறு நடந்திருக்கும்."

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# உண்டு களித்துத் தொந்தி பெருத்தவர்!

தனது சமையலறைக்குள்ளும், படுக்கையறைக் குள்ளும் உலகம் சுருங்கிவிட்டதாக நினைத்ததுதான் மிஸ்டர் ரொமி செய்த மகா தப்பு.

பாட்டன் சொத்தாக நிறையப்பணம் இருந்தும்கூட ரொமியிடம் வக்கமான எந்தக் கெட்டப் பழக்கமும் கிடையாது. ஒரே ஒரு ஆசைதான் அவருக்கு இருந்தது. சாப்பிடவேண்டும். பியர் குடிக்க வேண்டும். தூங்க வேண்டும். மீண்டும் சாப்பிட வேண்டும். மீண்டும் பியர் குடிக்க வேண்டும்.

உண்டார், உண்டார் உண்டுகொண்டே இருந்தார். ஒரே வருடத்தில் குண்டானார். நடக்கவே முடியவில்லை. சாப்பாட்டைக் குறைக்கலாம் என்றால் நாவடங்க மறுத்தது. ருசி கண்ட வயிறு பசியென்றது. படுக்கையில் இருந்து அசையவே முடியாத நிலைவரை ரொமியால் உணவு நிறுத்தம் செய்யமுடியவில்லை.

2 சட்டி பொரித்த உருளைக்கிழங்கு, 6 முட்டைகள், 1 பக்கெற் பேகன் இறைச்சி, 10 துண்டு மாட்டிறைச்சிப் பொரியல், 4 பெரிய பாண், அதற்குள் காய் கறிகள். இவை காலைச் சாப்பாடுமட்டும்.

மதியம், இரண்டு பெரிய சட்டியில் உணவு, ஒரு லிட்டர் பால். ஒரு பெரிய பொரித்த கோழி. ஆக ஐந்து முட்டைகள்.

இரவு; 12 துண்டு கோழி, 2 சட்டியில் பொரித்த உருளைக் கிழங்கு, மாட்டிறைச்சிப் பொரியல். மற்றும் பாண்.

அதைவிட இடைப்பட்ட நேரத்தில் உருளைக் கிழங்கு சிப்ஸ் சாப்பிடுவது என்றால் ரொமிக்கு கொள்ளை ஆசை. ஆகக் குறைந்தது 5 பக்கெற்றுக் களை காலியாக்கிவிடுவார்.




படுக்கையறையிலிருந்து மருத்துவமனைக்குச் செல்ல 12 உதவியாளர்கள் கட்டிலுடன் தூக்கிச் செல்கின்றனர்.

ஒரு கட்டத்தின் பின்னர் ரொமிக்கு மூச்சுவிட முடியாமல் போய்விட்டது. 700 இறாத்தல் எடையை தூக்கிக் கொண்டு நடக்கவே முடியாத நிலை.

டாக்டர்கள் வந்தனர். 12 மருத்துவ உதிவியாளர்கள் இருந்தால்தான் ரொமியை பத்திரமாக அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றிச் செல்லலாம் என்ற நிலை. உதவியாளர்கள் வந்தனர். ரொமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

உடல் எடையைக் குறைக்கும் விசேஷ நிபுணர்கள் உதவியுடன் 4 மாதச் சிகிச்சை. நாவடக்கம் கடுமையான நிபந்தனை. பயிற்சியும் கொடுக்கப் பட்டது. முயற்சி பலித்தது. 4 மாதத்தில் ரொமியின் எடை 350 றாத்தலுக்கு குறைந்து விட்டது.

முக்குமுட்ட ஒரு பிடி பிடிப்பவர்களுக்கு ரொமிபட்ட கஷ்டம் ஒரு உதாரணமாக இருக்கட்டும். உண்டு குண்டாகும் தொல்லைக்கு உண்டோ நிகர்.



எடை 350 இறாத்தலான பின்பு எழுந்து நிற்க முடிகின்றது.

## எல்லாமும் என் அம்மாதான்




படத்தில் இருப்பது நீர்நாய். அதன் முதுகில் தொற்றியிருப்பது குட்டி. இந்தப் படம் எடுக்கப்பட்ட தினத்தன்றுதான் குட்டி பிறந்தது. மனிதர்கள் என்றால் பிரசவம் முடிந்தவுடன் தாயையும், சேயையும் வாகனம் ஏதாவது ஒன்றில் வீட்டுக்கு அழைத்துச் செல்லமுடியும். நீர்நாய் தனது குட்டியை தானே ஒரு வாகனமாகிச் சுமந்து செல்கிறது. எல்லாமும் அம்மாதான்.



## கொடையான குடை

முல்லைக் கொடிக்கு தனது தேரைக் கொடுத்து விட்டு பொடி நடையாக அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான் மன்னன் பாரி. ஒரு தேரைக் கொடுத்தால் நூறு தேர் செய்யும் வசதியிருந்தது பாரிக்கு. வசதிக்கு எற்பதான் வள்ளல்தனமும் இருக்கும். படத்தில் இருக்கும் காட்சி கனடா ரொரண்டோ வீதியில் 'கிளிக்'கியது. வீதியோர நாய் ஒன்று வெய்யிலில் கிடந்து படும் அவதி பொறுக்காமல் தனது குடையை நிழலாகக் கொடுத்தார் ஒருவர். அதைப்பார்த்துவிட்டு இன்னொருவர் தனது வீட்டிலிருந்து ஒரு மெத்தையைக் கொண்டுவந்து போட்டுவிட்டுப் போனார். கொடையான குடையும், மெத்தையும் தந்த மனிதர்கட்கு நன்றி. நாய் நன்றியுள்ளது.



## தொ.... தொ.... தொலைபேசி

குட்டி குட்டித் தொலைபேசி எல்லாம் பாவனைக்கு வந்தவிட்டன. சட்டைப்பையில் இருந்தும் 'ரிங்' பண்ணும். சமயத்தில் எங்கே வைத்தோம் என்றும் தேடவேண்டியிருக்கும். அவ்வாறாகி விட்ட தற்காலத்தில் சுவிற்சர்லாந்தில் மாபெரிய தொலைபேசி ஒன்று பாவனைக்கு வந்துள்ளது. படத்தில் இருப்பது விளையாட்டுக்குச் செய்யப்பட்டதல்ல. உண்மையான தொலைபேசி. பைன் மரத்தால் செய்யப்பட்டது 8.8 மீற்றர் நீளம். 6.6 மீற்றர் அகலம். 3.87 மீற்றர் உயரம். எடை, 6 தொன். சுவிற்சலாந்தில் ஏற்கனவே 'புரொண்டோ' என்னும் பெரிய தொலைபேசி இருக்கிறது. அதைவிட இந்தப் புதிய தொலைபேசி 40 மடங்கு பெரியது. கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடிக்கப் போகிறது.

## மடக்கும் மின்சாரக் கார்

எந்தக் காரிலும் இல்லாத ஒரு வசதி இந்தக் காரில் இருக்கிறது. மின்சாரம் தீர்ந்துவிட்டால் மடித்து எடுத்துக் கொண்டு வீடு சென்றுவிடலாம்.

சிறிய கார் என்றாலும் இதன் வேகம் மணிக்கு 40 கிலோமிற்றர். ஒரு முறை இதன் பற்றரியை சக்தியேற்றினால் 30 கிலோமீற்றர் வரை செல்ல முடியும். இதன் எடை 180 கிலோ மட்டும். இருவர் அமர்ந்து செல்லக் கூடியது.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி மக்ஸ் ஸ்ராம் என்பவரே இதனை வடிவமைத்துள்ளார்.



www.padippakam.com

*கமலுடன் 'சதிலீலாவதி' படத்தில் நடித்துள்ள ரமேஷ் அரவிந்த், அடுத்து கமல் கதாநாயகனாக நடிக்கும் 'கண்டேன் சீதையை' படத்திலும் கமலுடன் இணைந்து நடிக்கவுள்ளார்.

*ஒளிப்பதிவாளர் அப்துல் ரகுமான் முதன் முறையாக இயக்குநராக அறிமுகமாகும் 'மகுக' படத்தைத் தயாரிப்பவர்களில் ஒருவர் ஷீலா சிவா. இவர் இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரனின் மனைவி ஷோபாவின் சகோதரி.

*ஆர்.கே.செல்வமணியின் 'அடிமை', பிரபுவுடன் 'சிவசக்தி', இரட்டை வேடத்தில் நடிக்கும் 'சேனாதிபதி' ஆகிய படங்களைத் தொடர்ந்து தனது மனேஜர் ராமநாதன் தயாரிக்கும் படமொன்றில் நடிக்க விருக்கிறார் சத்யராஜ்.

*ராஜ்கிரண் நடிக்கும் 'பொன்னு விளைகிற பூமி' படத்தை இயக்குகிறார் புதிய இயக்குநரான கிருஷ்ணன் என்பவர். இவர் பிரியாசகியின் பல படங்களில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்திருக்கிறார்.

*தெலுங்கில் தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'காரானா புல்லுடு' தமிழில் 'கிலாடி ராஜா' என்ற பெயரில் மொழி மாற்றப் பட்டு வருகிறது. நாகார்ஜுனா-ரம்யா-ஆம்னி ஆகியோர் இப்படத்தில் நடித்துள்ளனர்.

*மதால்'ரண்ட மூவின் இன்டர்நஷனல் என்ற நிறுவனம் சார்பில் அண்மையில் பிலிம் சேம்பரில் 'வளர்ப்பு மகன்' என்ற பெயரைப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*ஏ.வி.எம்மின் 'மின்சாரக் கனவு' படத்தின் இயக்குநரான ராஜீவ் மேனன், நூற்றுக்கும் அதிகமான விளம்பரப் படங்களை இயக்கியுள்ளார்.

*மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராய் நடிக்கிறார் என்பது அறிந்த செய்தி. ஐஸ்வர்யா ராயுடன், இந்தி நடிகை தபுவும் இப்படத்தில் நடிக்கிறார்.

*நடிகர் திலகம் நடித்த 'நெஞ்சங்கள்', ரஜினி நடித்த 'கை கொடுக்கும் கை' ஆகிய படங்களைத் தயாரித்த நடிகர் விஜயகுமார் இப்போது புதிய படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்.

*நீண்ட இடைவேளைக்குப் பின்னர் சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் நடிக்கும் இந்திப் படத்தை இயக்கும் வாய்ப்பு பிரபல இந்தி இயக்குநர் இந்திரகுமாருக்குக் கிடைத்துள்ளது. இந்திரகுமார் 'பேட்டா', 'தில்', 'ராஜா' ஆகிய மூன்று வெற்றிப் படங்களை இயக்கியவர்.

# மினி சினி

ஆடுவதால் புகழ்பெற்ற இளம் புயலின் காதல் விவகாரம் வீட்டில் பெரும் புயலைக் கிளப்பியிருக்கிறது. நடன ஆசிரியரான தந்தை மகனிடம் பேசுவதேயில்லையாம். அதனால் தந்தை இயக்க தனயன்கள் இருவரும் நடிக்கவிருந்த படம் கைவிடப்பட்டுள்ளதாம். தற்போதும் தனது காதலி 'ரம்'மை சந்தித்து வருகிறார் இளம் புயல். காதலுக்கு வேலியில்லை. காதலன்-காதலன்தான்.

ஆக்ஷன் கிங் நடித்து வெளியான படத்தில் 'ஊர்' நடிகையின் பெயரை விளம்பரத்தில் ஓரம் கட்டிவிட்டார்கள். கேட்டால் 'ஆக்ஷன் கிங்' போட்ட உத்தரவு என்கிறார்கள்.

ஆனந்தமான வில்லன் நடிகருக்கு கார் ஒன்றை பரிசாகக் கொடுத்திருக்கிறார் 'நாட்டாமை' நாயகன். முன்னர் 'நாட்டாமை' நாயகனை கண்டபடி திட்டித் தீர்த்தவர் ஆனந்தமான வில்லன். பழசை மனதில் வைக்காமல் பரிசை கொடுத்தது பெரிய மனசுதானே.

பம்பாய் வரவுகள் என்றால் ஏன் இந்த தயாரிப்பாளர்கள் ஜொள்ளு விடுகிறார்களோ, தெரியவில்லை. நம்மைவிட அவர்கள் எதில் உசத்தி? இப்படியான பெருமதியான கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொண்டிருப்பவர் அழகிப் போட்டி புகழ் கஸ்தூர நடிகைதானாம். வருத்தமிருக்காதா பின்னே?

## காதோடு சொல்லுகிறோம்



## முகப்பில்

காஞ்சன் (இந்தி நடிகை)
(படம்: போக்கிரிக் காதலன்)



விபரீ...

## பெயர் சொல்லும் 'முஸ்தபா'

தைப்பொங்கல் திருநாளுக்கு திரைக்கு வரப்போகும் படம் 'முஸ்தபா'.

ஆச்சாரத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கும் பிராமணக் குடும்பம் ஒன்றுக்கு சில விஷமிகளால் தொல்லைகள் ஏற்படுகின்றன. அக் குடும்பம் தவித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அவர்கள் வீட்டுக்கு வந்து பலவந்தமாக குடியேறுகிறான் 'முஸ்தபா' பின்னர் என்ன நடக்கிறது? அது 'முஸ்தபா' திரைக்கு வந்தால்தான் தெரியும்.

'கிலாப்பேரி பாண்டிக்குப் பின்னர் நெப்போலிய னுக்கு பெயர் சொல்லுமளவில் படங்கள் எதுவும் அமையவில்லை. அந்தக் குறையை 'முஸ்தபா' போக்கி விடும் என்று நம்புகிறார் நெப்போலியன்.

லட்சமிக்கும் காத்திரமான பாத்திரம். நெப்போலியனின் ஜோடி ரஞ்சிதா. இயக்கம், ஆர். அரவிந்தராஜ்.

## விஜய் நடிகரானது எப்படி?

விஜய் நடிகரானது எப்படி? அப்பாவும், இயக்குநருமான எஸ்.ஏ. சந்திரசேகரன் சொல்வதைக் கேளுங்கள். "எனக்கு அவன் படிக்கணும் என்றுதான் ஆசை. அவனை டாக்டருக்கு படிக்க கல்லூரியில் சேர்த்துவிட்டேன். ரெண்டு நாளா வீட்டுக்கு வரேல்லை. கல்லூரிக்கும் போகவில்லை. மூணாவது நாள் வந்தான். அவனுக்கு நடிக்க ஆசையாம். 'நீயா எனக்கு வாய்ப்புத் தாறியா, அல்லது வெளியே போய் வாய்ப்புக் கேட்கட்டுமா' என்று மிரட்ட ஆரம்பிச்சான். தோளுக்கு மேல் வளர்ந்துட்டான். நானும் அவனை தோழனா நினைச்சு நடிக்க வைச்சுட்டேன்."

## துணிச்சலான பூஜாபட்

'கல்லூரி வாசல்' படத்தின் பின்னர் பூஜாபட் தமிழ் படவுலகிலும் கோலோச்சுவார் என்று ஒருவர் உறுதியாகச் சொல்கிறார். அவர்தான் கல்லூரி வாசல் இயக்குநர் பவித்ரன்.

இந்திப் படவுலகில் எதற்கும் துணிந்தவர் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் பூஜாபட். கல்லூரி வாசலும் அதை நிரூபிக்கப் போகிறதோ தெரியவில்லை.

தைப்பொங்கல் வெளியீடாக கல்லூரி வாசலை திரையிடத் திட்டமிட்டுள்ளார்கள். பூஜாபட் தவிர தேவயானி என்னும் இந்தி நடிகையும் கல்லூரி வாசலில் கவர்ச்சி காட்டுகிறார்.

கல்லூரி வாசலில் பிரசாந்துடனும், அஜித் குமாரோடும் டூயட் பாடியிருக்கிறார் பூஜாபட். இருவரில் யாரைக்காதலிக்கிறார்? அதுதான் சஸ்பென்ஸ்.

## அன்று அபிராமி இன்று ரங்கீலா

ரங்கீலா படத்தின் சூப்பர் வெற்றியால் ரங்கீலாவைத் தழுவி பல புதிய படங்கள் தயாராகிவருகின்றன. (சுடச்சுடக் காப்பிகள்)

அது ஒருபுறமிருக்க, நடிகை அபிராமி தனது பெயரை ரங்கீலா என்று மாற்றிக் கொண்டுவிட்டார். முரளி நடிக்கும் 'ரத்னா' படத்தில் இரண்டு கதாநாயகிகள். ஒருவர் சங்கீதா இன்னொருவர் ரங்கீலா.

சித்திரைப் புத்தாண்டுக்கு திரையிடுவதற்காக வெகு வேகமாக தயாராகிவருகிறது 'ரத்னா'. 'நாட்டாமை' படத்தில் இணை இயக்குநராக இருந்த கே.இளஞ்செயன் இயக்குநராக பதவி உயர்வு பெறுகிறார். ஜெயசூர்யா என்னும் புதிய இசையமைப்பாளரும் 'ரத்னா' மூலம் அறிமுகமாகிறார். ஒளிப்பதிவாளரும் புதியவர்தான். திரைப்படக் கல்லூரியில் இருந்து நேராகவே வந்திருக்கிறார் ஏ.கிருஷ்ண சந்தர்.

## டாட்டா காட்ட ஆசை

'வீட்ல விசேஷங்க' படத்தில் நடித்த பிரகதி சரியான வாய்ப்புக்கள் இல்லாமல் போனதால் திருமணம் செய்து கொண்டார். மோகனா அமெரிக்கா சென்றுவிட்டார். தற்போது வாய்ப்புக்கு அலைந்து கொண்டிருக்கும் நடிகைகளும் சரியான புளியங்கொம்பு கிடைத்தால் சினிமாவுக்கு டாட்டா காட்டலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களாம்.

பிரகதி மாங்காய் சாப்பிடுவதாக லேட்டஸ்ட் தகவல். வாரிசு உருவாகிறது.

## ரஜினியின் கதை...

தொட்டாச்சிணுங்கி படத்தில் ர... புகழ்பாடும் பாடல் இடம்பெற்றுள்...

ரஜினி ரசிகராக தோன்றி நடித்தி... பிரபு தேவா மாதிரியே இருக்கிறா...

இப்போது 'திரும்பிப்பார்' ... கொண்டிருக்கிறது. இராமநாரா... கதாநாயகனாக நடிக்கிறார். ... வரலாறு மாதிரி கதை இருக்கிற... முதல்வராக மாறுகிறார் சரவண...

ரஜினி நடிக்காமலேயே ரஜினி... கொண்டிருக்கிறார்கள். கில்லாடி...

## துணிக்கைக்கு வே...

ராம்கி - நெப்போலியன் இ... 'ராஜாளி' படத்தில் துணிக்கைக் கு... சக்கமான வேலை இருக்கப் போகி... கவர்ச்சியை திரட்டித் தரப்போகி... செல்வமணி.

இது வரை எடுக்கப்பட்ட ... அனுராதா அதிரடிப் போஸ் ப... கலக்கியிருக்கிறார். அதென்னவோ ... அனுராதா என்ற பெயர் வந்தாலே ... வந்துவிடுகிறது முன்பும் ஒரு அனு... கவர்ச்சி நடனத்தில் கொடிகட்டி... பறந்ததை மறந்திருக்க மாட்டார்க... இப்படியான விஷயங்களையெல்லா... மறக்க முடியுமா) புது அனுராதா வுக்கு ராஜாளிக்குப் பிறகு யோகம் பிறக்கலாம். எது எப்படியோ, செல்வமணிக்கும் துணிக்கைக் குழுவுக்கும் கமிறுப்பு காத்திருக்கிறது.





பிரசாந்த்-பூஜாபட்
படம்: கல்லூரி வாசல்

## அம்மனாக ரம்யா

கவர்ச்சிப் பொம்மையான ரம்யா கிருஷ்ணனை அம்மனாக நடிக்கவைக்க எத்தனை துணிச்சல் வேண்டும். தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்திரிக்கு அந்தத் துணிச்சல் இருக்கிறது.

'அம்மன்' படத்தில் ஆவேசமாக அம்மனாகத் தோன்றுகிறார் ரம்யா கிருஷ்ணன். அம்மன் பக்தையாக நடிக்கிறார் சவுந்தர்யா. தெலுங்கில் தயாரிக்கப்பட்டுள்ள அம்மன் தமிழிலும் மொழி மாற்றப்பட்டுள்ளது.

படத்தின் ஒவ்வொரு காட்சியும் கம்ப்யூட்டர் கிராபிக் என்னும் நவீன தொழில் நுட்ப முறையில் படமாக்கப்பட்டுள்ளது. அம்மன் ஆக்ரோசமாக தோன்றும் உச்சக்கட்ட காட்சி பிரமிப்பாக படமாக்கப்பட்டுள்ளது. பிரபல இயக்குநர் கோடி ராமகிருஷ்ணா இயக்கியுள்ளார்.

## இயக்குநரின் வேதனை

அந்த நடிகரோடு நடிக்க ஆசை. அந்த இயக்குநரின் படத்தில் நடிக்க ஆசை என்றெல்லாம் பேட்டி கொடுப்பார்கள் சில நடிகைகள். ஆனால் ஒப்பந்தம் செய்யப் போனால் வேறு விதமாகி விடுகிறார்கள். இப்படி வேதனையைக் கொட்டியிருக்கிறார் ஒரு பெரிய இயக்குநர். அவர் வேறு யாருமல்ல, பாரதிராஜாதான். அந்திமந்தாரை படத்தில் நாசரின் ஜோடியாக நடிக்க பானுப்பிரியா மறுத்ததுதான் பாரதிராஜாவின் வேதனைக்கு காரணம்.

## பம்பாய் ராசி

பிரபு தேவாவுடன் பம்பாய் நடிகைகளைப் போட்டு படம் எடுத்தால்தான் ஹிட்டாகும் என்று நினைக்கிறார்கள் தயாரிப்பாளர்கள். நக்மாவுடன் காதலன் ஹிட். ஆனால் ரோஜாவோடு ராசய்யா அவுட். ஷில்பா ஷெட்டியோடு நடித்துவரும் மிஸ்டர் ரோமியோ சித்திரைப் புத்தாண்டுக்கு வெளிவருகிறது. கஜோலுடன் மின்சாரக் கனவில் நடித்துக் கொண்டிருக்கிறார். அடுத்து எந்த பம்பாய் நடிகையை ஜோடியாகப் போடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

## அரசியல் ஆசை

நடிகைகளில் அரசியலுக்கு வரும் ஆசையுள்ளவர் ரஞ்சிதா. அரசியலை ஒரு பாடமாகப் படித்திருக்கிறாராம். ரஜினி கட்சி தொடங்கினால் ரஞ்சிதா சான்ஸ் கேட்டாலும் கேட்கலாம். ஜாக்கிரதை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ...மான போட்டி

...மான மாணவி. ஒரு பெண் இளம் சந்நியாசிப் பெண். ...காதலித்துக் காட்டினால் ரூபா சுதாகர். போட்டியில் குதிக் மூன்று பெண்களையும் தன் ...ஜெகபதிபாபு செய்யும் தந்திரங் ... படத்தின்பெயர் போக்கிரிக் காதலன். தெலுங்கில் இருந்து தமிழுக்கும் வருகிறது.

ரம்பா, சௌந்தர்யா, காஞ்சன் ஆகியோர்தான் மூன்று கதாநாயகிகள். முரசின் முகப்பில் இருக்கும் காஞ்சன் இளம் சந்நியாசிப் பெண்ணாக நடிக்கிறார்.

(பிரேமானந்தாவின் நினைவை நினைவூட்டலோ?)

## கலகலப்பாக 'கலர் கனவுகள்'

இடைக்கிடையே காணாமல் போனாலும் அவ்வப்போது தலைகாட்டிக் கொண்டிருப்பவர் ஆனந்தபாபு. அவர் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் கலர் கனவுகள். ஆனந்தபாபுவின் ஜோடியாக புதுமுகம் நவீனா நடிக்கிறார். செந்தில், பொன்னம்பலம், பிரகாஷ்ராஜ், விசித்ரா ஆகியோரும் நடிக்கிறார்கள். படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகிறது. கதை, வசனம், பாடல்கள், ஒளிப்பதிவு இயக்கம் என்று சகல பொறுப்புக்களையும் ஏற்றுள்ளார் டி.தேவமோகன. இதுவரை இவர் இணை இயக்குநராகக் கூட இருந்தது கிடையாது. தேவமோகனின் துணிச்சலைப் பாராட்டலாம். ஆனால் படம் பப்படமாகா விட்டால் சரி.

## கமல் விடுத்த செய்தி

கமல் விடுத்த பிறந்தநாள் செய்தி பலவேறு சர்ச்சைகளை கிளப்பிவிட்டிருக்கிறது. அப்படி என்னதான் சொன்னார் கமல். இதோ அவர் சொன்னது:

"ரசிப்புத்தன்மையை ஒவ்வொரு ரசிகனும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். ரசிகர்கள் வெறும் விசிலடிச்சான் குஞ்சுகளாக இருக்கக்கூடாது. தனிமனித வழிபாடு கூடாது. நீ என்ன ஜாதி, நீ என்ன கட்சி என்பது உன் மனசுக்குள் கொஞ்சம் மனைவி உறவைப் போல நெஞ்சத்தோடு மட்டும்தான் இருக்க வேண்டும் மற்றவர்களிடம் விலை பேசாதீர்கள். யாரையும் தலைவனாக ஏற்று தனி மனிதன் பின் செல்லாதீர்கள்.

இதை நான் சொல்லும்போது நண்பர் ரஜினியை குறிப்பிடுகிறேன் என்று நினைக்காதீர்கள். இந்த ... பின்னும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய கருத்து இது" இவ்வாறுதான சொல்லியிருந்தார் கமல்.

## ரவிக்குமார் இயக்கத்தில் ராமராஜன்

குடும்பப் பாங்கான அடக்கமான கதையா? போடு சங்கீதாவை. தேடி ஓடுகிறார்கள் தயாரிப்பாளர்கள். மூச்சுவிடவே நேரமில்லாமல் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார் சங்கீதா.

சங்கீதா புதிதாக ஒப்பந்தமாகியுள்ள படம் 'காவலன்' கதாநாயகனாக நடிக்கிறார் ராமராஜன். 'தேடி வந்த ராசா' படத்தின் வெற்றியால் ராமராஜனுக்கு மீண்டும் ஒரு ரவுண்ட் வரும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. தைப்பொங்கல் திருநாளுக்கு ராமராஜன்-சங்கீதா நடித்துள்ள 'அம்மன் கோவில் வாசலிலே' படம் திரைக்கு வருகிறது.

அதனையடுத்து ராமராஜன் நடிக்கும் படம்தான் 'காவலன்.' படத்தை இயக்குவது, 'நாட்டாமை', 'முத்து' படங்களை இயக்கிய கே.எஸ். ரவிக்குமார். பாடல்கள் வாலி. இசை சிற்பி. தைப்பொங்கல் தினத்தன்று படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.




சனோஜா பிபிலி
படம் : இசைப்பயணம்

## சரியான போட்டி

'இசைப் பயணம்' படத்தில் கவர்ச்சிப் போட்டிதான் பிரதானம். கவர்ச்சிப் போட்டியில் இலங்கை நடிகைகள் இருவரும் துணிச்சலாக களம் கண்டிருக்கிறார்கள். சனோஜா பிபிலி, சபீதா பெரேரா இருவரும் நானா, நீயா என்று ஆடைக்குறைப்பில் இறங்கி விட்டனர். தமிழக நடிகை அனுஷாவும் விட்டுக் கொடுக்கவில்லை.

அருகில் இருக்கிறார் பாருங்கள் அவர்தான் சனோஜா பிபிலி. இலங்கையின் இளங்குயில். இசைப் பயணம் மூலம் சர்வதேசப் புகழுக்கு குறிவைக்கிறது இந்த இளங்குயில். கனவு பலிக்க வேண்டுமானால் இசைப் பயணம் வசூல் குவிக்க வேண்டும்.

## இரத்த பாசம்

நக்மாவின் தங்கை ராத்திகா நடிக்க வந்துள்ள செய்தி முன்னரே சொன்னது தான் தமிழ் படம் ஒன்றில் நடிக்க அழைத்த போது மறுத்துவிட்டாராம் ராத்திகா. அக்காவின் மார்க்கெட் பாதிக்கப்படும் என்று இரத்த பாசம் தடுத்துவிட்டதோ?

# சினி விசிட்



சுனில் ஷெட்டி - சோனாலி



நாஸர் - ஊர்வசி
படம் : அருவா வேலு

## பாரதிராஜாவின் சைவ கொக்கு

'முத்து' படத்தில் இடம்பெற்றுள்ள சூப்பர் ஹிட் பாடல்களில் ஒன்று கொக்கு சைவக்கொக்கு. இதனை ... தமிழ் பட உலகத்தினர் புதிய படம் ஒன்றுக்கு '...சைவக் கொக்கு' என்று பெயர் சூட்டிவிட்டனர். தயாரிப்பாளர் யார் தெரியுமோ? பாரதிராஜா. ஆனால் படத்தை இயக்கி, திரைக்கதை வசனம் எழுதி நடிக்கப் போவது பாண்டியராஜன். இசை தேவா. பாடல்கள் ...

பாடல் ஒன்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. '... பிறையே, முன்பனி அழகே, மல்லிகை ... மாங்கனிக் கலரே, புட்டிப்பால் வேணாம், ... கேளு, ஆங்கிலம் வேணாம், அருந்... கேளு.' என்று தொடங்கிறது பாடல். ...பாலசுப்பிரமணியம் பாடியுள்ளார்.

... நாகேந்திர பிரசாத். அசப்பில் ... தேவாவின் சகோதரர்தானே. ... படம் தயாரிக்கப்பட்டுக் ... இயக்குகிறார். சரவணன் ... ரஜினியின் வாழ்க்கை ... நடத்துநராக இருந்து ... வியாபாரம் செய்து ...

## ...வேலை

... படித்துவரும் ... எக்ச் ...

## சுனிலோடு காதலா?

'பம்பாய்' படத்தில் மூலம் பிரபலமானவர் சோனாலி. கவர்ச்சிக்கு ஏற்ற உடலமைப்பு கொண்டவர். ஆனாலும் சோனாலி நடித்த ஐந்து படங்கள் பயங்கரத் தோல்வி. இப்போது சுனில் ஷெட்டியுடன் ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

படப்பிடிப்பில் நெருக்கமாகி இருவருக்கும் காதல் மலர்ந்துவிட்டதாக பம்பாய் படவுலகில் கிசு கிசு பரவிவிட்டது.

உண்மைதானா சோனாலி? போங்! முழுப் பொய், "சுனில் துடிப்பான கதாநாயகன். எனக்கு அவரைப் பிடிக்கும். அதனால் நெருங்கிப் பழகுவது உண்மைதான். தவிர காதல் கீதல் எதுவும் கிடையாது" என்கிறார் சோனாலி. நம்பலாமா?!

## பெரியப்பா மகன்

கவர்ச்சி நடிகை ஜோதிலட்சுமியின் மகள் ஜோதிமீனாவும் நடிகையாகிவிட்டார். திடீரென்று திருமணமும் செய்து கொண்டார். மணமகன் ஒரு டாக்டர். ஜோதிமீனாவின் பெரியப்பாவின் மகன். அந்த விபரம் தெரியாமலேயே காதல் மலர்ந்து கல்யாணத்தில் முடிந்துவிட்டதாம்.

## கடுக்காமயப் மம்முட்டி

மலையாளத்தில் இருந்து தமிழுக்கு வந்திருப்பவர் மம்முட்டி. மக்கள் ஆட்சி 50 நாட்களைத் தாண்டி ஜனரஞ்சகமாக ஓடிக் கொண்டிருப்பதில் மம்முட்டிக்கு சந்தோசம். மம்முட்டியின் உண்மையான பெயர் முகமது குட்டி. அதன் சுருக்கம்தான் மம்முட்டி.

## தேவராசி

இசையமைப்பாளர் தேவாவுக்கு ஒரு ராசி. அவர் இசையமைக்கும் படங்கள் தீபாவளிக்கு வெளியாவதில்லை. அடுத்த வருட தீபாவளிக்கு ...யோ?

## இளைய நடிகைகளை அணைத்து நடிக்கலாமா?
## நெத்தியடியான கேள்வியும் சத்யராஜின் பதிலடியும்

தமிழக சினிமா வார இதழ் ஒன்று, சத்யராஜிடம் கேட்ட நெத்தியடியான கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்கள்.

**கேள்வி-** 'வில்லாதி வில்லனில்' கதையை நம்பாமல் நக்மாவின் சதையை நம்பியது தான் தோல்வி ஒப்புக் கொள்கிறீர்களா?

**பதில்-** படம் தோல்வி என்பதை ஒப்புக் கொள்ள மாட்டேன். எதிர்பார்த்த வெற்றி இல்லை. என்னிடம் நிறைய எதிர்பார்த்தார்கள். பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆனால், கிளாமரை நம்பி மட்டும் படம் எடுக்கவில்லை. படத்தில் கிளாமர் அதிகம் இருந்தது உண்மைதான். பகுத்தறிவு, விழிப்புணர்ச்சி பற்றியெல்லாம் தைரியமாக குரல் கொடுத்திருந்தேன். அதெல்லாம் இந்த கிளாமர் சமாச்சாரத்தில் அமுங்கிப் போய்விட்டது.

**கேள்வி-** பிரபுவுடன் சேர்ந்து நடிப்பதும், விஜயகாந்தை வைத்து படம் தயாரிப்பதும் உங்கள் மார்க்கெட் வீழ்ச்சியால் தானே?

**பதில்-** எரிச்சலூட்ட வேண்டும் என்பதற்காக இப்படி அபாண்டமாகப் பேசுவது தவறு. பிரபுவுடன் நடிக்கக் காரணம் இரண்டு ஹீரோ நடிப்பது போல கதை அமைந்திருப்பதால்தான். நானே டபுள் ரோல் கதை பண்ணுவதைவிட இன்னொரு பவர்புல் ஹீரோ நடித்தால் நன்றாக இருக்கும் என்று இயக்குநரும் தயாரிப்பாளரும் விரும்பினார்கள்.

விஜயகாந்தை வைத்து படம் எடுப்பது நானல்ல, என் மனேஜர் ராமநாதன். படம் தயாரிக்கும் எண்ணம் இருந்தால் நானே தயாரிப்பேன். அதொன்றும் சாதக விரோதச் செயல் இல்லையே.

**கேள்வி-** உங்களைவிட மூன்று மடங்கு வயதில் குறைந்த நடிகைகளை கட்டிப்பிடித்து ஆட்டம் போடுகிறீர்களே, உறுத்தலாக இல்லை?

**பதில்-** எல்லாக் காலத்திலும் இப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. நம்மைவிட வயது குறைந்த நடிகைகளை கட்டிப்பிடித்து நடிப்பது பெருமையான விஷயம் தான். நாம் இன்னும் இளமையாக இருக்கிறோம் என்று நிரூபிக்கும் விஷயம் இது. இந்தி நடிகர் தேவ் ஆனந்த் கூட ஒரு பேட்டியில் சொல்லியிருந்தார். அறுபது வருஷமாக ஹீரோவாக இருந்ததுதான் தனது சாதனை என்று. ஸோ... இதெல்லாம் ஒரு பிரச்சனையே இல்லை.

**கேள்வி-** இலட்சக் கணக்கில் சம்பளம் வாங்குகிறீர்கள். நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்... இந்தத் தொகை உங்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியமா?

**பதில்-** இது உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை. வியாபாரத்திற்கு ஏற்ற ஊதியம். இதை அதிகம் என்று சொன்னால், பாறை உடைப்பதை விட பைபாஸ் சர்ஜரி பண்ணுவது கஷ்டமான வேலையா? பாறை உடைப்பது பெரிய வேலை. அவர்களுக்கு ஏன் சம்பளம் குறைவு என்று கேட்கமுடியுமா? இதெல்லாம் தொழிலின் தன்மை, வியாபாரத்தை வைத்து தீர்மானிக்கும் விஷயம்.

## இளையராஜாவின் ஈடுபாடு

'காலாபானி' என்ற பெயரில் மலையாளத்திலும், தமிழில் சிறைச்சாலை என்ற பெயரிலும் வெளிவரும் படத்துக்கு இசையமைத்துள்ளது இளையராஜாதான். இந்தப் படத்திற்கு இசை அமைக்க அதிக நாட்கள் எடுத்துக் கொண்டார் இளையராஜா. இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன் நடந்த கதை என்பதால் அதற்கேற்ப இசையமைத் துள்ளாராம்.




ஷில்பா ஷெட்டி


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


## லேடீஸ் ஸ்பெஷல்


கர்ப்ப காலம் என்பது வாழ்க்கையில் முக்கிய காலம். கர்ப்பம் தரித்த நாளில் இருந்து பிரசவமாகும் வரை பட படப்புத்தான். அந்தப் படபடப்பை குறைக்க அருமையான பிரசவ அட்டவணை இது. மருத்துவரீதியாக உறுதி செய்யப்பட்டது. மருத்துவர்கள் தமது மேசைக்கு கீழே உங்களுக்கு தெரியாமல் வைத்திருப்பதும் இதுதான்.

# கருவறை மாற்றங்களை கவனிக்கலாம்
## சுலபமான பிரசவ நாள் அட்டவணை

படத்தில் காட்டப்பட்டுள்ள காட்டியைக் கவனமாக பகுதி 1, பகுதி 2, எனப் பிரித்தெடுக்கவும்.


பகுதி.1




பகுதி 1 இல் குறிப்பிட்டுள்ள இறுதியான மாதவிலக்கு சம்பவித்த முதல் தினத்திற்குரிய கோட்டினை, பகுதி 2 இல் காட்டப்பட்ட சாத்தியமான திகதியின் மேல் வைத்துப் பகுதி 1 றையும், பகுதி 2 டையும் பொருத்தி பூரணமான காட்டியாக்கிக்கொள்ளவும்.

உதாரணமாக- இங்கு காட்டப்பட்டுள்ள பூரணப் படுத்தப்பட்ட காட்டியில், இறுதி மாத விலக்கின் முதற் தினம் டிசம்பர் 25 ஆகும். இவ்வாறான ஒருவருக்கு பகுதி 1 இல் குறிப்பிட்டுள்ளவாறு இறுதி மாத விலக்கின் முதற் தினத்திலிருந்து அவதானித்தால்:

(அ). இரண்டாவது வாரத்தில் சினைமுட்டை (சூல்) கருவுற தய்ாரான நிலையில் பலோப்பியன் குழாயில் இருக்கும். அதற்கான திகதி ஜனவரி 7,8,9,தினங்களாகும்.

(ஆ). 3வது வார இறுதியில், அதாவது- ஜனவரி 15ஆம் திகதியிலிருந்து ஆண்விந்துடன் இணைந்த சூல் கருத்தரித்து, கர்ப்பப்பைச் சுவரில் பதிந்து வளர ஆரம்பித்துவிடும்.

(இ). இதிலிருந்து குறிப்பிட்ட 12 வாரங்கள் வரை மிக முக்கியமான காலகட்டமாகும். (அ-து, ஜனவரி 15ஆம் திகதியிலிருந்து மார்ச் 20ஆம் திகதி வரையான காலகட்டம்- முதல் 3 மாதங்கள்)

அனேகமாக, பலவீனமான பெண்களுக்கு (இரத்தசோகை மற்றும் உடற் தைரியம் குறைந்தவர்கள்) இக் காலகட்டங்களில் கருச் சிதைவு ஏற்பட அதிக வாய்ப்புண்டு. பாரமான பொருட்களைச் சுமப்பதையோ நீண்ட தூரப்போக்குவரத்திலீடு படுவதையோ முக்கியமாகத் தவிர்க்க வேண்டும்.

(ஈ). 13ஆம் வாரத்திலிருந்து அடுத்து வரும் 24ஆம் வாரம் வரை (அ-து, மார்ச் 21 இலிருந்து ஜூன் 10 வரை) ஊட்டச்சத்து உணவுகளை உட்கொண்டு முடிந்தவரை அன்றாடக் கடமைகளைக் கவனிக்கலாம்.

(4 லிருந்து 6வது மாதம் வரையுள்ள காலம்.)

(உ). ஜூன் 10 திலிருந்து (அ-து, 25 வாரத்திலிருந்து-6வது மாதம் முடிவுற்றதிலிருந்து) மிகவும் கவனமாக இருக்க வேண்டிய காலப் பகுதியாகும்.

இக் காலப் பகுதியில் குறைப் பிரசவம் சம்பவிக்க வாய்ப்புண்டு. மருத்துவமனையை அண்மித்த பகுதிகளில் இருப்பது சிறந்தது. மருத்துவ மனையில் குறைப்பிரசவம் ஏற்படுமானால் 'கண்ணாடிப் பேழை'யில் குழந்தையை வைத்துக் காப்பாற்றி விடுவார்கள்.

(ஊ). இக் காட்டியில் குறிப்பிட்ட தினத்திற்குரிய தாய்மாருக்கு சரியான பிரசவ திகதி செப்டம்பர் 30 ஆகும். அதற்குப் பிந்துமானால் உடனடியாக மருத்துவரின் கண்காணிப்பின் கீழ் அவர் பராமரிக்கப் படல் வேண்டும்.

இப்போது இல்லாவிட்டாலும் பிறிதொரு காலத்திலும் பயன்படும் இந்த நாட்காட்டி.

# கோப்பையில் சொர்க்கம்



கவிஞர்களில் பலர் கோப்பையில் குடியிருப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

பேனாவுக்கு மையூற்றினால் மட்டும் போதாது; தங்களுக்கு மதுவூற்றிக் கொண்டால்தான் சிலரால் எழுதவே முடிகிறது.

தண்ணீரில்தான் தாமரை மலரும், இவர்கள் கவிதைப் பூக்களும் மதுவில் தான் மலரும்.

உறங்கும் கற்பனையை இவர்கள் மதுவைத் தெளித்து எழுப்புகிறார்கள்.

கவிதை நெருப்பு என்றால் இவர்களுக்கு மதுதான் எண்ணெய்.

கவிதை புண்ணியத் தலம் என்றால் இவர்களுக்கு மதுதான் புண்ணிய தீர்த்தம்.

இஸ்லாம் மதுவைத் தடை செய்தது.

ஆனால் மதுபோதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் அதை விடமுடியவில்லை.

எனவே சிலர் இந்தத் தடையை எதிர்த்துப் பாடினார்கள்.

மது என்பது அரபி, பாரசீக, உருதுக் கவிதைகளில் 'ஞானம்' என்பதற்குக் குறியீடாகவும் பயன்படுத்தப்படுகிறது.

சிலர் இதைப் பயன்படுத்திக் கொண்டு ஞானத்தைப் புகழ்வது போல் மதுவைப் புகழ்ந்தார்கள்.

சிலரோ தங்கள் சாமர்த்தியத்தைப் பயன்படுத்தி மது நல்லதுதான் என்பதற்கு நயமான காரணங்களைச் சொன்னார்கள்.

மனசாட்சியின் உறுத்தலோடு மது அருந்திக் கொண்டிருப்பவர்களுக்கு இந்தக் காரணங்கள் ஆறுதலாக இருந்தன. சிலருக்கோ மது அருந்துவதற்கே இவை சாக்காகவும் பயன்பட்டன.

மதுத்தடையை ஏற்றுக் கொண்டு மது அருந்தாதவர்கள் கூட மதுவைப் பற்றிய கவிதைகளை ரசிக்கும் மரபு அரபி, பாரசீக, உருது இலக்கிய உலகில் உண்டு.

மது போதை தானே தடை செய்யப்பட்டது; கவிதை போதை தடை செய்யப்படவில்லையே.


இக்காலக் கவிஞர் ஆதம், மது இறைவனால் ஏன் தடை செய்யப்பட்டது என்பதற்கு நயமான காரணம் சொல்கிறார்.

புகழ் பெற்ற கஜல் பாடகர் பங்கஜ் உதாஸ் பாடும் பாடல்களில் இதுவும் ஒன்று. இந்தப் பாடலுக்கு ரசிகர்களிடம் அமோக வரவேற்பு.

மது உயிரோடு இருக்கும் போதே
சொர்க்கத்திற்கு
அழைத்துச் செல்கிறது
அதனால் தான் அது
தடை செய்யப்பட்டிருக்கிறது.

- அப்துல் ரகுமான் -

## நீங்களும் தைக்கலாம்
# அரைத் தடைப் பாவாடை (Half Flared Skirt)




தேவையான துணி: 2 யார்
பாவாடை உயரம் - 28"
இடுப்பின் சுற்றளவு - 28" ÷ 4 =7 -1 =6

முதலில் நேர்க்கோடு கீறி அதன் முனையில் இருந்து கிடையாகவும் ஒரு கோடு கீறவும். முனையை A என்க. அடுத்து இடுப்பின் சுற்றளவு 28". அதை 4 ஆல் வகுக்க 7" வரும். இதிலிருந்து 1 ஐக் கழிக்க வேண்டும்.

இந்த அளவை A முனையில் இருந்து சுற்றி வர எடுக்கவும். பின் அந்த 6" எடுத்ததுக்குக் கீழ் பாவாடை உயரம் 28" ஐ புள்ளிக் கோடிட்டு சற்று வட்டமாகக் கீற வேண்டும்.

குறிப்பு:- இந்த பிரதி (Block) இடுப்பின் 1/4 பகுதியாகும். அதனால் துணியை இரண்டாக மடித்து இந்த பிரதியை (Block) ஐ இரண்டு முறை வெட்ட வேண்டும். அப்பொழுது தான் முன்பக்கமும், பின் பக்கமும் (Front and Back) கிடைக்கப்பெறும்.

இடுப்பிற்கு ஃபான்ட் போட்டு மடித்துத் தைக்கலாம்.

செல்வி: காமிலா ராபி, மாத்தளை.

# சர்ச்சைக்குரிய பெண் எழுத்தாளர்
## சஹானி-குசும் சஹானி

இந்தியாவில் மிகப் பிரபலமான பெண் எழுத்தாளர் 'ஷோபா டே'யைப் பற்றி முரசு வாசகர்கள் அறிவீர்கள்.



ஷோபா டேக்குப் போட்டியாக மற்றொரு பெண் எழுத்தாளர் வளர்ந்து வருகிறார். அவர்தான் குசும் சஹானி-ஷோபாடேயின் விசிறி. ஆனால் ஷோபாடேயின் பாணியில் எழுதுவது கிடையாது.

"ஒருவரது பாணியைப் பின்பற்றுவது வாசகர்களுக்குப் பிடிப்பதில்லை. ஷோபா டேயைப் போல எழுத குசும் சஹானி எதற்கு? ஷோபா டேயே போதுமே என்று நினைத்து விடுவார்கள்" என்று சொல்லும் குசும் சஹானி கவர்ச்சியான பெண். ஷோபா டேயின் சாயலும் கொஞ்சம் இருக்கிறது.

மூன்று பெண்களின் உணர்வுகளை வைத்து குசும் சஹானி எழுதிய சமீபத்திய நாவல் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

இந்த நாவலில் நெருக்கமான கட்டிலறைச் சமாச்சாரங்கள் 5 தடவை விலாவாரியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

மேல்தட்டு மனிதர்களின் குடும்ப வாழ்வில் ஏற்படும் சிக்கல்களை அலசும் நாவல்தான் அது. இத்தனைக்கும் குசும் சஹானியும் ஒரு மேல்தட்டுப் பெண்தான். கணவர் பெரிய தொழிலதிபர். குசும் சஹானியும் இப்போதுதான் 34 வயது. பார்த்தால் அப்படித் தெரியாது. இளமையாக இருக்கிறார். இளமையாக எழுதுகிறார். இளமையாகவே சிந்திக்கிறார். அதனால் வம்பிலும் மாட்டிக் கொள்கிறார்.

## சமைப்போம் சுவைப்போம்
### தொகுத்துத் தருவது சுகந்தினி

# பொரியல் மோதகம்

**தேவையானவை:**

தேங்காய் - ஒரு முடி
வெல்லம் - 1/2 கிலோ
ஏலக்காய் - 4
உப்பு - சிறிதளவு
மாவு - சிறிதளவு
தேங்காய் எண்ணெய்-தேவையான அளவு

**செய்முறை:**

தேங்காயைத் துருவி வெல்லத்தோடு சேர்த்துக் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். வெறும் வாணலியில் அரைத்த விழுதைப் போட்டுக் கையில் ஒட்டாத பதத்தில் வறுத்து எடுக்கவும்.


பிறகு பொடி செய்த ஏலக்காயை நெய்யில் வறுத்து கலவையில் சேர்த்து சிறு உருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும்.

தண்ணீரில் கரைத்துள்ள மாவுக்கரைசலில் உருண்டையைப் போட்டு எடுத்து, வாணலியில் கொதித்துக் கொண்டிருக்கும் எண்ணெயில் போட்டு, பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

இந்த மோதகம் ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும்.

# சொல்லித் தருகிறார்கள்

வியாபார நோக்கமெல்லாம் கிடையாது. பெண்களின் விழிப்புணர்வுதான் நோக்கம். இந்தியத் தலைநகர் புதுடில்லியிலுள்ள 'ப்ரிதி' என்னும் பெண்கள் அமைப்பு செய்துவரும் பணி அப்படி.



குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான விஷயங்களை வீடு வீடாகச் சென்று சொல்லிக் கொடுக்கிறார்கள்.

கர்ப்பத்தடை மாத்திரைகளை உட்கொள்ளும் போது மாற்று விளைவுகள் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்ளவும், பாதுகாப்பான உடலுறுவு முறைகளையும் பெண்களுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள்.

பெண்களுக்கு பாதுகாப்பான கருத்தடை சாதனங்கள் தொடர்பாகவும் 'ப்ரிதி' அமைப்பு ஆராய்ச்சி செய்து வருகிறது.

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 19

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

# ஒலிம்பிக் ஒத்திகைகள்

இந்த வருடம் ஜூலை மாதம்தான் ஒலிம்பிக் போட்டிகள் கலகலவென்று ஆரம்பமாகப் போகின்றன.

இப்போதிருந்தே ஒலிம்பிக் பரபரப்பு அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் தொற்றிக் கொண்டுவிட்டது. அங்குதான் உலகமே கவனிக்கப் போகும் ஒலிம்பிக் போட்டிகள் நடக்கப் போகின்றன.

ஒலிம்பிக்கில் இடம்பெறும் 14 விளையாட்டுகளுக்கான அரங்குகள் தயாராகி விட்டன. மைய மைதானம் கட்டி முடியும் நிலையில் இருக்கிறது.

இதற்கிடையே, இதுவரை செய்யப்பட்ட ஏற்பாடுகளில் விளையாட்டு வீரர்கள் குறைகளையும் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதே ஒலிம்பிக் ஏற்பாட்டாளர்களுக்கு பெரிய தலைவலியாக இருக்கிறது.

பாய்மரக் கப்பல் போட்டிக்கு அட்லாண்டாவில் உள்ள மெரினா கடற்பகுதி தெரிவு செய்யப்பட்டது. அந்தப்பகுதியில் காற்றழுத்தம் அதிகம். அது அடிக்கடி வேறுபடும். அதனால் திறமையைவிட அதிஷ்டம் அதிக பங்கு வகித்துவிடும் என்று பாய்மரக் கப்பல் பந்தய சங்கத் தலைவர் குரல் கொடுத்திருக்கிறார். "மியாமி கடற்கரையில் நடத்துவதே உகந்தது" என்றும் சொல்லியிருக்கிறார்.

ஓட்டப்பந்தய வீரர்களும், சைக்கிள் போட்டிகளில் ஈடுபடும் வீரர்களும் ஜூலை மாத வெப்ப நிலை தொடர்பாக கவலைப் படத் தொடங்கிவிட்டார்கள்.

96 ஜூலையில் அட்லாண்டாவில் 37 டிகிரி செல்ஷியஸில் வெப்பம் இருக்கும்.

அவர்களது நியாயமான கவலையைப் போக்குவதற்கு ஒரு புதிய திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

பந்தய தளத்தில் ஒரு விதமான பனிப்புகையை 'ஸ்பிரே' செய்யப்போகிறார்கள். பின்னர் அதனை வெடிக்கச் செய்வார்கள். அப்போது பந்தயத் தளம் திறந்த வெளி ஏ.ஸி. சூழ்நிலைக்கு வந்துவிடும். இதன் மூலம் 9 டிகிரி வரை வெப்பத்தைக் குறைக்க முடியும் என்று நினைக்கிறார்கள். செலவு மட்டும் பயங்கரமாக இருக்கும்.



கடந்த முறை ஒலிம்பிக்ஸில் 200 மீட்டர். 400 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் தங்கத்தை தட்டிச் சென்றவர் மைக்கேல் ஜோன்சன். இந்தமுறை அவருக்கு ஒரு சோதனை காத்திருக்கிறது.

96 ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் கால அட்டவணைப்படி 200 மீட்டர் அரையிறுதிச் சுற்று முடிந்து ஐம்பதே நிமிடங்களில் 400 மீற்றர் இறுதிச் சுற்று தொடங்கிவிடும். அதனை மாற்ற வேண்டும் என்று சொல்கிறார் மைக்கேல் ஜோன்சன்.

ஒலிம்பிக் நெருங்க நெருங்க மேலும் பல புகார்கள், குற்றச்சாட்டுகள் குவியும். எல்லாவற்றையும் சரிசெய்து முடிப்பதற்குள் ஒலிம்பிக் கமிட்டிக்கு போதுமென்றாகி விடும்.

## ஒரு கிறுக்கனின் டயறி...

முன்பெல்லாம்
ஒரு
பச்சோந்தியைப்
போலான....,
உன்
வெறும்
நிறம் மாற்றலுக்காக
காத்துக் கிடப்பேனே....?
அது–ஒரு
உணர்வுச்
சொறிச்சல் தான்..!

நீ......,
என்– பார்வைகளில்
தள்ளிப் பாய்கின்ற
வெட்டுக்கிளி!

இதயத்தை
கொத்திக் கொண்டிருக்கும்
மரம் கொத்தி,
நாணயத்தின்
இரண்டாம் பக்கம்..!!

எரியாத
மெழுகுவர்த்தி,
தேன் இல்லாத
ரோஜா...,!
இருந்தும் நீ,
ஆலம் பழம்தான்!

ஒரு காலத்தில்
நம் கிராமத்தை
'அழகு' என்றுதான்
சொல்வேன்....,
நீ இருப்பதால்..!

இப்போதைய
'விலை வாசி'போல்
ஒவ்வொரு நிமிட
சுவாசிப்பும்
எதிர்கால
ஏற்றங்களை –
நோக்கித்தான்..!

'கட்சி' மாறிய
'தங்கச்சி!'
இப்போது
நமக்குள் இருந்த
முறை கூட..
மாறித்தான் போனது...,!

தேடிய வரன்
எப்படி...?
திருப்தியா..!?

கிளி....!
கொஞ்சமாவது
சந்தோசத்தை
கொள்வனவு
செய்ய நீ விரும்பினால்...,
என்–குறிப்புகளை
தாவணிக்குள்
இட்டு தாலாட்டு..!
ஒரு சுகம் கிட்டும்!!

ஆலம்குளத்தூர் ரோஷான்
ஏ.ஜிப்ரி.

சத்தியமாய்
சொல்கின்றேன்
இறந்தகாலம்
மறந்து போனது....,
மணி...!

## இறந்து போ... மனிதா!



அமைதியைச் சிதைத்து
ஜாதிகளைப் பிரித்த
துப்பாக்கிகள் இன்னும்
இயங்க மறுக்கவில்லை...!

பூமியை பிளந்து
வானமுகட்டை சரித்தாலும்
ரவைகளின் தேடல்
உன் ஆத்மாவையே
குறிபார்க்கும்...!

இந்த
ஆயுதக் கலாசாரம்
அழிந்து போகாது...
நீ–
இறந்து போகும் வரை.

இந்தப் பூமிமுழுதும்
"சோமாலியா" ஆகுமுன்
நீ இறந்து போ...!

சதைகளை உண்டு
ரத்தம் குடித்து
உயிர் வாழ முடியாது...

நாளைய காலங்களில்
பிறக்கப் போகும்
சிசுக்கள் எழுந்து
துப்பாக்கிகளிடம்
தன் குடும்பத்தின் சுகம்
விசாரிக்கும்....!

ஆகவே....... நீ
இறந்து போ...
சமாதானம் பிறக்கட்டும்!

பொத்துவில்–ஏ.மஜீத்.

## அறுவையரங்கம்



**நண்பன்:–** உனக்கு விடுமுறை ஆரம்பமாகிவிட்டதா?
**அவன்:–** நாளை ஆரம்பம். என் மனைவி ஊருக்குப் புறப்படுகிறாள்.

○○

**அவர்:–** (போனில்) தீயணைப்பு அலுவலகமா?
**போன்குரல்:–** ஆமாம்
**அவர்:–** நான் இப்பொழுதுதான் எங்கள் வீட்டுத் தோட்டத்தில் பல புதிய செடிகளை வைத்துள்ளேன்.
**போன்குரல்:–** அதிருக்கட்டும். நெருப்பு எங்கே பிடித்திருக்கிறது என்பதை முதலில் சொல்லுங்கள்.
**அவர்:–** நான் வைத்துள்ள பூச்செடிகள் எல்லாம் மிகவும் விலை உயர்ந்தவை.
**போன்குரல்:–** மன்னிக்கவும். நீங்கள் பூக்கடை என்று நினைத்து பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இது தீயணைப்பு அலுவலகம்.
**அவர்:–** தெரியும். நான் சொல்ல வந்த விஷயம்...என் பக்கத்துவீடு தீப்பிடித்து எரிகிறது. தீயணைக்கவரும் உங்கள் கவனக்குறைவாக அவசரதில் என் வீட்டுப் பூச்செடிகளை மிதித்து விடாமல் இருக்கச் சொல்லவே போன் செய்தேன்.
**போன்குரல்:–** !!!

○○

**ஜோ:–** காலையில் தலைதெறிக்க வேகமாக எங்கே ஓடினாய்?
**ஜான்:–** ஒரு சண்டையை நிறுத்தத்தான் வேகமாக ஓடினேன்.
**ஜோ:–** யாருக்கும் யாருக்கும் சண்டை?
**ஜான்:–**எனக்கும் இன்னொரு ஆளுக் கும்தான்.
**ஜோ:–** !!!

○○



**ஆசிரியர்:–** உனக்கு வெள்ளிக்கிழமை நான்கு கோழிகளும், சனிக்கிழமை ஒரு கோழியும் கிடைத்தால் மொத்தம் உன்னிடம் எத்தனை கோழிகள் இருக்கும்?
**மாணவன்:–** ஏழு கோழிகள்
**ஆசிரியர்:–** என்ன உளறுகிறாய்?
**மாணவன்:–** நான் ஒன்றும் உளறவில்லை. என்னிடம் ஏற்கெனவே இரண்டு கோழிகள் இருந்தன.

○○

**பெண்:–** என்னப்பா பிச்சையாக வாங்கிய பணத்துக்கும் பற்றுச்சீட்டுத் தரு கிறாய்?
**பிச்சைக்காரன்:–** என்னம்மா செய்வது, போலிப் பிச்சைக்காரர்கள் பெருகி விட்டார்களே!

○○

**டிக்:–** ஒரு குடைக்குக் கீழே ஆறுபேர் போய்க்கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவர் கூட நனையவில்லை.
**டாம்:–** ஆச்சரியமாக இருக்கிறதே!
**டிக்:–** அதில் என்ன ஆச்சரியம். அப்பொழுது மழையே பெய்யவில்லை.

○○

**மனேஜர்:–** இந்த அலுவலகத்தில் தீபிடிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். நீ என்ன செய்வாய்?
**இன்டர்வியூவுக்கு வந்தவர்:–** அந்தச் கவலையே உங்களுக்கு வேண்டாம் சேர், முதலில் வெளியேறும் ஆளாக நான்தான் இருப்பேன்.

○○

**அவர்:–** தலைமுடி உதிர்ந்தால் என்ன செய்யலாம்?
**நண்பர்:–** எடுத்து வெளியே போடலாம். அது கூடவா தெரியேல்லை?!

○○

**ஜோ:–** மேகம் ஏன் அழுதது?
**ஜான்:–** மின்னல் 'அடித்த'தால்.

○○

**மாலா:–** கனியைக் கசக்கினால் ஜுஸ், மூளையைக் கசக்கினால்?
**பாலா:–** லூஸ்.

○○

**ஜோ:–** கவர்ச்சி நடிகைக்கும், அதிஷ்டலாபச் சீட்டுக்கும் என்ன ஒன்றுமை?
**ஜான்:–** இரண்டுக்குமே குலுக்கினால் தான் மதிப்பு.

○○

**மனேஜர்:–** உட்காராமல் நின்று கொண்டிருக்கிறாயே? பரவாயில்லை உட்காரும்மா. உன் பேர் என்ன?
**பெண்:–** 'அமரா'வதி.

## பனிப் புல் நுனி!

அதென்ன அது....!
என்
கண்களின் துளி
ஒன்று
அங்கே
அந்தரத்தில்...?

என்
காதலியின்
விழித்துண்டு
விழுந்து...
புல்லின் நுனியில்
எப்படி
முளைத்தது?

அடடா
பிரம்மனே!
நீ
துப்பிய எச்சில்
பூமியில் விழ
புல்லின் நுனியில்
சிக்கி
துடிக்கின்றது...!

இன்னும்...
இன்னும்...
புற்களே!
நேற்று
இரவுக்குளிரில்
குளித்து
இன்னுமா–நீங்கள்
தலை துவட்டவில்லை...!

பூமியில் முளைத்த
பச்சை உரோமங்களே!
உங்கள்
வாழ்க்கை
இனியது...!

புனிதமான
இரவில் வாங்கிய
ஈரமுத்தத்தை
காலை
இரவி
களவாடத்தான்
வந்தானோ–
பனிப்புல் நுனியே
பகராயோ?

அதென்ன அது.....?
என்
கண்களில் துளி
ஒன்று
அங்கே
அந்தரத்தில்...!

பொகவந்தலாவ
-மாரி மஹேந்திரா-

## தேன் கிண்ணம்

## மனசு வரையும் ஓவியம்



என் பூ மனசின்
கனவுகள்
பூப்பெய்தியதும்
பூரணம் பெற்றதும்
தோரணம்கட்டி.
புதுக்கோலம் போட்டதும்
உனது தோற்றப்பாட்டில் தானே...
காதலீ.....!
★★

உன் அந்தப்புரத்து
பர்தாவுக்குள்– ஒரு
அந்தரங்க
நந்தவனத்தை
பந்திவைத்து – என்னில்
பந்தம்தைத்த ஒரே
பதுமையும் நீதானே...!
★★

தன்னலம் மறந்து – என்
தன்னந்தனி வாலிபத்தில்
தன்னம்பிக்கை தழைக்க,
தங்கக் கிரீடம்
தாங்கி வந்த
தங்க ரதமும்
நீ ஒருத்திதானே....!
★★



யாராலும்...
உத்தரவாதம்
செய்யமுடியாத
உத்தமக்காதலை– என்னில்
அத்தாட்சிப் படுத்தி...
அசத்திய ஒரு ஜீவனிருந்தால்...
அதுவும் நீதானே....!
★★

இன்று
நான் உலாத்தும்
உலகை உன்னோடு
வரையறுத்து– மனசுள்
உன்னை வரைந்து
வர்ணனை செய்வதில்
தப்பில்லைதானே...காதலீ..?!

பாணகமுவ–எஸ்.முஸ்தாக், குருநாகல்.

## தண்டனைக்குரிய குற்றம்

"சாவதே சுகம்" என்று
வாதாடும்
வாழ்க்கையோடு நான்
சாகாமலே செத்து
வாழாமலே வாழ்ந்து
முட்டி மோதுகிறேன்!

எனது உயிரே
சுமக்க முடியாத
சுமையாகி
எனை வதைக்கிறது!

இப்படியொரு சாபத்தைத்
தூவுவதற்காகவா
என் வாழ்வுச் சோலைக்குள்
வாழ்த்துக்களோடு
வந்து போனாய்?

அன்பு காட்டுவதாய்
நடிப்பதும்
அணுவணுவாய்
நெஞ்சுக்குள்
நஞ்சை ஊட்டுவதும்
ஒன்று தான்;

இரண்டின் இறுதியிலும்
மரணப் போராட்டமே
மேலோங்கி நிற்கும்!

கழற்றி எறிவதற்குக்
காதலென்ன காலணியா?
கிழிந்து போனால் தைப்பதற்கு
உள்ளமென்ன உடையா?
சிதறிய பின்...
சேர்த்துக் கொள்ள
என் வாழ்வு என்ன,
ஈரமண் உருளையா?



வாடி வீழ்ந்துவிட்ட
எனது வாழ்வின்
ஆணி வேரை
அறுத்துவிட்டது
நீதான் என்பதை
நிருபித்து,
ஒரு பாறாங்கல்லுக்காக
வழக்காட
எனக்கென்ன பைத்தியமா?

மனித உரிமைகள்
சாசனத்தில்
இனிவரும் வருடங்களில்
இதனையும் சேர்க்க வேண்டும்;
"ஒரு உயிரை ஏமாற்றுவது
தண்டனைக்குரிய குற்றம்" என்று!

பஹீமா ஜஹான்

## நன்றி! மீண்டும் வருக!

ஒரு
சிரிப்பினில்
சிறைப்படும்
பொழுதினில்
வெளிச்சத்தை
மறந்து போகும்
வெட்கம்.....!

கைகள்
நிர்வாணப்படுத்தும்
ஒரு சிலையை
உயிருள்ளதாக...
அது
செதுக்கச் செதுக்க
சிதைந்து போகும்
உணர்வுகள்.....!

உடல் கனலும்
காற்றுப்பட்டும்...
அந்தக் கணம்.
காற்றும் கூட
முச்சுத்திணறிவிழும்
இறுக்கத்தில்
மறுகணம்.....!

இதழ்வீணை
அடிக்கடி
மீட்டும்...
'இச் இச்'
ஒலிகள்
ஸ்வரங்களாய்
ஸப்திக்கும்

நரம்புகள்
ஏவலிட
அடிமையாய்
நகரும்...
படுக்கை.....!

சொக்கியிழுத்த
விழி
செருகும்
சிறைப்பட்ட
உடல் மீழும்
சின்னதாய்–ஒரு
முத்தத்துடன்....!

அக்கரைப்பற்று
ஏ.ஜீ. சேகர்.

## எனது காயங்கள்

மருந்து(கள்)
போடாமல்
விருந்தாகப்
படைக்கப்பட்டவை!

ஆறாமல்
ஆற்றப்படாமல்
பசசையாய்
இருக்கும்
பழைய
புண்கள்!

கன்றிப்போன
காயத்துள்
ஊறிப்போன
குருதி!

அலட்சியமாகிவிட்ட
அலட்சியச்
சின்னம்!

நீ
தந்த
பரிசின்
நிர்வாணக்
கோலம்!

இன்றும் ஆறாத
என்னுடைய
காயங்கள்!

வன்னியூரான் வைசிகி

## ஒரு நிமிசம்

உன்
விழியென்ன
தோட்டாவா?

உன் சிரிப்பென்ன
சைனைட்குப்பியா?

உன்னை பார்க்கும் போது
மட்டும்.... ஏனடி நீ
ஒரு
மிதிவெடியாய்
உற்றுப்பார்க்கிறாய்?

உன் நிழலில்லாத
தேசத்தில்
நாளை....
காதலில்லை
கவிதையுமில்லை
காதலி!

வி. சுதாகர், அக்கரைப்பற்று–08.

## இந்த வாரம் உங்கள் பலன்

(31.12.95 முதல் 06.01.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | -சூரியன், புதன், வியாழன், வெள்ளி. |
| மகரம் | -செவ்வாய். |
| கும்பம் | -சனி. |
| மீனம் | -கேது. |
| கன்னி | -இராகு. |

சந்திரன்–மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தொழில் நட்டம். | காலை 7 மணி |
| திங்கள்- பொருள் வரவு, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனப்பயம். | காலை 6 மணி |
| புதன்- பெரியோர் பகை, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி -புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | காலை 7 மணி |
| சனி- பணக் கஷ்டம், கடன் படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- துயர் நிங்கும், மனமகிழ்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு. | காலை 7 மணி |
| சனி- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் பிரச்சினை, மனப் பயம். | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழக்கை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், இனசன விரோதம். | காலை 6 மணி |
| சனி- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, கௌரவநிலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- உறவினர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, மன மகிழச்சி. | காலை .7 மணி |
| சனி- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| புதன்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | மு.ப. 9 மணி |
| வியாழன்-அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு. | மு.ப. 9 மணி |
| சனி- உயர்ந்த நிலை, மனக்கவலை நீங்கும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், பணச் செலவு. | காலை 7 மணி |
| புதன்- துயர் நீங்கும், எதிர்பார்த்த நன்மை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் நன்மை, அந்நியர் மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், கடன் தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, கௌரவம். | பி.ப. 1 மணி |
| புதன் - தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- கடன் தொல்லை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, சுபகாரிய மகிழச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிடத்தால் பிரச்சினை, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, கடன் படல். | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| சனி- வீண் குறை கேட்டல், காரியத் தடை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பணக் கஷ்டம். | மு.ப. 9 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழக்கை, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| புதன்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்-தொழிலில் உயர்ச்சி, கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், புதிய முயற்சி தோல்வி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, பணவரவு. | மு.ப. 9 மணி |
| புதன்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- எதிர்பார்த்த நன்மை, மனப்பயம். | பி.ப. 2 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழிலில் உயர்ச்சி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், அந்நியர் பகை. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- எதிர்பார்த்த நன்மை, பணவிரயம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனமகிழச்சி. | காலை 7 மணி |
| புதன்- பொருள் வரவு, புதிய முயற்சி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பிரயாண மிகுதி. | காலை 7 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

www.padippakam.com nanri - நூலகத்திட்டம்





## வழி தவறிய வண்டு

வண்டு ஒன்று சோலை ஓரம்
வந்து சேர்ந்தது!
கண்டுகொண்ட பூவும் மெல்ல
கண் மலர்ந்தது!

ஆசை தீர வண்டுந் தேனை
அருந்தி மகிழ்ந்தது!
அங்கிருந்து எழுந்து மெல்லப்
பறந்து சென்றது!

வண்டு சென்ற வழியதனில்
விளக்கைக் கண்டது!
தண்டில் அலர்ந்த பூவெனவே
தாவிப் பாய்ந்தது!

செந்தழலில் வீழ்ந்த வண்டு
சாம்பலானது!
வந்த வழி தவறியதால்
வண்டு மாண்டது!!!

க. வாசுகிதேவி
திருகோணமலை.

செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே! தவம்செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம் - வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையோர்
இன்புற்று வாழ்தல் இயல்பு.

- சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# காணாமல் போன வைரம்

ஓர் ஊரில் முத்துவேல் என்ற விவசாயி ஒருவன் இருந்தான். அவன் உழைக்கும் பணத்தை வட்டிக்குக் கொடுத்துப் பணத்தைப் பெருக்கினான். இவ்வாறு அவனிடம் சேர்ந்துள்ள பணத்திற்கு வைரக் கல்லாக வாங்கிச் சேமிக்க முடிவு செய்தான்.

அந்த ஊருக்கு ஒரு நாள் ஒரு வைர வியாபாரி வந்தான். அவனிடம் நிறைய வைரங்கள் இருப்பதை அறிந்து கொண்ட முத்துவேல், அவனிடமிருந்து ஒரு வைரத்தையேனும் வாங்கி விட வேண்டும் என முடிவு செய்தான். ஆனால் முத்துவேலுக்கு வைரத்தை போலி வைரமா, நல்ல வைரமா எனப் பரீட்சித்துப் பார்த்து வாங்கத் தெரியாது. இப்போது என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

அவ்வூரில் இரத்தினவேல் என்பவன் முத்துவேலுக்கு நண்பனாக இருந்தான். இரத்தினவேலுவும் ஓரளவு பணக்காரன் தான். அவனுக்கு வைரங்களைப் பற்றி நன்கு தெரியும். எனவே வைரங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வைரவியாபாரியிடம் இரத்தினவேலுவை அழைத்துச் சென்றான் முத்துவேல்.

வைரவியாபாரியிடம் எஞ்சியிருந்த ஒரே ஒரு வைரத்தை வாங்கிப் பரீட்சித்துப் பார்த்தான் இரத்தினவேல். அது நல்ல வைரம் என்பதையும், விலைமதிப்பும் அதிகம் என்பதையும் அறிந்தான் இரத்தினவேல். முத்துவேலிடம் அதை வாங்கலாம் என்று கூறினான்.

முத்துவேலுவும் வியாபாரியிடமிருந்து அந்த வைரத்தை வாங்கிக் கொண்டான். அந்த வைரத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று பத்திரமாக வைத்துக் கொண்டான்.

இந்த வைரத்தைக் கொண்டு பொன் நகைகள் செய்ய வேண்டும் என முடிவு செய்தான் முத்துவேல். ஆனால் பொன் வாங்க நிறையப் பணம் வேண்டுமே; என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

நண்பன் என்ற முறையில் அடிக்கடி முத்துவேலின் வீட்டிற்கு வரும் இரத்தினவேல், "வைரம் பத்திரமாக இருக்கிறதா?" என்று கேட்டு விட்டுச் செல்வான்.

"ஆம் பத்திரமாக இருக்கிறது," என்று சொல்லும் முத்துவேல் மனதில் பொன் வாங்குவதற்கான பணத்தை இரத்தினவேலிடம் இருந்து எடுக்க திட்டம் போட்டான்.

ஒருநாள் இரத்தினவேல், முத்துவேலின் வீட்டிற்கு வந்து சென்ற பின்னர் முத்துவேல், "ஐயோ! என் வைரம் திருட்டுப் போய் விட்டதே! சற்றுமுன் என் வீட்டிற்கு வந்த இரத்தினவேல்தான் இதைத் திருடிக் கொண்டு போய் விட்டான்," என்று அழுதான்.

அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களும் இரத்தினவேல், முத்துவேலின் வீட்டிற்கு வந்து சென்றதைப் பார்த்ததாகக் கூறினார்கள். உடனே ஊர்ப்பெரியவர் இரத்தினவேல் வீட்டிற்கு ஆளனுப்பி அவனை அழைத்து வரச்சொன்னார்.

என்னவோ ஏதோ என்று பதறியபடி வந்த இரத்தினவேலிடம், "சற்று முன் முத்துவேலின் வீட்டிற்கு வந்தாயா?" என்று கேட்டார் பெரியவர்.

"ஆமாம் ஐயா!" என்றான் இரத்தினவேல்.

"முத்துவேலிடம் வைரம் ஒன்று இருப்பது உனக்குத் தெரியுமா?"

"தெரியும் ஐயா!"

"அதை நீ களவாடிச் சென்று விட்டதாக முத்துவேல் கூறிகிறானே?"

"ஐயா முத்துவேலிடம் வைரம் இருப்பது எனக்குத் தெரியும். அவனின் வீட்டிற்கு அடிக்கடி வருவதும் உண்மை. ஆனால் நான் திருடவில்லை" என்றான்.

முத்துவேலுவோ தன் வைரத்தை இரத்தினவேல்தான் திருடினான் என்று சாதித்தான்.

வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது. மரியாதை இராமன் தான் அங்கு நீதிபதி. அவர் முத்துவேல், ரத்தினவேல் இருவரது முறையீடுகளையும் கேட்டார். பிறகு முத்துவேலிடம்,

"முத்துவேலா! உன் வைரக்கல்லை இந்த இரத்தினவேல் திருடிவிட்டதாகச் சொல்கிறாயே! அதற்கு உன்னிடம் சாட்சியங்கள் இருக்கின்றதா?" என்று கேட்டார்.

"நீதிபதி அவர்களே! என் வைரக்கல்லை இரத்தினவேல் திருடியதைப் பார்த்த சாட்சிகள் மூவர் இருக்கிறார்கள்!" என்றான் முத்து வேல்.

அவர்களை மறுநாள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டார் மரியாதை இராமன்.

முத்து வேலுவுக்கு நண்பர்களான மூன்று பேரிடம் அவன் சென்று,

"என் வைரத்தை இரத்தினவேல் திருடியதை நீங்கள் பார்த்ததாக நாளை நீதி மன்றத்தில் நீங்கள் சொல்லவேண்டும்," என்று சொல்லி அவர்களுக்குப் பணம் கொடுத்தான். அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

மறுநாள் அம்மூவரையும் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ற முத்துவேல்,

"நீதிபதி அவர்களே! இம்மூவரும் தான் என் வைரக்கல்லை இரத்தினவேல் திருடிச் சென்றதைப் பார்த்தவர்கள்" என்றான்.

"முத்துவேலுவின் வைரத்தை இரத்தினவேல் திருடிச்சென்றதை நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டார் மரியாதை ராமன்.

"ஆமாம் நீதிபதி அவர்களே!" என்றனர் மூவரும்.

மரியாதை ராமன் அம்மூவரையும் தனித் தனி அறையில் போகச்சொல்லி அவர்களிடம் களிமண் உருண்டைகளைக் கொடுத்து,

"நீங்கள் இக்களிமண்ணில் முத்துவேலிடம் இருந்ததாகச் சொல்லப்படும் வைரம் போல் செய்து காட்டுங்கள்" என்று



கட்டளையிட்டார்.


மூன்று பேரும் வைரக்கல்லைப் பார்த்து அறியாதவர்கள். ஆனாலும் நீதிபதி கட்டளையிட்டு விட்டாரே என்று தமக்குத் தெரிந்த வடிவங்களைச் செய்தனர்.

ஒருவர் வட்டமாகவும், ஒருவர் சதுரமாகவும், மற்றவர் நீள் சதுரமாகவும் செய்து அதை மரியாதை ராமனிடம் கொடுத் தார்கள்.

அவற்றைப் பார்த்தார் மரியாதை ராமன். அவற்றில் ஒன்று கூட வைரக்கல் போன்று இருக்கவில்லை. அவர்கள் மூன்று பேரும் பொய்ச்சாட்சி சொல்ல வந்தவர்கள் என்பதை மன்றத்தில் இருந்தவர்களுக்குத் தெரிய வைத்தார்.

"முத்துவேல்! உன்னுடைய சாட்சிகள் மூவரும் பொய்ச்சாட்சிகள். நீ இரத்தினவேல் மீது அபாண்டமாகப் பொய் சொல்லித் திருட்டுக்குற்றம் சுமத்தியிருக்கிறாய். அதனால் உனக்கும் உன் சாட்சியங்களுக்கும் சிறைத்தண்டனை விதிக்கிறேன்," என்று தீர்ப்பளித்தார் மரியாதை ராமன்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.01.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 123
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 120

பரிசுக்குரியவர்:
மு. சிவகாமி,
ஹைலன்ஸ் ம.ம.வி. ஹட்டன்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம்.எம். நிலுஜான்<br>களு/ஜீலான் மு.ம.கல்லூரி, பாணந்துறை. | செல்வி.சி.சரண்யா<br>சென் ஜோன்ஸ் மகா வித்., கொழும்பு-15. |
| சதீந்திரா நாகரெத்தினம்<br>மட்/ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், மண்டூர். | ஆர். துஷாந்தன்<br>இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு. |
| எம்.ராஜினி<br>மத்திய மகா வித்தியாலயம், காத்தான்குடி. | ஆர். உதர்ஷன்<br>சில்வெஸ்டர் கல்லூரி கண்டி. |
| ஏ.சீ. மொகமட் றிஸ்வான்.<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | தெ. ஜயந்திரநாத்<br>ஸ்ரீ கோணேஸ்வர இந்து கல்லூரி, திருகோணமலை. |
| நஸீர் பாத்திமா நஸ்ரீயா<br>நெய்தல் நகர், மூதூர். | லி. ரஜீவ்<br>இ/ பரி, யோவான் தமிழ் ம.வி. றக்குவானை. |

## செய்து பாருங்கள்
### சீசோ பொம்மை



ஒரு நீளமான மெழுகுவர்த்தியை எடுத்து அதன் அடிப்பகுதியைச் சீவி அங்கும் திரி வெளியே தெரியும்படி செய்யவும். மெழுகுவர்த்தியின் சரியான நடுப்பகுதியில் ஒரு மெல்லிய ஆணியைச் செருகவும். ஆணியின் இருபுறத்தையும் இரு கண்ணாடி டம்ளர் (கிளாஸ்) மீது வைத்து சமன் செய்து நிற்க வைக்கவும். இப்போது மெழுகுவர்த்தியின் இருமுனையும் மேலேயும், கீழேயும் அசைந்து சீசோ போல் செயல்படும். உங்களிடம் ஏதேனும் சிறு இலேசான பொம்மைகள் இருந்தால் அதை மெழுகுவர்த்தியின் இரு ஓரங்களிலும் வைக்கலாம். அல்லது தகரத்திலோ அட்டையிலோ மனித உருவங்களை வெட்டி எடுத்து அவற்றை மெழுகுவர்த்தி முனைகளில் வைத்து விட்டு மெழுகுவர்த்தியை எரிய விட்டால் அழகிய சீசோ பொம்மை கிடைக்கும்.

### ஐ.நா. ஆரம்பம்

1945ல் இரண்டாம் உலகப் போரினால் பெரும் இழப்புக்களைச் சந்தித்த உலக நாடுகள் ஒன்று கூடி சான்பிரான்சிஸ்கோ நகரில் ஐ.நா. சாசனத்தை அங்கீகரித்தன.

## வாரம் ஒரு நாடு

### ஜோர்டான்

**தலைநகர்** - அம்மான்
**பரப்பளவு** - 97,740 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை** - 44,00,000
**மொழி** - அரபி, ஆங்கிலம்
**எழுத்தறிவு** - 71%
**சமயம்** - இஸ்லாம்
**நாணயம்** - ஜோர்டான் டினார்
**தனிநபர் வருமானம்** - 2070 டொலர்.

**வரலாறு:**

பிரிட்டனிடமிருந்து 1946 இல் சுதந்திரம் பெற்றது. 1949 வரை டிரான்ஸ் ஜோர்டான் என்றே அழைக்கப்பட்டிருந்தது. மன்னரால் நியமிக்கப்படும் 60 உறுப்பினர் கொண்ட ஆட்சிச்சபை உள்ளது. 1994 ஜூலை 25ல் இஸ்ரேலுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இதன் மூலம் இஸ்ரேலுடன் 46 ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த விரோதம் முற்றுப் பெற்றுள்ளது.

**பொருளாதாரம்:**

ஜோர்டானின் பெரும்பகுதி பாலைவனம். ஆனால் அதன் மேற்குப் பகுதி வளமானது. அங்கு எலுமிச்சை, கொடி முந்திரி, கோதுமை, பார்லி, அவரை இனம், வத்தகை ஆகியன விளைகின்றன. பொஸ்பேட்டுகள் இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும். சுற்றுலாத் துறை வருமானம் முக்கிய அந்நியச் செலாவணி மூலமாகும்.



## விடுகதைகளும் விடைகளும்

1. மடக்கும் விரிக்கும் மட்டை முடிச்சிறகு அது என்ன?
2. தெப்பத்துக்குள் சிரிக்கிற முத்துக்கள் அது என்ன?
3. ஆயிரம் கம்பிக்கு அடிக்குட்டி ஒன்று அது என்ன?
4. சளிமூக்குக்காரன் சந்தைக்குப் போகிறான் அவன் யார்?
5. வெள்ளைப் பூண்டுப் பல்லில் விதைத்த மிளகு- அது என்ன?
6. மரத்தில் விரியாத மஞ்சள் இலை என்ன இலை?
7. குத்தக் குத்தக் குடையும், வெட்ட வெட்ட விரியும் அது என்ன?
8. பட்டம் பறந்ததும், படிப்புச் சிறந்ததும் எதனால்?
9. காட்டிற்குள் பறவைகள் கண்ணாடி பார்ப்பது எதில்?
10. ஒரு குடிசைக்கு இரண்டு வாசல் அது என்ன?

### விடைகள்

1. குடை 2. பற்கள்
3. விளக்குமாறு 4. நுங்கு
5. கண் - கருவிழி 6. அப்பளம்
7. குழி 8. நூலால்
9. குளம் 10. மூக்கு

தொகுப்பு: எம். எச். அப்துல்லா,
களுத்துறை தெற்கு.

## எக்ரேட்ஸ்



படத்தில் இருக்கும் இந்தப் பறவையின் பெயர் எக்ரெட்ஸ். இது நீரில் ஆழமில்லாத இடங்களில் நின்று கொண்டு அசைவே இல்லாமல் காத்திருக்கும். அப்போது அந்தப் பக்கம் வரும் மீன்களைப் பிடித்துச் சாப்பிடும்.

படத்தில் இருக்கும் கறுப்பு எக்ரெட்ஸ், தனது சிறகுகளைக் குட்டிக் குடிசை மாதிரி ஆழகாக விரித்து விட்டு, தண்ணீரில் அசைவின்றி நிற்கும். சூரிய ஒளி படாததால் தண்ணீரில் எவ்வித கலங்கலும் ஏற்படாது தெளிவாக இருக்கும். அந்நேரத்தில் அங்கு வரும் மீன்கள் இந்த எக்ரெட்ஸிடமிருந்து தப்பிக்கவே முடியாது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 16

# விலை உயர்ந்த குற்றம்



## பட்டுக்கோட்டை பிரபாகர்

"கிட்ட வர்றியா. இவனை மிதிச்சுக் கொன்னுடவா?"

"விட்டுடு அவரை. ஏன்? ஏன்?" என்று அருகே வர... வந்தவளின் கழுத்தில் கை போட்டுத் தன் அருகில் இழுத்து வளைத்துக் கொண்டு அவள் நெற்றிப் பொட்டில் பிஸ்டல் முனையை வைத்தான்.

"என்கிட்டே பணம் கொடுத்து, சரவணகுமாரை வாங்கிட்டியே, இப்ப எங்கே அவன்? சொல்டா. என்ன முழிக்கிறே? நாலு நாளா பம்பாய்ல உனக்காக நான் சுத்தாத இடமில்லை. இன்னைக்குத் தான் மாட்னே. சொல்றியா, இவளைச் சுடவா?" என்று அவன் பேசுவதற்காக காலின் அழுத்தலை லேசாகத் தளர்த்தினான் சுபா.

"அவளை எதுவும் செஞ்சுடாதே."

"எதாவது செய்யணும்னாக்கூட வசதியாத்தான் நிக்கிறாகுட்டி, துண்டை உருவிடட்டுமா? என்னடி எத்தனை மச்சம் வச்சிருக்கே உடம்பு பூரா" என்று அவள் துண்டின் மேல் புற செருகலில் கை வைக்க..."

"நோ" என்று அலறினாள்.

"உனக்கு என்ன வேணும், என்னைக் கேளு. அவளை விட்டுடு" என்றான் மார்ட்டின் அவசரமாய்.

"அப்ப சொல்லு. மெட்ராஸ்ல அரிசி ட்ரம்லேர்ந்து பணப் பார்சலை எடுத்தது நீ தானே?"

"ஆ... ஆமாம்"

"இப்ப சரவணகுமார் எங்கே?"

மார்ட்டின் பரிதவித்தான். சொல்வதா, வேண்டாமா? சரியான பிடியில் சிக்கிவிட்டோம். கழுத்தில் கால் இருக்கிறது. கையில் பிஸ்டல் இருக்கிறது. ஏமாந்தா வெறியில் இருப்பவன் எதுவும் செய்வான். என் உயிர் முக்கியம். என் ஆஷா முக்கியம்.

"சொல்ல மாட்டியா?" என்ற சுபா துப்பாக்கியை ஆஷாவின் நெற்றிப் பொட்டில் இருந்து எடுத்து, "ஏய், ஆ காமிடி" என்று வலுக்கட்டாயமாக அவள் வாய்க்குள் முனையைச் செருகி,

"சுடட்டுமா? இப்படியே சுடட்டுமா? நிர்வாணமாக்கிச் சுடட்டுமா?"

"சொல்லிடறேன். சரவணகுமார் இப்போ அமெரிக்கா போய்ட்டான். பார்க்கர்னு ஒரு ஆளு வந்தான். அவனுக்காகத் தான் நான் ஒத்துழைச்சேன்."

சுபா மேலும் கேள்விகள் கேட்கக் கேட்க, வரிசையாகப் பூராவையும் சொன்னான்.

"நீ சொன்னதிலே எதுவும் பொய் இல்லையே?"

"இல்லவே இல்லை."

"சரி" என்று ஆஷாவின் வாயிலிருந்து துப்பாக்கியை உருவிக் கொண்டு, "எதாச்சும் பொய் இருந்திச்சி உன்னை விட மாட்டேன். வந்ததுக்கு ஒரே ஒரு போனஸா..." என்று சட்டென்று ஆஷாவின் உதடுகளை முரட்டுத்தனமாகக் கவ்விச் சுவைத்து விட்டுத் தள்ளி விட்டு, "ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்" என்று வெளியேறினான் சுபா.

✖✔✖

சென்னை

மறுநாள் மாலை பரத் அலுவலகத்தை விட்டுப் புறப்பட இருந்த நேரத்தில் போனில் நியூட்டன் மிகுந்த உற்சாகமான குரலில் ஆரம்பித்தார், "பரத், உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை."

"ஏன், என்ன சார்?"

"நேத்து போட்டோ கொடுத்துட்டுப் போனிங்களா? உடனே ஃபுல் ஸ்விங்ல எறங்கிட்டேன் நான். அந்தக் கடத்தினவனுக்குப் பக்கத்து சீட்ல இருந்த ஃபாரினர்ஸைத் தேடச்சொன்னனா, ஹோட்டல் மரிஜ்ஜீவானாவில அவங்க தங்கி இருந்ததா ஒரு எஸ்.ஐ அங்கேர்ந்து போன் செஞ்சார். புறப்பட்டுப் போயி விசாரிச்சதில பார்க்கர் ஸ்மித்ன்னு அமெரிக்காகாரன் கூட ஒரு குட்டியோட தங்கியிருந்திருக்கான்."

"யு மீன் நாய்க்குட்டி?"

"வெள்ளைக்காரப் பொண்ணு சார். போட்டோல இருக்காளே, அவ. யாரோ உள்ளூர் ஆசாமிங்க வர, போக இருந்திருக்காங்க. அவன் முதல்ல பம்பாய் போய்ட்டான். ரெண்டு நாள் அவ மட்டும் தங்கியிந்துட்டு அப்புறம் காலி செஞ்சிருக்கா. வந்துட்டேன். வீட்ல இன்னொரு சுவாரஸ்யமான தகவல். வந்தனா இல்ல,"

"யார், நம்ம வைஃபுதானே சார்?"

"என் வைஃப்! அவளுக்கு இன்னிக்கு பர்த்டே. வருஷா வருஷா பர்த்டே அன்னைக்கு கிண்டில இருக்கிற அரவிந்தா அனாதை இல்லத்துக்குப் போய் ஸ்வீட்ஸ், புஸ்த்தகம்னு கொடுத்துட்டு வருவோம். காலைல போயிருந்தோம். அங்க கணேசன்னு ஒரு பையன் துறுதுறுன்னு இருப்பான். அவனை வந்தனாவுக்கு ரொம்பப் பிடிக்கும். எங்க அவனைக் காணமேன்னு கேட்டா, பார்க்கர் ஸ்மித்துன்னு ஒரு அமெரிக்கனுக்கு தத்துக் கொடுத்தாச்சுன்னு தகவல் வந்திச்சி. நான் நம்ப போட்டோவைக் காமிச்சி இந்த ஆளான்னு கேட்டா, ஆமான்னாங்க. போலீஸ் மூளை யாச்சா, எனக்கு பரபரன்னு ஆய்டுச்சி. அமெரிக்க அட்ரஸ் வாங்கிட்டு நேரா கமிஷனர் ஆஃபிஸ் போய்ட்டேன். டி.சி. யைப் பார்த்து இந்த மாதிரி சந்தேகமா இருக்குன்னேன். உடனே பாஸ்போர்ட் ஆஃபீசுக்கு ஓடினேன். அப்ளிகேஷனைப் பார்த்தா... மை காட்! கணேசன் பேர்ல அப்ளிகேஷன். ஒட்டியிருக்கிற போட்டோ நம்ம சரவணகுமாருது."

"என்னது?" என்று ரிசீவரைத் தவறவிட இருந்தான் பரத்..

"அமெரிக்காவுக்கு ஓவர்சீஸ் கால் போட்டா, அந்த நம்பர் கேன்ஸலாயிடுச்சின்றாங்க. டெல்லி வழியா நம்ம எம்பஸியை தொடர்பு கொண்டு விசாரிக்க ஏற்பாடு செஞ்சிருக்கேன். இங்க இந்த ஃபோர்ஜரி பாஸ்போர்டுக்கு எந்த ஏர்லைன்ஸ் டிக்கெட் கொடுத்தான். எங்க போகக் கொடுத்தான்னு விசாரிக்க ஒரு படை போயிருக்கு. இன்னும் ஒரு மணி நேரத்தில நான் ஜீவானந்தம் வீட்டுக்குவர்றேன். நீங்களும் வர்றிங்களா, பேசலாம்."

"ஷ்யூர்" என்று வைத்து, "சுசி, உனக்கு சேதி தெரியுமா?" என்றான் பரத்.

"கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். ஸோ, பையன் இப்ப அமெரிக்காலயா?" என்றாள் **'HIDING IS IMPOSSIBLE'** என்று வசனமெழுதிய ப்ளு டி ஷர்ட் அணிந்த சுசி.

"அப்படித்தான் இருக்கணும் சுசி,"

"பின்னே இங்கே எதுக்கு ப்ளாக்மெயில் நாடகம்?"

"போலீசை திசை திருப்ப."

"ஒரிஜினல் கணேசன் எங்கே?"

"என் பாண்ட் பாக்கெட்ல! என்னைக் கேட்டா? இனிமே தான் ஒண்ணு, ஒண்ணாத் தெரியும். ஜீவானந்தம் வீட்டுக்குப் போகணும். இதே ட்ரெஸ்ஸா உனக்கு?"

"இதுக்கென்ன குறைச்சல்?"

"உனக்கு எதுவுமே குறைச்சலே கிடையாது சுசி. அனாவசியமா டிஸ்கஷன்ல தொந்தரவா இருப்பியேன்னு பார்த்தேன். சரி, வா, மாதவி வீட்டுக்குப் போயாச்சா?"

"போயாச்சு. வாங்க."

"அடடா! யோகா சொல்லித் தாங்க சார்ன்னு கேட்டா. காலைல வீட்டுக்கு வரச் சொல்லலாம்னு இருந்தேன். சரி நாளைக்குச் சொல்லிட்டு மறுநாள்ல ஆரம்பிக்க வேண்டியதுதான்.

"யோகாவா? வரட்டும் அவ! நாளைக்கு வச்சிக்கறேன்."

ரவியை அனுப்பிவிட்டு, அலுவலகத்தை மூடிக்கொண்டு புறப்பட்டு ஜீவானந்தம் வீட்டில் காரை நிறுத்தின போது, ஏற்கனவே ஜீப் நின்று கொண்டிருந்தது.

உள்ளே இவர்கள் வந்ததும் நியூட்டன், "வாங்க. இப்பதான் சாருக்கு எல்லாம் சொல்லி முடிச்சேன். இன்னும் அதிகப்படியான தகவல்கள் வந்துடிச்சி பரத். மூனு நாள் முன்னாடியே பம்பாய்லேர்ந்து பார்க்கர் ஸ்மித், அந்தப் பொண்ணு ஆனி, கணேசன் பாஸ்போர்ட்ல நம்ம சரவணகுமார் மூனு பேரும் நியுயார்க்குக்குப் பறந்தாச்சு. அந்த அட்ரஸ்ல பார்க்கர் ஸ்மித் இல்லை. வீடு காலியாய்டுச்சி. கொஞ்சம் பிளாண்டா நடந்திருக்காங்க. டிபார்ட்மெண்ட் என்னை அமெரிக்காவுக்கு அனுப்ப முடிவு செஞ்சிருக்கு. ஜீவா சார் என்ன சொல்றார்ன்னா... நீங்களே சொல்லுங்க சார்" என்றார்

ஜீவானந்தம் சொன்னார், "பரத், நீங்களும் அமெரிக்கா போங்க. இந்தப் பொண்ணும் தேவைன்னாலும் கூட்டிக்கிட்டுப் போங்க. எல்லா செலவையும் நான் ஏத்துக்கறேன். அங்கே பாஸ்டன்ல என் மச்சான் ஒருத்தன் டாக்டரா இருக்கான். என்ன உதவி வேணாலும் செய்வான். லெட்டர் தர்றேன். இன்ஸ்பெக்டர் உங்களுக்கு பக்கபலமா இருப்பார். அவருக்கு நீங்க துணையா இருப்பீங்க. செலவு எனக்குப் பிரச்சினையே இல்லை. எனக்கு சரவணன் முக்கியம். இன்னும் பத்துப் பேரை வேணாலும் கூட்டிட்டுப் போங்க."

"அது...வந்து சார்... இங்கயே ரெண்டு, மூணு கேஸ் பெண்டிங்ல..."

"அதெல்லாம் எதுவும் சொல்லக் கூடாது. நீங்க போறீங்க. பாஸ்போர்ட்ஸ் உங்களுக்கு..."

"அதெல்லாம் இருக்கு..."

"வாங்க பரத் போய்ட்டு வரலாம். அவர் சொல்ற மாதிரி எனக்கு உதவியா இருக்கும். உங்களுக்கும் விசாஸ், டிக்கெட்ஸ் ஏற்பாடு செஞ்சிடறேன்" என்றார் நியூட்டன்.

"என்ன சுசி?" என்றான் பரத்

"அங்கே சைட் சீயிங், ஷாப்பிங் இது ரெண்டுக்கும் காரியம் முடிஞ்சதும் டைம் ஒதுக்கறதானா...டபுள் ஓக்கே, இல்லைன்னா சிங்கிள் ஓக்கே" என்றாள் சிரித்து.

● ♦ ●

"அடப்பாவி! என்னடா சொல்றே? என்றார் கண்ணபிரான் போனில்.

"ஆமாம் சார், துப்பாக்கி முனையில என்னை மிரட்டினதால உண்மையைச் சொல்றதைத் தவிர எனக்கு வேற வழி தெரியலை சார், எல்லாத்தையும் சொல்ல வேண்டியதாய்டுச்சி."

"என் பேரையும் இழுத்து விட்டுட்டியா?"

"இல்லை சார், பார்க்கர் ஸ்மித்தைத் தான் சொன்னேன்."

"உன்னை எவண்டா அங்க ஒரு வாரம் தங்கச் சொன்னது முண்டம்?"

"தப்புதான் சார், சொன்னனே ஆஷான்னு..."

"பொம்பளைக்கு வழிஞ்சியின்னாலே சிக்கிக்கறது நிச்சயம்டா முட்டாள். சரி, வந்து சேரு. நான் கால் போட்டுப் பேசி ஜாக்கிரதையா இருக்க ஏற்பாடு செஞ்சிக்கச் சொல்றேன் அவன்கிட்ட."

கண்ணபிரான் பார்க்கர்ஸ்மித்தை போனில் தொடர்பு கொள்ள முயன்று தோற்றுப் போனார். அவனாகப் பேசினால் தான் தெரிவிக்க முடியும் என்று சொந்த ஜோலி பார்க்க ஆரம்பித்தார்.

♥♥—♥♥

பான் அமெரிக்கனின் விமானத்தில் சொகுசாகச் சாய்ந்து கொண்டு வானத்தில் மிதக்கையில் நியூட்டன் அருகில் பரத்திடம் "இன்னிக்குப் பேப்பர்ல நான் கொடுத்த மாதிரியே சேதி பப்ளிஷ் ஆய்டுச்சி. பார்த்திங்களா?" என்று எடுத்துக் காட்டினார்.

அவர் காட்டிய செய்தியில்...

'தொழிலதிபர் ஜீவானந்தத்தின் மகன் சரவணகுமார் கடத்தப்பட்டது தெரிந்ததே. சில மர்ம ஆசாமிகள் அவரைத் தொடர்பு கொண்டு அதிகமான தொகை கொடுத்தால், பையனை விடுதலை செய்வதாக மிரட்டி வருகிறார்களாம். அவர்களை மடக்க போலீஸ் மிகத் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது' என்று இருந்தது.

"சரவணகுமார் மெட்ராஸ்லதான் இருக்கான்னு நம்மை நம்ப வைக்க அவங்க நாடகமாடறாங்க. அதை நாங்க முழுதுமா நம்புறோம்னு அவங்களை நம்ப வைக்கத் தான் இந்த சேதி."

"வெரிகுட் சார்" என்று திரும்பி சுசியின் காதில், "நம்மை பிரைவேட்டாய்ப் பேச இவர் விடவே போறதில்லை சுசி. இப்படி ஒரு ஓசி சவாரி எதிர்பார்த்தியா?"

"பரத்" என்று தோளைத் தொட்ட நியூட்டன், "வந்தனா கூட இப்படித்தான், பயணம்னா வாயைத் திறக்கவே மாட்டா. இதே மாதிரி சுசிலா மாதிரியே வரிசையா பல்லு. என்ன ஒரு வித்தியாசம்னா வந்தனா ஒரு மூக்கு குத்தியிருப்பா." என்றார்.

"சுசிலா மாதிரி பிரா போடாம பனியன் போட்டுக்கறது கூட உண்டா சார்..?" என்று கேட்க மிகவும் ஆசைப்பட்டான் பாரத்.

நியூட்டன் வழி நெடுகிலும் இப்படித் தான். வந்தனாவுக்கும் தயிர் பிடிக்காது, இப்படித்தான் நாசூக்கா சாப்பிடுவா, இப்படித்தான் மூடு வந்தா படு தமாஷாப் பேசுவா என்று வராத வந்தனாவைப் பேச்சு முழுக்க நிரப்பிக் கொண்டே வர....

நியுயார்க்கில் விமானம் இறங்கினபோது மழை தூறிக் கொண்டிருக்க மத்தியானம் ஒன்று ஆகியிருந்தது. இமிக்கிரேஷன் முடித்துக் கொண்டு, லக்கேஜ்களைக் கலெக்ட் செய்து கொண்டு வெளியே வந்த போது, "நான் தான் சதுர்வேதி. ஜீவானந்தத்தோட மச்சான்." என்று வந்து கை குலுக்கினவரின் பாக்கெட்டில் ஸ்டெத்தாஸ் கோப் இல்லை. அரைக் கண்ணாடி அணிந்திருந்தார். மீசையை முறுக்கி விட்டிருந்தார். தலையில் திடல் வைத்திருந்தார்.

பரத் சுசிலாவையும், நியூட்டனையும் அறிமுகப்படுத்தினதும் நியூட்டன், "நான் உடனே வாஷிங்டனுக்கு ஒரு கால் போட்டுப் பேசணுமே." என்றான்.

"அரை மணில உங்களுக்கு ஏற்பாடு செஞ்சிருக்கிற ஹோட்டல் போய்டலாம். அங்க போய்ப் பேசலாமா? இல்லை. இன்னும் அவசரம்னா இங்கேர்ந்தே பேசலாம்."

"சரி, ஹோட்டலுக்குப் போய்டலாம்."

காரைச் சொந்தமாக ஓட்டினார் சதுர்வேதி. ஆறாவது அவென்யூவில் இருந்தது நியூயார்க் ஹில்டன் ஹோட்டல். முழுசுமாய்ப் பார்க்க கழுத்து வலித்தது. அதன் கம்பீரத்தின் முன்னால் மனிதனின் ஈகோ மேல் ஒரு அறை விழுந்தது. கண்களில் படிந்த பிரமிப்பைக் கஷ்டப்பட்டுத் தான் அகற்ற வேண்டியதாயிருந்தது.

"ஒரு நாளைக்கு எவ்வளவு சார் வாடகை?"

என்றாள் சுசிலா.

உங்களுக்கு புக் பண்ணியிருக்கிற சூட்ல மூணு தனித்தனி ரூம்ஸ் இருக்கு. நூத்தி அறுபது டாலர் பெர் டே."

சூட்டில் சாமிப் படம் தவிர சகல சௌகரியங்களும் இருந்தது. உள்ளே கால் எடுத்து வைத்ததுமே போட்டோ எடுத்து அடையாள அட்டைகள் வழங்கி விட்டார்கள். பிக்சர் போனில் ரிஸப்ஷனிஸ்ட் காத்தரினோ, மார்ட்டினாவோ புன்னகையுடன் அறை உங்களுக்குச் சௌகரியமாக இருக்கிறதா என்று விசாரித்தாள். உன் ஏழாவது பல் தங்கமா, வெள்ளியா என்ற பரத் தமிழில் விசாரித்தான். நியூட்டன் மும்முரமாய் வாஷிங்டன் கால் பேசினார்.

"நான் போயி என் பையனைக் காரோட அனுப்பறேன். உங்களோட வச்சிக்கங்க. உபயோகமா இருப்பான். வழி காட்டுவான். விவரம் சொல்லுவான்." என்று கை கூப்பின சதுர்வேதி, "உங்க காரியம் முடிஞ்சதும் பாஸ்டனுக்கு என் வீட்டுக்கு வந்து ரெண்டு நாள் தங்கணும். எதாச்சும்னா போன் செய்ங்க. வந்துடறேன்" என்று புறப்பட்டார்.


போனை வைத்த நியூட்டன், "நாம் இருக்கிற எடத்தைச் சொல்லிட்டேன். நம்ப எம்பஸியிலேர்ந்து ஒரு ஆஃபீஸரை நம்ம உதவிக்கு அனுப்பறாங்க. வரட்டும். கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கலாம். நான் இந்த ரூமை எடுத்துக்கறேன்." என்றார் முதல் அறையைக் காட்டி.

"பரத் ஊருக்குப் போறதுக்கு முன்னாடி ஒரு கேள்வி அவரைக் கேட்டே ஆகறதுன்னு முடிவு செஞ்சிட்டேன்" என்றாள் சுசிலா.


பரத் புன்னகைத்து, "நீ என் கேப்பேன்னு எனக்குத் தெரியும்" என்று டி.வியின் கதவைத் தள்ளிவிட்டு, ஆன் செய்து, அருகில் இருந்த புரோக்கிராம் டைரி எடுத்து இன்றைய தேதியில் இந்த நேரத்தில் எந்த சானலில் என்ன புரோக்கிராம் என்று பார்த்து ஏழாவது சானலைத் தேர்ந்தெடுத்து, "சுசி, சிகாகோ சிம்ஃபனி ஆர்கெஸ்ட்ரால லிஸாமினல்லி பார்க்கறியா, ஸாரி கேக்றியா?" என்று ஆன் செய்து அமைத்தான்.

திடும், திடும் சங்கீதத்தை சில நிமிடங்கள் பார்த்து விட்டு சுசிலா ஸ்க்ரீன் தள்ளி யன்னல் வழியாகப் பார்த்தாள். மென்மையாய்த்தூறிக் கொண்டிருந்தது. ஆகாசம் குறி வைத்துக் கான்கிரீட் கட்டிடங்கள். Y வடிவ ஓவர் பிரிட்ஜிலும், பிராட்வேயிலும் அமைதி வாகனங்கள் வரிவரியாக டெலிப்பிரிண்டர் வார்த்தைகள் போல ஊர்ந்து கொண்டிருந்தன. இரண்டு விமானங்கள் ஹலோ சொல்லிக் கொண்டு எதிரெதிர் திசையில் பயணம் தொடர்ந்தன. *(தொடர்ந்து வரும்)*


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எஸ். கலைச்செல்வன்
வயது: 24
முகவரி: 200 பிரதான வீதி, கொழும்பு-11.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, நாவல்கள்.




பெயர்: எம். நிஸ்தார்
வயது: 18
முகவரி: உடநிதிகம், மடாடுகம, கெகிராவ.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, நண்பர் தொடர்பு.



பெயர்: எம்.லோகநாதன்
வயது: 28
முகவரி: கறுவாக்கேணி, அண்ணா வீதி, வாழைச்சேனை.
பொழுது போக்கு: சினிமா, பத்திரிகை.



பெயர்: கே.கலாரஞ்சன்
வயது: 30
முகவரி: P.O.BOX:3366, DOHA-QATAR.
பொழுது போக்கு: ரீ.வி, கதைப்புத்தகம்.



பெயர்: எம்.நஸீம்
வயது: 26
முகவரி: P.O.Box:7163. CODE NO:22082, SALMIYA, KUWAIT.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்: ஜே.ஜரீனா
வயது: 23
முகவரி: P.O.Box:31127, CODE NO:90803, AL.SULIBIKHAT, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: வீ.யோகன்
வயது: 20
முகவரி: போமன்ட் தோட்டம், புப்புரஸ்ஸ.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். அன்ஹார்
வயது: 20
முகவரி: 45/3பி, ஆர்டன் பொரஸ்ட், ஹேனமுல்ல, பாணந்துறை.
பொழுது போக்கு: பத்திரிகை வாசித்தல்.

பெயர்: எஸ்.ரொனி அல்விஸ்
வயது: 30
முகவரி: 40, RUE DES PRESLES, 93300, AUBERVILLIERS, FRANCE
பொழுது போக்கு: நண்பர் தொடர்பு, ரீ.வி, சினிமா.

பெயர்: என்.முகமட்
வயது: 22
முகவரி: P.O.BOX:827, TABUK, K.S.A.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, நண்பர்களுடன் அரட்டை.

பெயர்: எஸ். அன்டனி
வயது: 20
முகவரி: பி.வி.ஆர்.டெயிலர், தெரணியகலை..
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: எம். சமீம்
வயது: 16
முகவரி: 329, பொரல்ஹின்ன, ரம்பாவ, அநுராதபுரம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்

## 57

“நீங்கள் புத்தகங்கள் கொண்டு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்” என்று ரீபின் சோபியாவை அறிமுகப்படுத்தி வைத்தபோது அவன் சொன்னான்.

“ஆமாம்” என்றாள் அவள்.

“ரொம்ப நன்றி-எல்லா மக்களின் சார்பாகவும் நான் நன்றி தெரிவிக்கிறேன். அவர்கள் இன்னும் உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், எனக்கு அது தெரியும். எனவே அவர்கள் சார்பில் நான் நன்றி கூறுகிறேன்.”

அவன் பரபரவென்று சுவாசித்தான்; அவனது சுவாசம் ஆசுவாசமின்றி ஆழமின்றிப் பதைபதைப்போடு இயங்கியது. அவனது குரல் அடிக்கடி தடைப்பட்டது. பலமற்ற கரங்களின் எலும்பு விரல்கள் கோட்டுப் பித்தான்களை மாட்டுவதற்காக நெஞ்சுத் தடத்தில் தடுமாறித் தடவின.

“இந்த நேரத்தில் நீங்கள் காட்டுப் பக்கம் வருவது உங்கள் உடல் நிலைக்கு நல்லதல்ல. காட்டில் ஈரமாயும் புழுக்கமாயும் இருக்கிறது.” என்றாள் சோபியா.

“எனக்கு இனி எதுவுமே நல்லதல்ல” என்று மூச்சைப்பிடித்துக்கொண்டு சொன்னான் அவன்; “சாவு ஒன்றுதான் இனி எனக்கு நல்லது!”

அவனது குரலைக் கேட்டாலே நெஞ்சில் வேதனை உண்டாயிற்று; அவனது தோற்றம் முழுவதும் ஓர் அதீதமான அனுதாப உணர்ச்சியையே கிளறிவிட்டது. அந்த அனுதாப உணர்ச்சியால் எந்தப் பலனும் இல்லாததோடு, வெறும் கசப்புணர்ச்சியே மிஞ்சி நிற்கும் என்பது தெரிந்திருந்தும் கூட, அனுதாபம் உண்டாகத்தான் செய்தது. அவன் ஒரு பீப்பாயின் மீது அமர்ந்து தனது முழங்கால்களை மிகவும் நிதானமாக மடக்கினான்; அந்தக் கால்களை ஒடிந்து விடாதபடி பதனமாக மடக்குவது மாதிரி இருந்தது அவனது செய்கை. வியர்த்திருந்த நெற்றியைத் துடைத்தான். அவன் முடியோ சருகு போல உயிரற்றிருந்தது.

நெருப்புப் பற்றியெரிந்தது. சுற்றியுள்ள பொருள்கள் எல்லாம் அசைந்தாடும்படியாக அனல் அடித்தது. காட்டுக்குள் இருள் கவிந்து நிழலாடியது. நெருப்புக்கு மேலாக, உப்பிய கன்னங்களோடு விளங்கும் இக்நாதின் உருண்ட முகம் பிரகாசித்தது. நெருப்பு மீண்டும் அணைந்து விட்டது. புகை நாற்றம் மண்டியது. மீண்டும் இருளும் அமைதியும் நிலவியது; எனவே அந்த நோயாளி மனிதனின் கரகரத்த குரலை அப்போது தெளிவாகக் கேட்க முடிந்தது.

“நான் இன்னும் சாதாரண மக்களுக்கு உதவ முடியும். ஒரு பெரிய குற்றத்தின் உயிருள்ள ஞாபகச் சின்னமாக நான் விளங்க முடியும்.... இங்கே, என்னைப் பாருங்கள்... இருபத்தெட்டு வயதிலேயே நான் செத்துக் கொண்டிருக்கிறேன். பத்து வருஷங்களுக்கு முன்னால், நான் ஐநூறு பவுண்டுக் கனமுள்ள சாமான்களைக் கூடக் கொஞ்சமும் முக்கி முனகாமல் சுமந்து சென்றுவிடுவேன். அந்த மாதிரியான உடல் வளம் மட்டும் இருந்திருந்தால், என்னால் எழுபது வயது வரை கூடச் சுலபமாக உயிர்வாழ முடியும் என நான்நினைத்தேன். ஆனால், நானோ மேற்கொண்டு பத்தே பத்து வருஷங்கள் தான் உயிர்வாழ முடிந்தது. இப்போதோ- இதுதான் என் அந்திம காலம். என்னுடைய முதலாளிகள் என்னைச் சுரண்டிக் கொள்ளையிட்டு விட்டார்கள்; என்னுடைய வாழ் நாளின் நாற்பது வருஷ காலத்தை- நாற்பது வருஷ காலவாழ்வையே அவர்கள் பறித்துக் கொண்டு விட்டார்கள்!”

“இதுதான் அவன் பாடுகிற பாட்டு!” என்றான் ரீபின்.

மீண்டும் நெருப்புப் பற்றிக்கொண்டு முன்னைவிடப் பிரகாசமாகவும் பெரிதாகவும் எரிய ஆரம்பித்தது. மீண்டும் அங்கு சூழ்ந்து நின்ற இருள் தோப்பைப் பார்க்க விலகியோடியது; மீண்டும் அந்த நெருப்பை நெருங்கி வந்து ஊமையாக, வெறுப்போடு நடமிட்டு அசைந்தாடத் தொடங்கியது. ஈர விறகு இரைச்சலோடு வெடித்தது. வெதுவெதுப்பான காற்று வீசியபோது மரத்திலைகள் சலசலத்தன. சிவப்பும் மஞ்சளும் கலந்த தீ நாக்குகள் ஒன்றையொன்று கட்டித் தழுவி உற்சாகமாக விளையாடின; அவை மேலோங்கி எரியும்போது தீப்பொறிகள் உதிர்ந்து பொரிந்தன. நெருப்புக் கனலும் ஒரு தீச்சருகும் பறந்து சென்று அணைந்து செத்தன, வானத்துத் தாரகைகள் பூமியை நோக்கிப் புன்னகை பூத்தன; அந்தத் தீப்பொறிகளைத் தமது நட்சத்திர மண்டலத்துக்குக் கவர்ந்திழுக்க முயன்றன.

“இது என் பாட்டல்ல; துர்ப்பாக்கியம் நிறைந்த தங்கள் வாழ்க்கை எத்தனை பேருக்கு ஒரு பெரிய பாடமாக விளங்கக் கூடும் என்பதையே அறியாத பல்லாயிரம் மக்களின் பாட்டு இது. எத்தனை மக்கள் தங்களது உழைப்பினால் முடமாகிறார்கள், எத்தனை பேர் வாய் பேசாது பட்டினிச் சாவு சாகிறார்கள்...” அவன் மீண்டும் இருமலினால் குனிந்து குலுங்கினான்.

யாகவ் மேஜைமீது ஒரு பாத்திரம் நிறைய ‘க்வாஸ்’ பீரும், வசந்த காலத்து வெங்காயம் சிலவற்றையும் கொண்டு வந்து வைத்தான்.

“சவேலி, இங்கே வா. நான் உனக்குக் கொஞ்சம் பால் கொண்டு வந்திருக்கிறேன்” என்றான் அவன்.

சவேலி, தலையை ஆட்டினான். ஆனால் யாகவ் கக்கத்தில் கைகொடுத்து அவனை மேஜையருகே கூட்டிச் சென்றான்.

“அவனை ஏன் இங்கு வரவழைத்தீர்கள்? அவன் எந்த நிமிஷத்திலும் சாகக்கூடிய நிலைமையிலிருக்கிறானே” என்று ரீபினை நோக்கிக் கண்டிக்கும் தோரணையில் சொன்னாள் சோபியா.

“எனக்குத் தெரியும்” என்றான் ரீபின்; “ஆனால் அவனால் முடிந்த மட்டும் அவன் பேசிக்கொண்டிருக்கட்டும். அவனது வாழ்க்கை எந்த நல்ல காரணத்துக்காகவும் தியாகம் செய்யப் படவில்லை. இந்தக் கடைசிக் காலத்தையாவது அவன் நல்ல படியாய்ச் செலவழிக்கட்டுமே. எல்லாம் சரியாய்ப்போகும். நீங்கள் ஒன்றும் கவலைப் படாதீர்கள்!”

“இதில் என்ன, நீங்கள் ஆனந்தம் காண்கிறீர்கள் போலிருக்கிறதே!” என்றாள் சோபியா.

ரீபின் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு விரக்தியோடு சொன்னான்:

“சீமான் வீட்டுப் பிறவிகளான நீங்கள் சிலுவையில் அறையப்பட்டு முனகித் தவிக்கும் ஏசு கிறிஸ்துவைக் கண்டாலுங்கூட ஆனந்தம் கொள்வீர்கள். ஆனால் நாங்களோ இந்த மனிதனிடமிருந்து ஒரு பாடம் கற்றுக் கொள்ள விரும்புகிறோம்; நீங்களும் கற்றுக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறோம்...”

தாய் பயத்தோடு தன் புருவத்தை உயர்த்தியவாறே சொன்னாள்:

“சரி, சரி, இது போதும்.”

மீண்டும் அந்த நோயாளி மேஜையருகே தானிருந்த இடத்திலிருந்தே பேசத் தொடங்கினான்:

“அவர்கள் ஏன் மக்களை வேலையால் சாகடிக்கிறார்கள்? ஒரு மனிதனின் வாழ்நாளை அவர்கள் ஏன் கொள்ளையிட்டுப் பறிக்கிறார்கள்? எங்கள் முதலாளி- நான் நெபியோதவ் தொழிற்சாலையில் வேலை பார்த்தேன்- ஒரு பாட்டுக்காரிக்குக் குளிப்பதற்காக தங்கப் பாத்திரம் ஒன்றைப் பரிசளித்தான்; அவளது படுக்கைக்குக் கீழே போடுவதற்கு ஒரு தங்கத்தாலான மூத்திரச் சட்டியைக் கூடப் பரிசளித்தான்; என்னுடைய பலமும் என்னுடைய வாழ்க்கையும் அந்தப் பாத்திரத்துக்குள்ளேயே போய்விட்டது. அதற்காகத்தான் நான் என் வாழ்க்கையைப் பறிகொடுத்தேன். என்னை வேலையைக் கொடுத்தே கொன்றுவிட்ட அந்த மனிதன் என்னுடைய வாழ்க்கையின் ரத்தத்தைக் கொண்டு தன் வைப்பாட்டியைக் களிப்பூட்டினான். என்னுடைய ரத்தத்தைக் கொண்டு அவன் அவளுக்குத் தங்கத்தாலான மூத்திரச் சட்டியை வாங்கிக் கொடுத்தான்.

“கடவுளின் அம்சமாகவும் கடவுளின் பிம்பமாகவும் தான் மனிதன் பிறந்தானாம்! அந்த உருவத்துக்கு அவர்கள் செய்த உபகாரத்தைப் பார்த்தீர்களா?” என்று கசந்து போய்ச் சொன்னான் எபீம்.

“பின்னே, சும்மா இராதே!” என்று தன் கையை மேஜை மீது தட்டி அறைந்து கொண்டே சொன்னான் ரீபின்.

“அத்துடன் நிறுத்திவிடாதே” என்றான் யாகவ்.

இக்நாத் ஒரு சிரிப்புச் சிரித்தான். ரீபின் எப்போதெப்போது பேசினாலும் அடங்காத அகோரப் பசிகொண்ட மனிதனின் பரபரப்போடு அந்த மூன்று இளைஞர்களும் அவனது பேச்சைக் காது கொடுத்துக் கேட்கத் துடிப்பதைத் தாய் கண்டறிந்தாள். சவேலியின் பேச்சு அவர்களது முகத்தில் ஒரு விசித்திரமான ஏளன பாவத்தைப் படரச் செய்தது. அந்தப் பாவம் துல்லியமாகவும் வெளியே தெரிந்தது. அந்த நோயாளிக்காக அவர்கள் கொஞ்சம் கூட அனுதாபப்பட்டதாகத் தெரியவில்லை.

“அவன் சொல்வதெல்லாம் உண்மை தானா?” என்று சோபியாவின் பக்கமாகச் சாய்ந்து கொண்டு மெதுவாகக் கேட்டாள் தாய்.

“ஆமாம் உண்மைதான்” என்று உரத்த குரலில் பதில் சொன்னாள் சோபியா. “இந்த மாதிரி விஷயங்களைப் பற்றி மாஸ்கோ பத்திரிகைகளில் கூட எழுதினார்கள்:”

“ஆனால் குற்றவாளிதான் தண்டிக்கப் படவே இல்லை!”

என்று சோர்ந்து போய்ச் சொன்னான் ரீபின். “அவனைத் தண்டித்தே இருக்க வேண்டும். அவனை ஜனங்களுக்கு மத்தியில் உருட்டித் தள்ளி, கண்டம் கண்டமாக, துண்டம் துண்டமாக வெட்டித் தறித்து, அவனது அழுகிப்போன மாமிசத்தை நாய்களுக்கு விட்டெறிந்திருக்க வேண்டும்! ஜனங்கள் மட்டும் விழித்தெழுந்து விட்டால், அவர்கள் கொடுக்கின்ற தண்டனை மகாப் பெரிய தண்டனையாவே இருக்கும். தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கழுவுவதற்காக அவர்கள் அவர்களது சொந்த ரத்தம்தான்! அவர்களது ரத்தக் குழாயிலிருந்து உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்கப்பட்ட ரத்தம் தான்; எனவே தங்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயத்தை அகற்றுவதற்காக பெருமளவு ரத்தம் சிந்துகிறார்கள்.”

“குளிருகிறது” என்றான் அந்த நோயாளி.

அவனை எழுந்திருக்கச் செய்து நெருப்பருகே கொண்டு போய் உட்கார வைப்பதற்கு யாகவ் உதவி செய்தான்.

இப்போது நெருப்பு பிரகாசமாக எரிந்தது; உருவமற்ற நிழல்கள் அதற்கு மேலாக நடுங்கியாடிக் கொண்டே, தீ நாக்குகளின் உற்சாகம் நிறைந்த விளையாட்டை வியந்து நோக்கிக் கொண்டிருந்தன. சவேலி ஒரு மரக்கட்டையின் மீது அமர்ந்து, மெலிந்து வெளுத்துப் போன தனது கரங்களை நெருப்பு வெக்கையை நோக்கி நீட்டினான். ரீபின் அவனை நோக்கித் தலையை அசைத்துவிட்டு, சோபியாவிடம் பேசத் தொடங்கினான்:

“இவன் புத்தகங்களைவிட, தெளிவாகக் கூறிவிட்டான். ஒரு யந்திரம் ஒரு தொழிலாளியைக் கொன்றால், அல்லது அவனது கையைத் துண்டாக்கி, அவனை முடமாக்கினால் அது அவன் குற்றம் தான் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு மனிதனின் ரத்தத்தை கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சித் தீர்த்து, அவனை குப்பைத் தொட்டியில் எறியும் சக்கைபோல விட்டெறிந்தால், அதற்கு மட்டும் விளக்கமே கிடையாதாம்! ஒருவனை ஒரேயடியில் படுகொலை செய்வதை என்னால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் ஒரு மனிதனைச் சிறுகச் சிறுகச் சித்திரவதை செய்து அவனைக் கொல்வதும், அதிலே ஆனந்தம் பெறுவதும் தான் எனக்குப் புரியவில்லை. அவர்கள் ஏன் மக்களை வதைக்கிறார்கள், அவர்கள் ஏன் நம்மை யெல்லாம் வாட்டி வதை புரிகிறார்கள்? அந்தச் சித்திரவதையில் ஆனந்தம் காண்பது அவர்களது சொந்த சுகத்துக்காக! அதன் மூலம் அவர்கள் இந்த உலகத்தில் சுகபோக வாழ்க்கை நடத்துவதற்கு; தாங்கள் கொடுத்து வாங்கி அனுபவிப்பதற்கு; பாட்டுக்காரிகளை, பந்தயக் குதிரைகளை, வெள்ளிக் கத்திகளை, தங்கத் தட்டுகளை, தங்கள் குழந்தைகளுக்கு விலையுயர்ந்த விளையாட்டுச் சாமான்களையெல்லாம் வேண்டுமட்டும் வாங்கிக் குவிப்பதற்குத் தான்! ‘நீ பாட்டுக்கு வேலையைச் செய்; கொஞ்சம் சிரமப் பட்டு வேலையைச் செய்; அப்படிச் செய்தால்தான் உன் உழைப்பின் மூலம் நான் பணத்தை மிச்சம் பிடிக்க முடியும்; மிச்சம் பிடித்து என் வைப்பாட்டி மூத்திரம் பெய்வதற்கு தங்கப்பாத்திரம் வாங்கிக் கொடுக்க முடியும்’ என்கிறார்கள் அவர்கள்!”

தாய் கவனித்துக் கேட்டாள். அவளது கண்முன்னால், அந்த இரவின் இருளுக்கு ஊடே மகன் பாவெலும் அவனது தோழர்களும் தேர்ந்தெடுத்துள்ள புனித மார்க்கம் பிரகாசமாக ஒளிவிட்டுத் தெரிந்தது.

சாப்பாடு முடிந்தவுடன் அவர்கள் அனைவரும் நெருப்பைச் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள். தீ நாக்குகள் விறகுக் கட்டைகளைப் பேராசையோடு நக்கிக் கொடுத்தன. அவர்களுக்குப் பின்னால் இருள் திரைபோலத் தொங்கி, வானத்தையும் தோப்பையும் மறைத்து நின்றது. அந்த நோயாளி தனது அகன்று விரிந்த கண்களால் நெருப்பையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் இடைவிடாது இருமினான்; அவனது உடம்பே குலுங்கியது. நோயினால் பாழ்பட்டுப்போன உடம்பிலிருந்து அவனது வாழ்வின் மிச்ச சொச்சங்கள் அனைத்தும் பொறுமையிழந்து விடுபெற முயன்று போராடுவது போல இருந்தது. நெருப்பின் ஒளி அவனது முகத்தில் விளையாடியது; எனினும் அவனது உயிர்ப்பற்ற சருமத்தில் அந்த ஒளி எந்த உணர்ச்சியையும் உருவேற்ற இயலவில்லை. அவனது கண்கள் மட்டும் அணையப் போகும் நெருப்பைப் போல் பிரகாசித்தன.

“சவேலி, நீ உள்ளே போய்ப் படுத்துக் கொள்வது நல்லது” என்று அவன் பக்கமாகச் சாய்ந்தவாறு சொன்னான் யாகவ்.

“ஏன்?” என்று அந்த நோயாளி சிரமத்தோடு கேட்டான். “நான் இங்கேயே இருக்கிறேன்; மனிதர்களோடு இருப்பதற்கு எனக்கு அதிக காலமில்லை.”

அவன் தன்னைச் சுற்றிலும் பார்த்தான்; சிறிது நேரம் கழித்து வெளுத்துப் போன புன்னையுடன் பேசினான்:

“உங்களோடு இருப்பதே எனக்கு நல்லது. உங்களைப் பார்க்கும் போது, பேராசையின் காரணமாகக் கொல்லப் பட்டவர்களுக்காக, கொள்ளையிடப் பட்டவர்களுக்காக நீங்கள் பழிக்குப் பழி வாங்குவீர்கள், வஞ்சம் தீர்ப்பீர்கள் என்று நினைக்கிறேன்.”

அவனுக்கு யாருமே பதில் சொல்லவில்லை. இவனது பலமற்றுச் சோர்ந்த மார்பின் மீது சரிந்தது; சீக்கிரம் அவன் தூங்கிப் போய் விட்டான். ரீபின் அவனைப் பார்த்துவிட்டு அமைதியாகச் சொன்னான்:

“இவன் எப்போதும் இங்கே வந்து உட்கார்ந்து இதையே, இந்த மனிதனின் ஏமாற்றத்தைப் பற்றியே பேசுவான். அவனது இதயம் முழுவதிலும் இந்த ஏமாற்றம்தான் நிரம்பியிருக்கின்றது. அந்த உணர்ச்சி அவனது கண்களையே திரையிட்டுக் கட்டி விட்டமாதிரி அவனுக்குத் தோ[illegible]றது; அதைத் தவிர வேறு எதையுமே அவன் பார்ப்பதில்லை உணர்வதில்லை.”

“அவன் வேறு என்னத்தைத்தான் பார்க்க வேண்டும்?” என்று ஏதோ சிந்தித்தவளாய்க் கேட்டாள் தாய். “தங்களது முதலாளிகள், மானாங்காணியாகவும் துராக்கிரமமாகவும் பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருப்பதற்காக, தினம் உழைப்பினாலேயே கொல்லப்பட்டுச் சாகிறார்கள் என்றால், இதைவிட உனக்கு வேறு என்ன விஷயம் தான் வேண்டும் என்கிறாய்?”

(தொடர்ந்து வரும்)

மக்சீம் கார்க்கி



# ‘ஓட்டோ கிராப்’ நட்புகள்

சிவாஜினி சதாசிவம்
— மாத்தளை —

நட்புக்குரியவர்களை ஞாபகப்படுத்தும் அந்த ‘ஓட்டோ கிராப்’ பை மீண்டுமொரு முறை புரட்டிப் பார்த்தாள் சுதா. இது ஒன்றுதான் நட்புக்குரியவர்களை அடையாளம் காட்டியது.

முன் பக்கத்திலேயே அவளது விருப்பத்திற்குரிய ‘லொஜிக்’ ஆசிரியரின்’ அன்பே உலகம்; உங்கள் மனம் போல வாழ்க்கை அமைய என் இனிய வாழ்த்துக்கள்’ என்றிருந்தது.

என்ன அருமையான ‘சேர்’! ‘ஒருவரின் உருவத்தைப் பார்த்து அவரைப் பற்றி நம் அபிப்பிராயத்தை சொல்லக் கூடாது’ என்பதற்கு ‘லொஜிக் சேர்’ நல்ல உதாரணம். குள்ளமான உருவம். மூக்குக் கண்ணாடி. ‘காதல் தோல்வியோ!’ என்று எண்ணக்கூடியவாறு ‘கருந்தாடி’ முகத்தை ஆக்கிரமித்திருந்தது. மொத்ததில் ‘அரிஸ்டோட்டிலை’ ஞாபக மூட்டும் முக அமைப்பு!

‘லோஜிக்’ வகுப்பென்றால் சுதா அரை மணித்தியாலத்திற்கு முன்னரே பாடசாலைக்குச் சென்று விடுவாள். சத்தியன் சேர், எட்டு மணிக்கு வகுப்பென்றால் எட்டரைக்குத்தான் வருவார்.

சக மணவர்கள் எல்லாம் அலுத்துக் கொள்வார்கள். சுதா, அவளை அறிந்தோ அறியாமலோ ‘சத்தியன் சேரை’ ஏசியது கிடையாது. ‘பாவம் சேர். எங்களுக்காக கஷ்டப்பட்டு கட்டுகஸ்தொட்டையிலிருந்து



கண்டி பஸ் ஸ்டாண்டுக்கு .போய் பின் மாத்தளை வர நேரம் சரியாக இருக்கும்’ என நினைத்துக் கொள்வாள்.

‘பாவம் சேர். எப்படி இருக்கிறாரோ? சேர்ட மகள் ‘ஜனனி’ இப்போது பெரிய ஆளாக இருப்பாள்.’

‘ஓட்டோ கிராப்பின்’ அடுத்த பக்கத்தை புரட்டினாள். ‘சராப்’ அழகான முத்து முத்தான எழுத்தில் குறியீடுகளாலே அப்பக்கத்தை நிரப்பி கையெழுத் திட்டிருந்தான். ‘எக்ஸாம்’ முடிந்ததும் ‘கொம்பியூட்டர்’ வகுப்பில் வைத்து ஒருநாள் கதைத்தான். அதன்பிறகு காணவேயில்லை.

மல்லிகா, விஜயா இருவரும் வித்தியாசமான ‘டைப்.’ எப்போதும் ‘மௌனம்’ அவர்களை ஆட்சி செய்யும். அதிலும் விஜயா ‘சாமியாரிணி’.

அடுத்த பக்கத்தில் ‘ஆளை விட அறிவுரைகள் கூறி எழுதியிருந்தாள் மஞ்சு. அவள் தான் வகுப்பிலே ஒரு ‘கல கல’. அவளை ‘எக்கோனோமிக்ஸ்’ எக்ஸாமில் கண்டது தான். இப்போது வீட்டை கல கலக்க வைக்கிறாள் போல.

தவம், முதலாம் முறையே ‘எக்ஸாமில்’ கோட்டை விட்டுவிட்டு இரண்டாம் முறையாகவும் ‘எக்ஸாம்’ செய்யப்போகிறானாம்....!

முகைதீன், அர்ஷாட் இருவரும் “டியர்-T-56” என்று குறும்பாக ஆரம்பித்து கொஞ்சம் அறுத்திருந்தார்கள்.

ஒரு குடும்பத்தில் எல்லோரும் எவ்வாறு ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வார்களோ அது போலவே சுதாவின் ‘கிளாஸ்’ இருந்தது.

அந்த ‘ஓட்டோ கிராப்’ சுதாவை பாடசாலை வாழ்வின் கடைசி நாளுக்கு அழைத்துச் சென்றது.

‘எக்ஸாமுக்கு’ இரண்டு நாளைக்கு முன் ‘பிரியாவிடை’ வகுப்பு, கடைசியாக ஏ/எல்லில் நடந்த வகுப்பு அதுதான் மாணவ- மாணவிகள் காசு சேர்த்து “ஏ/எல்-1995 மாத்தளை” என்று பெயரடித்து ‘சத்தியன் சேர்’க்கு சின்ன ‘பிரசண்ட்’ பண்ணினார்கள். சுதா அழுதாள். கண்கள் சிவந்து முகம் வீங்கியது. எவ்வளவு நேரம் அழுதாள் என்றே தெரியாது.

எல்லோரும் ஒருவருக்கொருவர் “பெஸ்ட் விஷஸ் ஃபோ யுவர் எக்ஸாமினேஸன்” வாழ்த்துரைகளோடு விடை பெற்றனர்.

“என் ப்ரிய ‘ஓட்டோ கிராப்’ நட்புக்களே! நீங்களெல்லாம் எங்கே போய் விட்டீர்கள்? ‘ஓட்டோ கிராப்போடு’ நம் நட்பு போய்விட்டதா?” ‘ஓட்டோகிராப்’பை பார்த்துக் கொண்டே சுதா தன் நட்புக்களிடம் கேட்டாள்.

நிச்சயம் அவளுக்குத் தெரியும், அது பதில் சொல்லாதென்று. இருந்தாலும் ‘ஓட்டோகிராப்’ நட்புக்களின் வாழ்விற்கு அவளது இதயம் ‘நல்வாழ்த்துக்கள்’ பாடிக்கொண்டிருந்தது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# 'கொமாண்டர் கஸ்த்வார்!'

**ஜீ**ப் வந்ததுதான் தாமதம்.. தாலிபா ஓடிப்போய்க் கதவைச் சாத்தி, தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்.

கிணற்றடியில் உடுப்புக் கழுவிக் கொண்டிருந்த எனக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

"அடியேய்... பல்லைக் காட்டாம உள்ளே வாடி"-

தாலிபா என்னைக் கடிந்து கொண்டாள்.

"சும்மா இருடி.. 'சேகான்' வந்திருப்பான்!" - என்றேன் நான்.

"பெரிய்ய்ய்ய சேகான்.. தூ சைத்தான்"- ஜன்னலைச் சாத்தினாள் தாலிபா.

நான் வேலிக்கருகில் வந்து நின்று கொண்டேன்.

ஜீப் 'கபுறடி வீதி'யில் நின்று கொண்டிருந்தது.

சேகான்தான் என்னை முதலில் கண்டு கொண்டான்.

"வெயார் யுவர் தல்பா?"

ஜன்னலைக் காட்டினேன்.

தாலிபா வெளியே தலை காட்டவே மாட்டாள் என்று தெரிந்திருந்தும்... கேட்டான்.

"கஸ்த்வார் சேர்?.."-கேட்டேன்.

"ஹாங்.. கஸ்த்வார்.. வைட்.. ஆ... ஹீ... டியூட்டி.. ஈவினிங்-"

கறுப்பு விரலிடுக்கில் எரிந்து முடிந்த வெள்ளை பீடியைத் தூக்கி எறிந்தான்.

நான் ஜீப்பை ஒரு கணம் விழிகளால் மேய்ந்தேன்.

கஸ்த்வார் அமர்ந்திருக்கும் சீற்றில் ஒரு 'ஏழடி' அமர்ந்திருந்தது. என்னைப் பார்த்து 'ஹிந்தி'த்தது.

நான் தலையைக் குனிந்து கொண்டேன்.

சேகான் கிணற்றடி வேலியில் சாய்ந்து நின்று கொண்டான்.

நான் உடுப்புக்களைக் கழுவத் தொடங்கினேன்.

சேகான் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வீட்டுக்குள்ளிருந்து தாலிபா உஷ்... உஷ்... என்று சிணுங்கிக் கொண்டிருந்தாள்.

தூரத்தில் கேட்ட 'சீன வெடி'க்கு உஷாராகி 'பாய்.. பேபீ..' கூறிப் பாய்ந்தேறி ஜீப்பில் பேயாய்ப் பறந்தான் சேகான்.

—•— —•— —•—

**தோ**னா.

பழைய மட்டக்களப்பு ரோடு.

பக்கத்தில்தான் எங்கள் வீடு.

இரண்டு வாரங்களுக்கு முன்புதான் இந்திய இராணுவம் இங்கே வந்து சேர்ந்தது.

ஒவ்வொரு நாளும் பின்னேரங்களில் ஜீப் வரும்.

எங்கள் வீட்டுக்கும் கபுறடி ரோட்டுக்கும் இடையில் ஜீப்பை நிறுத்தி விட்டு அமைதி காக்கும் படை ஆரவாரிக்கும்.

இந்த சேகான் இருக்கிறானே... சைத்தான். பொல்லாத குறும்புக்காரன்.

"வாங்கடா புலியைக் காட்டுறன்" என்று கூட்டிப்போய்...

பழப்புளி... கொறுக்காப்புளி... கடும் புளி... யைக் காட்டிய ஒக்காஸ் மாமாவை- எல்லாப் புளியையும் தின்ன வைத்தவன் இந்த சேகான். (பாவம்... அதிகமாகப் படிச்சு.. படிச்சு... 'கிட்னி' பழுதான ஒக்காஸ் மாமா.)

இப்படித்தான் ஒருநாள் நான் குளித்துக் கொண்டிருந்தேன். 'வாட்டர்!'.. என்று வந்தான் சேகான்.

வாளியைக் கொடுத்தேன். தண்ணீரை அள்ளிக் குடித்துவிட்டு கிணற்றுக்குள் வாளியைப் போட்டு விட்டுப் போய்விட்டான். பாவி.. நான் சவர்க்காரம் பூசி அரைவாசி...

கஸ்த்வார். கொமாண்டர் கஸ்த்வார்!

இவனைத்தான் எனக்கு ரொம்பவும் பிடிக்கும்.

'மாங்காய் ஊறுகாய்' கொண்டு வந்து தருகிறேன் என்று போனவனைத்தான் இன்று தேடிக் கொண்டிருக்கிறேன்.

பின்னேரம் வருவான்தானே..

'கெதியாய் வாடி' - உம்மாவின் குரல் கேட்டது.

நான் தம்பியின் சாரனைத் தப்புத் தப்பாகத் தப்பத் தொடங்கினேன். அன்றிரவு ஒரே அமைதி. காக்கும் படை-ஊர் காக்க வந்தது. ஜீப் வாசலில் வந்து நின்றது.

கஸ்த்வார் இறங்கினான்.

"குட் ஈவினிங் அங்கிள்"-

"ஹாய்.. பேபீ.. குட் ஈவினிங்-" சிரித்தான்.

நேற்றுப் பாடமாக்கியதை 'மங்கூர்கா' என்று-நீட்டிய 'மாங்காய் ஊறுகாய்' போத்தலை வாங்கித் தேங்க்ஸினேன். என் கன்னத்தைக் கிள்ளிவிட்டு "வெயார் யுவர் பாதர்"- என்றான். "பாதர் கொயிங் டூ த மொஸ்க்"- என்றேன்.

"மதர்"- துப்பாக்கியை நிலத்தில் ஊன்றிக் கம்பீரமாக நின்றபடி கேட்டான் கஸ்த்வார்.

"இன் த கிச்சின்"-சிரித்தேன்.

-•-•-•-

**ம**றுநாள்.

தாலிபாவை 'கேம்ப்'புக்குப் போய்வரக் கூப்பிட்டேன்.

அவள் ஒரேயடியாக மறுத்து விட்டாள். எனக்கு அவள் மீது கோபம் கோபமாக வந்தது. அவள் அப்படித்தான். கடைசி நேரத்தில் கழுத்தறுத்து விடுவாள்.

இப்போது என்ன செய்வது? தனியாகப் போகவும் பயம்.

உம்மா கண்டாப் பேசுவா...

தம்பியைக் கூப்பிட்டேன். முதலில் 'மாட்டேன்' எனச் சிணுங்கினான். 'ஊறுகாய் தருவாங்கடா' என்றேன். வாயூற.. 'வரேன் தாத்தா' என்றபடி என்னோடு வந்தான்.

ஆமிக் கேம்ப் வாசலில்-தேகப் பயிற்சி செய்து கொண்டிருந்தான் சேகான்.

நான் "மோர்னிங் சேர்" என்றேன்.

"மோர்னிங் பேபீ கம்.. கம்.."- என்னை ஆசையாக வரவேற்றான். தம்பி பயந்து போனான்.

"பயப்படாதேடா ஒண்ணும் பண்ண மாட்டாங்க"- தம்பியை தைரியப்படுத்தினேன்.

என் குரல் கேட்டு கூடாரத்துக்கு



வெளியே தலையை நீட்டினான் கஸ்த்வார்.

கிண்ணியா அமீரலி

"ஹலோ"- என்று கூவினான். அழகாகச் சிரித்தான். மிக அன்பாக உபசரித்தான். பாணும் பட்டரும் தந்தான். தம்பிக்கு 'நோ புறொப்ளம்' ரீசேர்ட்டும்-பிஸ்கட் பக்கட்டும்... எனக்கு சங்கிலியும் காப்பும் தந்தான்-

"வெயா யுவ டோட்டர்ஸ் எட்ரஸ்?"- கேட்டேன்.

"ஓ.. யெஸ் வெய்ட்.."- உள்ளே நுழைந்து கொண்டான். சிறிது நேரத்தில் வெளியே வந்தான். அவனுடைய மகள் 'நயந்தாரா'வின் எட்ரஸை ஒரு அட்டையில் எழுதி என்னிடம் நீட்டினான். நான் அதை வாங்கிக் கொண்டேன். அமீர்தீன் சேரிடம் சொல்லி ஆங்கிலத்தில் அவளுக்கு லெட்டர் போடணும்.

கொமாண்டர் கஸ்த்வார்-உண்மையிலேயே ஒரு நல்ல இராணுவ வீரன். குழந்தை மனசு அவனுக்கு.

நேற்று-"உங்கள் மகளுடைய எட்ரஸைத் தாருங்களேன். நான் பென்பிரண்ட்டாகக் கடிதம் எழுத ஆசைப்படுகிறேன்" என்று கேட்டேன். இன்று தந்தே விட்டான்.

எங்கள் வீட்டுக்கு முன்னால் டியூட்டிக்கு வந்து நின்ற கஸ்த்வார்-எங்கள் குடும்பத்தில் ஒருவனாகி விட்டான்.

நாடென்ன மொழியென்ன உள்ளங்கள் உறவாட!

ஏடென்ன எழுத்தென்ன எண்ணங்கள் பரிமாற.

—•— —•— —•—

**ந**யந்தாரா ஏழாம் வருடம் படித்துக் கொண்டிருக்கிறாளாம். "டாடியை ஒங்க டாடியா நெனச்சுக் கவனமாப் பார்த்துக்கோ" என்று எழுதியிருந்தாள்.

எயார் மெயிலில் 'இபில் இபில்' விதைகளை வைத்து அனுப்பினேன். அதை அவள் தன்னுடைய புறக்கடை வளவில் வரிசையாக நட்டிருக்கிறாளாம்.

ஒருநாள்- தங்கச்சி-மம்மியோடு நின்று அழகாகப் படம் பிடித்து அனுப்பியிருந்தாள்.

நானும்-

எனது புகைப்படத்தை அவளுக்கு அனுப்பியிருந்தேன். அதில்- அவள் 'டாடி'க்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன் நான்!

நயந்தாராவும் நானும் கடிதத்தொடர்பு கொண்டு இன்றோடு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.

கொமாண்டர் கஸ்த்வார்- சாம்பல் தீவுக்கு மாற்றலாகிப் போய்விட்டான். எனக்கு அவனை நினைக்கப் பாவமாக இருந்தது. ஓய்வு கிடைக்கும் நாளெல்லாம் என்னைத் தேடி வீட்டுக்கு வந்து விடுவான்.

நான் அடிக்கடி வாப்பாவுடன் சாம்பல் தீவுக்குச் சென்று அவனைச் சந்தித்து வருவேன். ஒருநாள் ஆட்டுக்குட்டி ஒன்றைக் கொண்டு போய்க் கொடுத்தேன். அவனுக்கு இனம்புரியாத மகிழ்ச்சி.

எனக்குப் பல புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டுக்களைப் பரிசாகத் தந்து மகிழ்ந்தான். வீட்டுக்கு வந்தேன். நயந்தாராவின் கடிதம் வந்திருந்தது.

"ரமீஸா! நான் சென்ற கிழமை எனது 'டாடி' யைக் கனவில் கண்டேன். குதிரை வண்டியில் ஊர்வலமாப் போறாரு. நானும் மம்மியும்- தங்கச்சியும்..டாடிக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கிறோம். யாரோ இரண்டு பேர் மலர்களை தூவி வாழ்த்துச் சொல்லி விட்டுப் போகிறார்கள். 'டாடி எழுந்து' நின்று எல்லோருக்கும் டாட்டா காட்டுகிறார்."- என்று எழுதியிருந்தாள்.

மறுநாள்.

உப்புவெளியில் வெடித்த கண்ணி வெடிக்குப் பலியான.. இந்திய இராணுவ வீரர்கள் இனங்காணப்பட்ட போது...

நானும் தாலிபாவும் கொமாண்டர் கஸ்த்வாருக்காக...

அனுதாபப்பட்டு அழுதோம்.

# அருகே அழைத்தவள்

**வ**லது கையை அசைத்து "அருகில் வா" என்றாள். இதை எதிர்பார்க்காததால் சற்று தயங்கினேன். இரண்டு முறை புன்னகைத்ததற்கே இப்படி என்றால்..

நேற்று நான் கொஞ்சம் புன்னகைத்ததற்கு வெட்கம் குடிகொண்டு இடக்கை விரல்களால் முகம் மறைத்து உள்ளே ஓடிவிட்டாள். இன்று முதலாவது முறையாக புன்னகை செய்தபோது அவளும் என்னை அந்த கருவிழிகளால் நோக்கியவாறு நாணத்தால் முகம் சிவந்து நாவற்பழ இதழ்களை பிரித்தபோது, அவளின் கரிய நிறம் மறைந்து பளிங்கு பற்களின் ஒளியால் அவள் வதனம் இன்னும் அழகு பெற்றது.

இரண்டாவது முறையாக நான் சிரித்த போது பதிலுக்கு அவளும் சிரிக்காமல் கை அசைத்ததால் நான் தயங்கினேன், சிலையானேன்.

அவளின் வீட்டு வாசலில் இருந்து சுமார் எழுபது அடி தூரத்தில் எதிரே அமைந்துள்ள எனது ரூம் வாசல் கதவு நிலையில் சாய்ந்தபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்த நானும் வாசற்படியிலிருந்த பாட்டாக்களை காலில் மாட்டிக்கொண்டு அவளை நோக்கிச் சென்றேன்.

அவளும் கேற்றைத் தாண்டி வெளியே வந்தாள். எனக்கு வியர்க்கத் தொடங்கி விட்டது. பயத்தினால் உதறல் எடுத்தது. நிச்சயமாக யாராவது அருகில் வந்திருப்பின் எனது இதய துடிப்பின் ஒலியை கேட்கக் கூடியதாக இருந்திருக்கும். மீண்டும் அக்கம் பக்கம் திரும்பிப் பார்க்கிறேன். யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

துணிவை வரவழைத்து அவளுக்கு மட்டும் கேட்கக் கூடியதாக "மொகத்த?" என்றேன்.

ஆம்- அவளுக்குத் தமிழ் தெரியாது. நான் என்ன என்று கேட்டதும் அவள் என்னிடம் கேட்டாள்: "ஒயாட்ட சிங்கள கியவன்ன தண்ணவாத?" என்று.

இதைக் கேட்கவா என்னை இப்படி அழைத்தாள்? சிங்களம் தெரியாமலா நான் கொழும்பில் தொழில் செய்கிறேன்..? வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு,

"ஒவ்" என்றேன்.

"லியன்ன தண்ணவாத?"

"ஒவ்"

"ஏனம் யன்ன"

அட, என்னடா இது.... என்று நானே என்னை நொந்து கொண்டேன். சிங்களம் வாசிக்கத் தெரியுமா, என்கிறாள், எழுதத் தெரியுமா என்கிறாள், ஓம் என்று சொன்னால் அப்படியானால் போ என்கிறாள். இதற்குத் தானா என்னைக் கூப்பிட்டவள்? என்றெண்ணி திரும்பி எனது அறைக்கு வந்தேன். வியர்வையைத் துடைத்துக் கொண்டேன்.

தொழில் தேடி கொழும்பு வந்த எனக்கு ஒருவாறு தொழில் ஒன்று கிடைத்தது. தங்கியிருக்க வாடகைக்கு ரூம் தான் நிரந்தரமாகக் கிடைக்கவில்லை. அடிக்கடி ஒவ்வொரு இடமாக அறை மாறுவதே வேலையாகி விட்டது. இப்படி இடம்மாறிமாறி இங்கு வந்த நாலாவது மாதம் தான் இந்தக் கன்னியவள் (?)எனக்கு கையசைத்தது.

இதற்கு முன்பு இரண்டு மூன்று நாட்கள் இவள் வீட்டுக்கு முன்னாலுள்ள முற்றத்தில் சிறு பிள்ளைகளுடன் நொண்டி நொண்டி விளையாடுவதைக் கண்டிருக்கிறேன்.

ஒருநாள் அப்படி பார்த்துக் கொண்டிருந்தபோது அவளும் என்னைக் கண்டு நாணம் பொங்க வீட்டினுள்ளே ஓடினாள். அதன்பின் நான் வெளியே நிற்கும் போது விளையாட மாட்டாள். என்னைக் கண்டதும் உள்ளே மறைந்திடுவாள்.

பகல் மறைய இரவும் எட்டிப் பார்த்தது. உள்ளே இருக்க அலுப்படித்ததால் மீண்டும் வெளியே வந்து கதவருகில் நின்றேன். அவளும் தன் வீட்டுக் கதவோரம் நின்றிருப்பதைக் கண்டேன். என்னைப் பார்த்து சிரித்தாள். சிரித்தேன். என்ன செய்கிறாய் என்றாள் கையசைப்பில். ஒன்றுமில்லை சும்மா இருக்கிறேன் என்றேன் சைகையால். கையசைத்து "வா" என்றாள். சென்றேன். ஏதோ தந்தாள். விரைந்து வந்தேன் அறைக்கு. அவள் தந்ததைப் பிரித்துப் பார்த்தேன்.

'உங்கள் பெயர் என்ன? எங்கு வேலை செய்கிறீர்கள்? ஊர் என்ன? சகோதரங்கள் யார் யார்? பிறந்த திகதி எது...? எனது பெயர் நிலுபுலி. இம்முறை ஓ.எல். எக்ஸாம் எடுக்கிறேன். இரு அண்ணாக்கள், ஒரு தங்கை, பிறந்தது... (வயதைப் பார்க்காதீர்கள். ஓ.எல். படிப்பவள் என்றால் போதும் தானே?)......, இப்படி பலவற்றை எழுதி இருந்தாள். இங்கு நான் எழுதியது போலல்ல. ஏறக்குறைய கவிதையாகவே எழுதி இருந்தாள். (படிக்கும் போது கொஞ்சம் மயக்கமும் வந்தது உண்மைதான்.)

நானும் அதே பாணியில் பதில் எழுதிக் கொடுத்தேன். (ஆனால் மயக்கம் கொள்ள அல்ல) அதில் எனது வயதை எழுதாமல் மறைத்து விட்டேன். எப்படிக் கூறுவது அவளின் வயதைப்போல் ஏறக்குறைய இருமடங்கு வயது எனக்கென்று...!



காரைதீவு நிலாமதி

நாட்கள் உருண்டோட பழைய குருடி கதவைத் திறடி என்பது போல் இந்த வாடகை அறையை விட்டு வேறு இடம் போக வேண்டிய கட்டாயமும் வந்தது. அறிந்ததும் அவள் முகம் வாடிவிட்டது.

"ஏன் போகீறீர்கள்? வீட்டாரிடம் கேட்டு இங்கேயே இருங்களேன். காசைக் கூடக் கொடுத்தாவது இருக்கப் பாருங்கள். நீங்கள் போனதும் இந்தப் பக்கம் வர மாட்டீர்கள் தானே. மறந்து விடுவீர்கள் அல்லவா?" அவளின் மடலைப் பார்த்த போது கவலையாக இருந்தது. என்னால் இயன்ற ஆறுதல்களைக் கூறினேன்.

நான் புறப்படும் நாளும் வந்தது. அறையில் உள்ள பொருட்களை அப்புறப்படுத்தி புறப்படுவதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தேன். இவை யாவற்றையும் காலையில் இருந்து அவளும் பார்த்துக் கொண்டிருந்தாள். தினமும் என்னைக் கண்டால் புன்னகைப்பவள் இன்று சோகம்தான் அவளிடம் குடிகொண்டிருந்தது. ஒரு கையை கதவு நிலையில் வைத்து அதன் மீது தலை சாய்த்து என்னைப் பார்ப்பதும், இடையிடையே கதவருகே இருக்கும் கதிரையில் அமருவதுமாக இருந்தாள்.

மாலையானதும் நான் புறப்படும் நேரமும் வந்தது. அவளின் தோழி ஒருத்தியும் அவளருகே வந்து நின்றாள். ஏற்கனவே எனக்குத் தெரிந்த அவள், சைகையால் கூறினாள் அவள் அழுவதாக. ஏன் என்று கேட்க, நான் போகும் கவலையாம் என்றாள்.

முதலில் பகிடிக்குத் தான் கூறுகிறாள் என்று நினைத்தேன். ஏனென்றால் அவ்வளவு தூரத்தில் அவள் அழுவது எனக்கு சரிவரத் தெரியவில்லை. பிறகு தான் உணர்ந்தேன் அவள் சுவருக்குப் பின்னால் மறைந்து அழுவதும், பிறகு கண்களைத் துடைத்து விட்டு என்னைப் பார்ப்பதுமாக இருந்தாள்.

"அண்ணா! நீங்கள் உண்மையில் என்மீது நல்ல அன்பு வைத்துள்ளீர்கள். எனக்கு எவ்வளவு புத்திமதி சொன்னீர்கள். விளையாடாமல் நன்றாகப் படி என்பீர்கள். எனக்கு இரண்டு அண்ணாக்கள் இருந்தும் என்ன பயன்? உழைப்பு உழைப்பு என உழைப்பார்கள். எனக்குத் தேவை எவை என அவர்கள் நினைப்பதை வாங்கித் தருவார்கள். ஆனால் அன்பாக ஒரு வார்த்தை கூட பேச மாட்டார்கள். உனக்கு என்ன வேண்டும் என்று கூட கேட்க மாட்டார்கள். ஏன் வெளியே நிற்கிறாய்? எங்கே சுற்றுகிறாய்? என்று கேட்டு அடிக்கத்தான் அவர்களுக்குத் தெரியும். ஆனால் உங்களுடன் பழகிய பின் தான் அண்ணனின் பாசம் எப்படி இருக்கும் என்பதை அறிந்த கொண்டேன்...."

இப்படி எழுதியவளுக்கு என் மீது காதல் எண்ணம் இருந்திருக்காது. நான் தான் தப்பாக நினைத்து விட்டேன்.

அவளின் தாய் மொழி வேறாக இருப்பினும், ஆரம்பத்தில் என்னை விரும்பி இருப்பினும் அதன் பின் உண்மையில் என்னை தனது அண்ணனாகத் தான் நினைத்திருக்கிறாள். அவளின் பார்வைகளில் கூட வித்தியாசம் இருந்ததில்லை.

இன்றல்ல என்றுமே என்னால் அவளை மறக்க முடியாது என்பது உண்மை தான்.

# விக்கல்

கோகிலா குமாரவேல்

**இ**ரண்டு நிமிடமாக இந்த பாழாய்ப் போன விக்கல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. 'ச்சீ' என்ன சனியனோ நேரங்கெட்ட நேரமெல்லாம் மனுஷனுக்கு தொந்தரவு பண்ணிக் கொண்டு இருக்கு. எழுதிக் கொண்டிருந்த பேனையை எரிச்சலுடன் மேசையில் எறிகிறேன்.

'கடவுளே இந்த விக்கலை நிறுத்த ஒரு வழியே இல்லையா?' மனதினுள் எண்ணிக் கொண்டிருக்கும் போதே தம்பி அறைக்குள் நுழைந்தான். என் நிலை நான் கூறாமலேயே அவனுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

"ஈரக்குடல் காய்ந்து போனாதான் விக்கல் வரும். ஒரு கிளாஸ் தண்ணீர் குடிச்சா சரியாயிடும்."

இது அவனின் விஞ்ஞான விளக்கம்.

"ஒரு கிளாஸ் இல்ல, ஏழுவாய் குடிச்சா பட்டென்று நின்றுடும்" என் அன்னையாரின் வைத்திய ஆலோசனை. எப்படியோ மொத்தத்தில் இருவரும் ஒரே கண்டுப்பிடிப்பை முன்வைத்ததால் எழுந்து சமையலறைக்குள் செல்கிறேன்.

என் விக்கல் ஒலியைக்கேட்டு சமையலறையினுள் கீரை அரிந்து கொண்டிருந்த பாட்டி நிமிர்ந்து பார்க்கிறார். கண்ணாடிக்குள் தெரிந்த அவரின் உருண்டை விழி என்னை வித்தியாசமாக பார்ப்பது போலிருந்தது.



"என்னடி விக்கலோ?" நக்கலாக கேட்டார்.

இந்த கிழட்டு வயசிலேயும் இதோட கிண்டலுக்கு குறைச்சலில்ல. குடத்திலிருந்து நீரை தம்ளருக்கு ஊற்றினேன்.

"எதுக்கடி தண்ணிய குடிக்கிறே? எவனாவது மனசுக்குள்ள உன்னையே நெனச்சிக்கிட்டிருக்கான். அதான் விக்கல் வருது" கையில் எடுத்த நீரை அப்படியே மேசையில் வைத்துவிட்டு பாட்டியின் அருகில் அமர்ந்தேன்.

"பாட்டி, நீங்க சொல்றது...?"

"ஆமாண்டி நம்ம மனசுக்கு பிடிச்சவங்க எவராவது நம்மள நெனச்சாத்தான் விக்கல் வரும். உன்னை எந்த மகராசா நெனக்கிறானோ?" இதயத்தில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடிக்க பாட்டியை இறுக அணைத்து முத்தமிடுகிறேன். இப்போ தண்ணீர் அவசியமில்லை என்று தோன்றிற்று.

# இலக்கிய நயம்



## ஆகவே-ஆழமறியாமல்...

தருவது-ரசிகன்

சற்றும் யோசிக்காமல் "நான் தயார்" என்றான் வல்லபன்.

"நன்றாக யோசித்துவிட்டுத்தான் சொல்கிறாயா வல்லபா? நீயாகப் பேசக் கூடாது. அவளாகவே பேச வேண்டும். ஊடல் விடியும் வரை தொடரவேண்டும். ஊடல் தவம் கலைக்கும் அஸ்திரங்கள் உன் உறுதியைக் குலைக்கலாம். தளரக் கூடாது. முடியுமா உன்னால்?"

"முடியும். ஊடல் கொள்ள பெண்களால் மட்டும்தான் முடியும் என்பதை மாற்றிக்காட்டுகிறேன்." என்றான் வல்லபன்.

"ஆழமறியாமல் காலை விடாதே அப்பனே! தோற்றுவிடப் போகிறாய் நீ." என்றான் நண்பன் செங்கோடன்.

"சவாலை சந்திக்கப் போகிறவன் நான்தானே. நீ எதற்கு கவலைப்படுகிறாய்?"

"அதுதானே, அவஸ்தைப்படப் போகிறவன் நீதானே. எனக்கென்ன?"

—●—●—

முகத்தை கடு கடுப்பாக வைத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தவனை கூர் விழிகளால் ஆராய்ந்தாள் செல்வி.

வேண்டுமென்றே செய்துகொண்ட பாவனை என்று பாவம் அவளுக்கெங்கே தெரியப்போகிறது.

"வெளியே ஏதும் பிரச்சனையா?"

தேன்குரலில் தவழ்ந்து வந்தது கனிவான வினா.

நெஞ்சிலே நெருப்பு எரிந்தாலும் அணைத்துவிடக்கூடிய குளிர் கொண்ட வார்த்தைகள்.

"ஒரு மண்ணும் இல்லை. உணவைப் போடு!"

திட்டமிட்டு கடுமையாக கோர்க்கப்பட்ட வார்த்தைகள். கடைக்கண்ணால் கவனித்தான். அவள் முகம் சற்றுச் சுருங்கியது.

'நம்பப்படுகிறது நடிப்பு. வல்லபா, முதல் கட்டம் வெற்றி யடா!' மனதுக்குள் சபாஷ் போட்டுக் கொண்டான்.

அவள் திரும்பி உள்ளே சென்றாள். கருமேகம் இறங்கியதோ என்று வியக்க வைக்கும் அடர்ந்த கூந்தல் முதுகு வழியாக இறங்கி, இடைக்கும் கீழே நீண்டு, பின்னழகுகள் மீது அசைந்து கொண்டிருந்தது.

முன்னழகுகளுக்கு சற்றும் சளைக்காத பின்னழகுகள். வல்லபனுக்கு மனதுக்குள் ஒரு கல் விழுந்தது.

மனக்குளம் கலங்க, சலனம் மேலே வந்து எட்டிப்பார்த்தது.

'வல்லபா அடக்கு மனதை அடக்கு' சவால் நினைவுக்கு வந்தது.

செல்வியின் பின்னால் சென்ற மனக்குதிரையின் கடிவாளத்தை பிடித்து நிறுத்தினான்.

உணவு பரிமாறும்போது அவனும் பேசவில்லை. செல்வியும் பேசவில்லை.

ஏதாவது பேசுவாள், காட்டமாகப் பதில் சொல்லி வேடிக்கை பார்க்கலாம் என்று நினைத்தவனுக்கு ஏமாற்றம்.

'முடியட்டும், உணவு உண்டு முடியட்டும். பசியாறும்போது கோபத்தை பாய விடக்கூடாது. பஞ்சணைக்கு வரட்டும். பட்டினி போட்டுக் காட்டுகிறேன்!' செல்வி மனதுக்குள் செய்த சபதம் வல்லபனுக்கு எங்கே தெரியப்போகிறது.'

பஞ்சணையை உதறிப்போட்டு சீர்செய்து கொண்டிருந்தாள் செல்வி.

பூனைபோல நடந்துவந்து கவனித்துக் கொண்டிருந்தான் வல்லபன்.

குனிந்தும், நிமிர்ந்தும், அசைந்தும் பஞ்சணையை செல்வி சீராக்கிக் கொண்டிருக்க, வல்லபனின் மனம் சீரற்றுக் கொண்டிருந்தது.

அசைவுகளும், அசையும் போது ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களும் மோகனக் கணைகளாக மனதில் பாய்ந்தன.

'பஞ்சணை விரிக்கும் பெண்ணரசி நெஞ்சுக்குள் நெருப்பை விதைக்கிறாளே! மஞ்சத்தின் மாசு அகற்றும் மண்ணழகி நெஞ்சுக்குள் ஆசையைப் பூசுகிறாளே!'

வல்லபன் நினைத்துக் கொண்டிருக்க, செல்வி திரும்பி கூர்விழி எறிந்தாள்.

பஞ்சணைவிரித்தபோது விலகிய மார்புத் துகில் எழில்களின் கணைகளை அவன் எண்ணத்தில் எறிந்தது.

கோபத்தில் படபடத்த விழிக்கதவுகள், 'வா..வா' என்று அழைப்பது போல மனதுக்குப் பட்டது.

'வல்லபா நினைத்துப்பார்! தங்கரதம் எதிரேயிருக்கிறது. ஆசைப் புரவி உன்மனதில் இருக்கிறது. ரதம் வசப்படவேண்டும். புரவி புறப்பட வேண்டும். விடியும் வரை உலா. விடிந்த பின்னரும் நினைவெல்லாம் வாச விழா. வேண்டாமா வல்லபா?'

'வேண்டும்தான்! ஆனால் சவால் தடுக்கிறதே!'

'சவாலாம் சவால்! பற்றுகள் முற்றும் துறந்தோம் என்று மார்தட்டிய மாமுனிகளும் மயங்கிச் சரிந்தது மங்கையர் மடியில்! சிற்றிடை அசைய, அசையும் இடையில் இரு கனி குலுங்க, செவ்வாய்மீது புன்னகை மின்ன, நயன பாசைகள் கனவை விதைக்க, நளின உடலைத் பற்றத் துடித்தன பற்று அறுத்த முனிவர்கள் கரங்கள்! அறிவாயோ அப்பனே!'

'அறிவேன். அறிவேன்!'

'அறிந்துமா தயக்கம். அணைக்கவோ சுணக்கம்? கனிந்தது நேரம். காளையே போர்தொடு!'

'முறைக்கிறாளே?'

'அம்பு அவளிடம். அன்பு உன்னிடம். அம்பு அவள் ஆயுதம். அன்பே உன் கவசம். போர் தொடு; பூவுடலை சிறையெடு, நிலவுக்கு எதற்கு மேகத்திரை? மோக வாளால் திரையினை வீழ்த்து!'

மனம் இரண்டானதில், வில்லோசை கேட்டுப் பறந்த புறாவானது.

நெருங்கினான். தொட்டான். மறுகணமே பின்நோக்கித் தள்ளப்பட்டான்.

"தொடவேண்டாம். அருகே வரவும் வேண்டாம். சீறுவீர்கள். சினப்பீர்கள். காரணம் கேட்டால் கடுகாய் வெடிப்பீர்கள். வேளை வந்தால் வருவீர்கள். கேட்பீர்கள்"

"அது....வந்து...செல்வி... கள்ளியுடி நீ...நான்..."

"குழையாதீர். பதமானால்தான் உணவு செரிக்கும். மனமுண்டானால்தான் உறவு இனிக்கும்." ஒரே முடிவாக சொல்லி விட்டாள் செல்வி.

♠♠♠

ஒரே அறை.

ஓங்கி கன்னத்தில் விழுந்த அறை.

செங்கோடன் எதிர்பார்க்கவே இல்லை. செவிகள் அடைத்தது போலாயின.

"ஏனடா அறைந்தாய்?"

"ஆண்களும் ஊடல் கலையில் தேர்ந்தால்தான், கூடல் இனிக்கும் என்று யோசனை சொன்னாயே, அதற்குத்தான் பரிசு!"

"என்னடா நடந்தது?"

நடந்தது சொன்னான். சொல்லி முடிக்க, செங்கோடன் இப்போது வல்லபனை அறைந்தான்.

"நீ ஏனடா அறைந்தாய்?"

"ஆழமறியாமல் காலை விட்டதற்கு!"

"என்னடா சொல்கிறாய்?"

"எதிரே இருப்பது என்ன?"

"அருவி."

"குதிப்பாயா?"

"மாட்டேன். வெள்ளம் பாய்கிறது. இழுத்துச் சென்றுவிடுமடா!"

"தெரிந்தும் குதிப்பது அறிவீனம் தானே!"

"அதிலென்ன சந்தேகம்?"

"அப்படி வா வழிக்கு. **வெள்ளம் இழுத்துச் செல்லும் என்று தெரிந்தபின் ஓடும் நீரில் குதிக்கக்கூடாது. பயன்படுமோ பயன்படாதோ என்று பதமறியாமல் ஊடலிலும் இறங்கக்கூடாது.** தெரியாமல் இறங்கியதால் செல்வியின் கோப வெள்ளம் உன் ஊடலையும், கூடல் ஆசையையும் அடித்துச் சென்றுவிட்டதய்யா. நான் என்ன செய்வேன்? நானா பொறுப்பு?!"

வல்லபன் சிலையானான்.

**"உய்த்தல் அறிந்து புனல் பாய் பவரே போல்
பொய்த்தல் அறிதென் புலந்து."**

குறள்:-1287. அதிகாரம்:- 129

## குறுக்கெழுத்துப் போட்டி இல-133

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | 3 | |
| | | ■ | ■ | 4 | | ■ |
| ■ | | ■ | 5 | | | |
| 6 | ■ | 7 | | | | ■ |
| 8 | | | | | ■ | 9 |
| | ■ | | | ■ | 10 | |
| 11 | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

01. தமிழுக்குச் சிறப்பூட்டும் காவியங்களில் ஒன்றின் கதாநாயகன்.
03. உப்பிலிருந்து பெறப்படும் ஒரு பொருள்.
05. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் உள்ள கால நிலைக்கேற்றவாறு இது மாறுபடும்.
08. இதன் மூலம் கொழுத்த வருமானம் தேடும் ஆண்பிள்ளைகளும் உண்டு..
10. பண்டைய மன்னர்கள் இவற்றைக் கொண்டு ஒரு தனிப்படைப் பிரிவை அமைத்தார்கள்
11. உடலில் எங்காவது அடிபட்டால் இதன் உதவி அவசியம்.
12. பெருநாள், கொண்டாட்டங்கள் என்றால் சிறு வயதினருக்கு இது ஏற்படும்.

### மேலிருந்து கீழ்

01. மலையகத்தில் நல்ல வருவாய் தரும் பயிர்களில் ஒன்று.
02. போதிய இது இருந்தால் பல சாதனைகளை நிலை நாட்டலாம்.
03. முன்னேற்றத்தின் எதிரி.
04. அறிஞர் அண்ணா இருட்டறை என்று வர்ணித்தது.
05. இதனைப் பார்த்துத்தான் செயலில் இறங்க வேண்டும்.
06. இதற்கு இடங்கொடுத்தால் அழிவுதான் மிஞ்சும்.
07. உள்ளத்திற்கும் உடலுக்கும் அமைதி தரும்.
09. போரில் வெற்றிபெற்றால் இதனைக் கொட்டி ஆரவாரிப்பார்கள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 06.01.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-133
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-131ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | ரு | 2 வி | ■ | 3 நா | 4 ச | ம் |
| ர | ■ | 5 ப | ரி | சி | ல் | ■ |
| 6 சி | ர | த் | தை | ■ | லா | ■ |
| ய | ■ | 7 து | டை | ப் | ப | ம் |
| ல் | 8 கா | ■ | ■ | 9 பா | ம் | ■ |
| ■ | 10 வ | ரு | ட | ம் | ■ | 11 வே |
| 12 ப | ல் | லி | ■ | 13 பு | ய | ல் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 131இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. எம். நிலாம், கொழும்பு-14.
2. கே. பாலகோபன், மத்துகம.
3. செல்வி.எஸ். மதிவதனி, டிக்கோயா.
4. செல்வி. சபீனா புஹாரி, திருமலை.
5. எம். இராஜதுரை, வவுனியா.
6. எம். கலாதேவி, டிக்கோயா.
7. ஆர். துஷ்யந்தன், நீர்கொழும்பு.
8. எம். பெரோஸ்கான், கல்பிட்டி.
9. செல்வி. பாரிஹா ஹசன், மாத்தளை.
10. செல்வி. வே. பிரேமினி, வாழைச்சேனை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

★ **நடிகர்கள் எல்லாம் அரசியலில் குதித்தால் அரசியல் எப்படியிருக்கும்.? சினிமா எப்படியிருக்கும்?**

எஸ். சந்திரமோகன், லுணுகலை.

*இரண்டு துறையிலும் எந்தத் துறையில் நன்றாக நடிக்கிறார்கள் என்று கண்டறிவதுதான் கஷ்டமாயிருக்கும். விருது கொடுப்பவர்கள் பாடும் திண்டாட்டம்தான்.*

★ **காதலியை எங்கு தொடக்கூடாது சிந்தியா?**

க. திலீப்குமார், அக்கரைப்பற்று-07

*பொது இடத்தில்.*

★ **இலங்கைக்கும், இந்தியாவுக்கும் உள்ள உறவு தற்போது எப்படியிருக்கிறது?**

வே. பன்னீர்செல்வம், பாலாங்கொடை

*எதிரிக்கு எதிரி நண்பன் என்றளவில் நல்ல நெருக்கத்தில் இருக்கிறது.*

★ **'அன்டனோ' விமான விபத்துக்கள் பற்றிய தகவல்கள் உண்மைதானா? தானாகவே விழுந்தனவா?**

என். சிவசேகரன், மட்டக்களப்பு.

*சமீபத்திலும் இத்தாலியில் ஒரு அன்டனோ தொப்பென்று விழுந்து விட்டது. அன்டனோவை மலிவு விலையில் விற்க நினைத்தாலும் எந்த நாடும் 'நோ' சொல்லி விடும். மோசமான தொழில் நுட்பம்.*

★ **சிந்தியா! ஆசை வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?**

இரா. மாலா, வத்தளை.

*இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் அதனை வாங்கித் திரையிடாமல் இருக்க வேண்டும்.*

★ **டியர் சிந்தியா! காதலர்களை ஏமாற்றுவதற்கு ஒரு யோசனை தருவீரா?**

எ.ஃப்.ஜெஸ்மியா பரீன், புத்தளம்.

*காதலர்களின் எதிரி என்று கௌரவப் பட்டம் பெறும் உத்தேசமில்லை.*

★ **முதுமையிலும் சிலர் இளமையாக தெரிகிறார்களே அது எப்படி?**

க.கேதீஸ்வரன்,மட்டக்களப்பு.

*அவர்கள் சாதனையாளர்கள். மோரீஸ் டோப்ஸ் என்னும் அறிஞர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? "பதினாறு வயதில் அழகாயிருப்பதில் உனக்குப் பெருமை ஒன்றும் இல்லை. அறுபது வயதில் அழகாய் இருந்தால் அது உன் ஆன்மாவின் தனிப்பட்ட சாதனை." கேதீஸ்வரன்! உங்களுக்கு எத்தனை வயசு?*

★ **காதலுக்கும் காமத்துக்கும் என்ன வேறுபாடு?**

ஏ.எஸ்.எம். நவ்சாத், அக்குறணை-06.

*காதலிலும் காமம் இருக்கும். காதலில்லாமலும் காமம் தனித்திருக்கும்; அது வக்கிரமாகவும் மாறும் சான்ஸ் இருக்கும். காதலில் உள்ள காமம் வக்கிரமாகாது.*

★ **சதாம் ஹுசைன் பற்றி உங்கள் நிலைப்பாடு?**

ஷர்மிளா றகீம், நிலாவெளி.

*சமரிடவும், தக்க சமயத்தில் சமரசம் செய்யவும் தெரிந்தவர்.*

★ **பெண்கள் பஸ் நடத்துநர்களாக வந்தால் ஆண்களின் நிலை என்னவாகும்?**

எல்.ஜவாஹிர், கல்லொளுவை.

*பயணிகளாக இருப்பார்கள்.*



இரகசியக் குரலில் பரகசியம்

★ **டியர் சிந்தியா! நம்நாட்டின் தற்போதைய நிலவரம் பற்றி உமது கருத்து என்ன?**

எஸ். சசிகுமார், மட்/ புன்னைச்சோலை.

*காலடியில் மரணம்.*

★ **ரஜினி அரசியலுக்கு வந்தால் இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பாரா?**

ராஜ் மாலினி, கல்முனை-02.

*அரசியலுக்கு வந்தால்தான் குரல் எழும் என்று ஏதாவது விதி இருக்கிறதா என்ன? இதுவரை ரஜினி பேசாமல் இருப்பது உறுத்தல்தான்.*

★ **தமிழகத்தில் 'முத்து' தாள் பறக்குதாமே?**

எப்.சல்மான் பாரிஸ், கஹட்டோவிட.

*இருக்கலாம், ஆனால் 'பாட்ஷா' அளவுக்கு இல்லை.*

★ **காதலியிடம் கேட்க முடியாதது எது? கண்டிப்பாக கொடுக்க வேண்டியது எது?**

என். ரி.அமினுதீன், அக்கரைப்பற்று-06.

*கேட்க முடியாதது! "இன்னொரு பெண்ணையும் மேலதிகமாகக் காதலிக்கலாமா?" கொடுக்க வேண்டியது நிறைய உண்டு. அதில் முதலாவது, நம்பிக்கை. அதன் பிறகுதான் மற்றதெல்லாம்.*

★ **காதலியிடம் எதைக் கூறக்கூடாது?**

ஜே.ஜிப்ரி, அக்கரைப்பற்று.

*அமினுதீன் உமது நண்பரா ஜிப்ரி? ஒரு அழகான பெண்ணைப் பார்த்து ஜொள்ளுவிட்டிருந்தால் தம்பித்தவறிக்கூட உமது காதலியிடம் செப்பிவிடாதிருக்கவும்.*

★ **தொடர்ந்து தோல்விகளை சந்திப்பவர்களுக்கு ஒரு ஆறுதல் சொல்லுங்கள்?**

ஏ.ரவிகரன், மாத்தளை.

*தோல்விக்கு காரணம் என்னவென்று சிந்தியுங்கள். செய்யக் கூடாதவை என்னவென்று ஒரு பட்டியலே உங்கள் கையில் இருக்கும். அதுதான் தோல்வியால் கிடைத்த அதிஷ்டம். இனி செய்யவேண்டியது என்னவென்று தெரிந்துகொள்வீர்கள்.*

★ **செத்த பிணத்தைப் பார்த்து சாகும் பிணம் கண்ணீர் வடிப்பது ஏன்?**

ஜிம்ரத் அஸீஸ், உடத்தலவின்ன.

*அட.. நாளை எனக்கும் இந்தக் கதிதானா என்று.*

★ **இரவில் நித்திரை வரவில்லை-என்ன செய்யலாம்?**

வை.ராஜா, பூனாகலை.

*இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல சில அத்தியாவசியமான விபரங்கள் தேவை, அவற்றில் சில பின்வருமாறு: நீர் காதலிக்கிறீரா? வாழ்க்கைத் துணையை தேடிக் கொண்டவரா? கடன் பட்டவரா? கடன் கொடுத்தவரா?...*

★ **டயானா பி.பி.சிக்கு கொடுத்த பேட்டி தொடர்பாக உங்கள் அபிப்பிராயம் என்ன?**

வி.லோகநாதன், பசறை.

*குரல் காதோடு இரகசியம் பேசுவது போலத்தான் இருந்தது. அதே குரலில் பல இரகசியங்களை பரகசியங்களாக்கிவிட்டாரே! பத்திரிகைகளுக்கு மெல்ல அவல். பி.பி.சி.க்கு பை நிறையப் பணம். சாள்ஸ்பாடு தர்மசங்கடம். டயானாவுக்கும் கொஞ்சம் கறை. துணிச்சல் என்று கொஞ்சம் பாராட்டு. பாவம் என்று பிரிட்டனில் நிறைய அனுதாபம். டயானா மக்களை மறந்தாலும், மக்கள் டயானாவை மறக்க செய்தி நிறுவனங்கள் விடப் போவதில்லை.*

★ **ரசியாவில் மீண்டும் கம்யூனிஸ்டுக்கள் தலையெடுத்து வருவது எதைக் காட்டுகிறது?**

என்.மகேஸ்வரன், திருக்கோணமலை.

*கம்யூனிஸ்டுக்கள் மீது மக்களின் கவனம் திரும்பத் தொடங்கியிருப்பதைக் காட்டுகிறது. இதை நினைத்து அமெரிக்கா ஏன் வருந்துகிறது? என்றால், அதன் சுயநலம் தவிர வேறில்லை.*

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இராமாயணம்

## அங்கம் 13

# ஆணவத்தை அழித்த அவதார மூர்த்தி

## இராஜகுமாரன்

இராமபிரானின் கையில், பரசுராமர் கொடுத்த விஷ்ணு வில்லானது போய்ச் சேர்ந்ததும், பரசுராமர் ஒரு கணம் துணுக்குற்றார். விசுவாமித்திர மாமுனிவருக்கு எத்தகைய தவவலிமை இருக்குறதோ அதற்குச் சற்றும் குறைவில்லாத அருளினைப் பெற்றவர் பரசுராமர். இருப்பினும் இவ்விரு தவசிரேட்டர்களும் முற்கோபிகளே! எடுத்த எடுப்பிலேயே 'பிடிசாபம்' என்று சாபம் கொடுப்பார்கள்.

சத்திரியர்களைக் கொல்வதே தனது கடமை என்றிருந்த பரசுராமர், தனக்கு நிகரான எவரும் மூவுலகிலும் இல்லை என்ற ஆணவமும் கொண்டவராக விருந்தார். இதனால் தான் முக்காலமும் உணரக்கூடிய வல்லமையைப் பெற்றிருந்த அவர், தன் முன்னால் நின்ற அவதாரபுருடரின் உண்மையினை உணராதிருந்தார், தன்னால் ஏற்கனவே வெட்டி வீழ்த்தப்பட்டவர்களைப் போல் சாதாரண சத்திரிய வம்சத்திலுதித்த ஓர் அரசிளங் குமரனே தன்முன்னால் நிற்கிறான் என்று கருதிவிட்டார். ஆணவமும் கோபமும் அவருடைய அகக் கண்களை மறைத்தமை யினால் திருமாலின் அவதாரமே தன் முன்நிற்பதை உணர முடியவில்லை.

விஷ்ணுதனுசினை சாதாரண மனிதனால் தீண்டவே முடியாது. பரசுராமரின் கையிலிருந்த விஷ்ணுதனுசினை இராமர் எந்தவிதமான பிரயத்தனமுமின்றி, சாதாரண வில்லினைக் கையில் எடுப்பது போல் எடுத்தார். உடன் வளைத்து நாணுமேற்றினார். நொடிப் பொழுதில் நடைபெற்ற இச்சம்பவம் பரசுராமரின் ஆணவத்தை முதலில் உலுப்பியது. நாணேறியதும் அவர் நாணமடைந்தார். அவர் கொடுத்த அம்பினையே இராமபிரான் நாணில் ஏற்றியதும் உண்மையினை உணர்ந்தார். அகந்தை - தற்பெருமை யாவும் நீங்கப்பெற்றார். எதிரே நிற்கின்ற அந்த உருவம் சாதாரண மானிடப் பிறவியல்ல; சாட்சாத் திருமாலே என்பதனையும் அவருடைய உள்ளுணர்வு புலப்படுத்தி விட்டது.

### "உம்மை நான் அறிவேன்"

"உலகிலுள்ள பல அரசர்களைக் கொன்று அவர்களுடைய வம்சங்களையும் நிர்மூலமாக்கிய உம்மை நான் அறிவேன். உம்முடைய தந்தையின் ஒருயிரைப் பறித்தமைக்காக பல்லாயிரம் சத்திரியர்களின் உயிர்களை நீர் பறித்தீர். இதற்காகவே சத்திரியனாகப் பிறந்த என்னால் உம்மை அழித்து விட முடியும், ஆனால் நீரோ வேதங்களைக் கற்றுணர்ந்து வேதியனாகவே வாழ்ந்த ஒரு மகானுடைய மகன். அதுமட்டுமல்லாமல் நீர் தவவேடம் பூண்டும் நிற்கிறீர். ஆதலால் உம்மைக் கொல்லாது விட்டு விடுகிறேன். இருப்பினும் நீர் கொடுத்த இந்த வில்லினை வளைத்து, நாணேற்றி பாணத்தையும் நாணில் பூட்டி விட்டேன். ஆகவே இந்தப்பாணத்தை எப்படியோ வில்லிலிருந்து வெளியே எய்தேயாக வேண்டும், இதற்கு என்னைத் தூண்டிய நீரே இப்பாணத்துக்குரிய இலக்கு எது என்பதனைக் கூறும்."


இவ்வாறு இராமபிரான் கூறியதும் அதன் பொருளுணர்ந்த பரசுராமர், "தெய்வத் திருவுருவே! திருமாலே! ஆணவத்தால்- அடங்காத கோபத்தால் யான் செய்த பிழைகளைப் பொறுத்தருள்க. விஷ்ணுதனுசினை விஷ்ணுவேயல்லால் வேறு எவரால் தான் வளைக்க முடியும்? தாங்கள் பூட்டியுள்ள பாணத்தை என்னை நோக்கியே செலுத்துங்கள். இதுகாலவரை நான் செய்த தவத்தால் ஈட்டிய பலன்கள் யாவற்றையும் அந்தப் பாணம் என்னிடமிருந்து நீக்கி தங்களிடமே சேர்க்கட்டும். என்னுடைய அகங்காரத்தை அழிக்க அதுவே துணை செய்யட்டும்" என்று கூறி இராமரை வலம் வந்து வணங்கி விடை பெற்றார். மாலையாகு முன் அந்தப் பிரதேசத்திலிருந்து இமயமலை போய்ச் சேருவதற்கு மட்டும் அருள் பாலிக்குமாறு பரசுராமர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவ்வாறே வரமருளினார் இராமபிரான்.

இராமனுக்கும் பரசுராமருக்குமிடையில் நடந்த உரையாடல்களை இலக்குவன் மட்டுமே உடனிருந்து கேட்டான். தசரதரோ வேறு எவரோ இருவருக்குமிடையில் நடந்தவற்றை அறியவில்லை. முற்று முணர்ந்த வசிட்ட மாமுனிவர் நிச்சயமாக உணர்ந்திருந்தார்.

இருவருக்குமிடையில் நடைபெறும் யுத்தத்தில், தெய்வீக பலம் பொருந்திய பரசுராமர் தன் மகன் இராமனை அழித்தொழித்துவிடப் போகிறாரே என்ற கவலையில்-கண்களை மூடிய நிலையில்-தசரதர் மௌனப் பிரார்த்தனையிலீடுபட்டிருந்தார். தன்னுடைய அவதார மகிமையை ஏனையோர் அறிந்திடாதிருப்பதற்கேற்றவாறு இராமபிரான், தசரதர் முதலான ஏனையோருக்கு ஒரு வகை மயக்க நிலையினை உருவாக்கினார் போலும். இதனால் தான் அங்கு நடந்தவற்றை எவரும் உணர முடியாமற்போயிற்று.

பரசுராமர் விடைபெற்றுச் சென்றதும் இராமர் தசரதச் சக்கரவர்த்தியின் பாதங் களைத் தொட்டு வணங்கிய போதுதான் அவர் சுய நினைவு பெற்றார். தன் மகனுக்கு எதுவும் நேராமல் பரசுராமர் பெருந் தன்மையோடு விட்டு விட்டுப் போய் விட்டமைக்காக, அவரை உளத்தால் நன்றி கூறி வணங்கினார்.

பரசுராமரால் இராமரிடம் தரப்பட்ட விஷ்ணுதனுசினை இராமர் வாயுபகவானிடம் கொடுத்து அதனைப் பத்திரமாக வைத்திருக்கும்படி கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து அயோத்தி நோக்கி அனைவரும் புறப்பட்டனர்.



### அயோத்தி மாநகர் தந்த அமோக வரவேற்பு

அயோத்தி மாநகரம் என்றுமில்லாத வகையில் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மாநகர மாந்தர் அனைவரும் தங்கள் தங்கள் இல லங் களைப் புதுப் பித் து அலங்கரித்திருந்தனர். அரசர்க் கரசர் தசரதரும் அவருடைய புதல்வர்கள் நால்வரும் நாடு திரும்புகின்றனர்; அதிலும் அயோத்தி மாநகர மக்களைக் கவர்ந்த இராமர்- மரவுரி தரித்து மாமுனிவ ருடன் சென்றவன்- மணவினை பூண்டு தன் தர்மபத்தினியுடன் வருகிறான் என்ற செய்தி பரவியிருந்தது. இராமன் மட்டுமல்லாமல் அவனுடைய தம்பிமார் மூவரும் திருமணமாகி மணமகள்களுடன் வருகின்றார்கள் என்பதனால் மட்டற்ற மகிழ்ச்சியில் மக்கள் திளைத்தனர்.

மன்னருடன் மிதிலை சென்றிருந்த குழுவிலுள்ள பலர், இராசகுமாரர்களுக்கும் அவர்களின் மனைவியருக்கும் வரவேற்பளிப்பதற்காக முன்னதாகவே அரண்மனைக்கு வந்து விட்டனர். இவர்களுள் மன்னரின் மூன்று மனைவியரும் அடங்குவர். தம்புதல்வர்களையும் மருமகள்களையும் அரண்மனை முன் புறத்திலே நின்று கோசலை, சுமத்திரை, கைகேயி ஆகியோர் வரவேற்றனர். முறையான வரவேற்புபசாரங்கள் முடிவடைந்ததும் ஆலயம் சென்று வழிபாடுகளில் கலந்து கொண்டனர். பின்னர் சூரியவம்சத்தின் முன்தோன்றல்களான மூதாதையருக்கும் வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து அவரவருக்குரிய மாளிகைகளில் போய்ச் சேர்ந்தனர்.

### பரதனின் பயணம்

ஒரு நாள் தசரதமன்னர் பரதனை தன்னிடம் அழைத்து வரும்படி காவலனை அனுப்பினார். பரதன் தந்தையைக் காண வந்தபோது அவருடன் தனது தாய்மாமனாரான யுதாசித்து இருப்பதைக் கண்டான். பரதனின் தாயான கைகேகியின் சகோதரன் யுதாசித்து. மன்னரும் மைந்தர்களும் மிதிலை மாநகர் சென்றிருந்த போது, அவர் அயோத்திக்கு வந்திருந்தார். தசரத குமாரர்களுக்குத் திருமணம் நடைபெறவிருப்பதை அறிந்து யுதாசித்து மிதிலை சென்று மணவிழாவில் கலந்துவிட்டு தசரத மன்னர் குழுவினருடனேயே அயோத்தியை வந்தடைந்தார். பரதனின் பாட்டனாரான கேகய நாட்டு மன்னர் தனது பேரனைப் பார்க்க ஆசைப் படுவதாகவும் அவனை தன்னுடன் கேகயத்துக்கு அனுப்பிவைக்குமாறும் தசரத மன்னரிடம் யுதாசித்து கேட்டிருந்தார். இதனை பரதனிடம் எடுத்துக் கூறிய தசரதர் மாமனாருடன் சென்று பாட்டனாரைப் பார்த்துவிட்டு வருமாறு சொன்னான். உடன் தன் மனைவியையும் அழைத்துச் செல்லுமாறும் கூறினார். தன் மகள் வயிற்றுப் பேரனைப் பார்க்க ஆசைப்பட்ட பாட்டனார், அப்பேரன் தன் மனைவியுடன் போய்ச் சேருவதைப் பார்த்துப் பூரித்துப் போகட்டும் என்று தசரதர் கருதினார் போலும்.

பரதன் தன்தம்பியான சத்துருக்கனையும் அவன் மனைவியையும் தன்னுடன் அழைத்துச்செல்ல அனுமதிக்குமாறு அரசரிடம் கேட்டான். சம்மதமும் கிடைத்தது. இரு தம்பதிகளும் யுதாசித்துஷடன் கேகய நாட்டுக்குச் சென்றனர்.

### பரதனுக்கொரு பாதுகாவலன்

பரதன் கேகயநாடு புறப்படுவதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் உபேந்திரனை அழைத்த மன்னர் தசரதர், அவன் மகன் லலிதகுமாரனை தன்னிடம் அழைத்து வருமாறு சொன்னார். அடுத்தநாள் அரசவை கூடியதும் லலிதகுமாரனை சபையோர் முன் நிறுத்திய மன்னர், அவனுடைய வீரதீரச் செயல்கள், புத்திக்கூர்மை, ஒழுக்க நலன் முதலானவற்றையிட்டு அவையிலுள்ளோரின் அபிப்பிராயங்களைக் கேட்டார்.

அயோத்தியில் மன்னராட்சி நடைபெற்ற போதிலும் அங்கு மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடமுண்டு, எத்தகைய நடவடிக்கையை எடுப்பதானாலும் அவையிலுள்ள அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் போன்றோரின் கருத்தினை அறியாமல் மன்னர் எத்தகைய முடிவையும் தன் விருப்பத்துக்கமைவாக எடுப்பதில்லை. இந்த நடைமுறைக்கு அமைவாகவே உபேந்திரன் மகன் லலிதகுமாரனைப் பற்றிய விபரங்களை மக்களிடமே கேட்டறிய மன்னர் முற்பட்டார்.

ஒழுக்க சீலர்கள் நிறைந்து காணப்பட்ட கோசல நாட்டில், ஒழுக்கத்தில் குறைந்தவர் எவரையும் காணவியலாது. மாமன்னர் தசரதரின் மெய்காப்பாளர் படைத் தலைவனான உபேந்திரனை அவையிலுள்ள அனைவரும் நன்கு அறிவர். அவனுடைய ஒழுக்கம், நேர்மை, வீரம் ஆகிய நற்பண்புகளை எடை போட்டே அமைச்சர் சித்தார்த்தனார் தனது ஒரே மகளை அவனுக்கு மணம் முடித்து வைத்தார். ஆகவே உபேந்திரன் நற்குடியில் பிறந்தவன். அவனுடைய ஆற்றலைப் பற்றியும் அருங்குணங்களைப் பற்றியும் அவையிலுள்ளோர் அடுக்கடுக்காகப் புகழ்ந்து பேசினர். இவை அனைத்தையும் செவிமடுத்த மாமன்னர், தனது வலது புறமிருந்த காவலன் ஒருவனைப்பார்த்துச் சைகை செய்தார். அவன் உள்ளே சென்றதும் தாதிப் பெண்ணொருத்தி ஒரு தாம்பாளத்தை ஏந்திக்கொண்டு மன்னர் முன்வந்து நின்றாள். இதே வேளை பரதனும் தன் இருக்கையிலிருந்து எழுந்து வந்து நின்றான். மன்னர், "அவை நிறைந்திருக்கும் மக்கள் பிரதிநிதிகளே! அமைச்சர் பெருமக்களே! ஆன்றோர்களே! பிரதானிகளே! எனது மகனும் இளவரசனுமான பரதனின் மெய்காப்பாளனாக, எனது மெய்காப்பாளர் படைத் தலைவனான உபேந்திரனின் மகன் லலிதகுமாரனை நியமிக்கிறேன்," என்று கூறி தனக்கு முன்புறமாக நின்ற தாதிவைத்திருந்ததாம்பாளத்திலிருந்த உடைவாளினை எடுத்து வலிதகுமாரனின் கைகளில் கொடுத்தார். லலிதகுமாரன் மன்னரின் அடி தொழுது வணங்கினான். பின் தன் தந்தை உபேந்திரனின் பாதங்களைத் தொட்டு ஆசி பெற்றான். அவையிலுள்ள அனைவரையும் வணங்கிய பின் பரதன் நின்ற இடத்தை நாடிச்சென்று உடைவாளை உருவி முழங்காலில் நின்று சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டான். பரதன் லலிதகுமாரனின் இரு தோள்களையும் தொட்டு எழுந்திருக்கச் செய்தான். பின்னர் இரு வரும் ஆரத்தழுவிக்கொண்டனர். இளமை முதல் இருவரும் இணைபிரியாத நண்பர்கள் என்பதனால் இவ்வாறு நிகழ்ந்தது. இப்பதவிப் பிரமாணம் நடைபெறும் போது அவையோர் அனைவரும் லலிதகுமாரனை வாழ்த்தினர்.

பரதன், சத்துருக்கன் ஆகியோர் கோசல நாடு புறப்படும்போது கூடவே லலிதகுமாரனும் புறப்பட வேண்டியதாயிற்று. தனக்குக் கிடைத்த பதவியினால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத கடமை அது. பரதனின் மெய்காப்பாளன் என்ற பதவிகிடைத்த அன்று மாலைப் பொழுதில் லலிதகுமாரன், தான் வழக்கமாகச் செல்லும் அருவிக்கரை போய்ச் சேர்ந்தான். வழக்கமாகச் செல்லும் நேரத்தைவிடச் சற்றுத் தாமதமாகச் சென்றமையினால் - கதிரவனும் மறைந்து கொண்டிருந்தமையினால் - தாமரை மலர் ஒன்று தன் இதழ்களை இறுக மூடத் தொடங்கிவிட்டிருந்து.

### உதை பட்டுச் சிவக்கும் தோள்கள்

ஆம்...அந்தத் தாமரையை வாசகர்கள் முன்பே அறிந்திருக்கிறீர்கள். தசரதச் சக்கரவர்த்தியும் குழுவினரும் மிதிலை செல்லும் போது ஒரு வண்டியில் சென்று கொண்டிருந்த அழகிகளில் ஒருத்தியான பூமாலையைத் தான் இங்கு சந்திக்கிறோம். மிதிலை செல்லும் வழியில் துளிர்விட்ட காதல் அரும்பு இப்பொழுது மலர்ந்தும் மலராத பருவத்தை அடைந்திருந்தது. மிதிலையிலிருந்து அயோத்தி மாநகர் திரும்பியதும் லலிதகுமாரனும் பூமாலையும் அந்த அழகிய நந்தவனத்தில்- அருவிக்கரையில் அந்திசாயும் நேரத்தில் சந்திப்பது வழக்கமாகவிருந்தது.

பகல் முழுவதும் உடற்பயிற்சியிலும் வீரதீர விளையாட்டுகளிலும் பல்வேறு ஆயுதப் பயிற்சிகளிலும் ஈடுபட்டு களைத்திருக்கும் காளை, மதிய உணவினை தன் அன்னையிடம் உண்டபின் ஓடிச் செல்வான் பூஞ்சோலைக்கு. சோர்வு நீங்க-அசதியைப் போக்க-பூங்கா சென்று ஓய்வெடுக்க மகன் போகிறான் என்று அன்னை எண்ணுவாள். தனயனோ பூமாலையிடம் சென்று 'உதை பட்டு' அயர்வு நீங்கப் போகிறான் என்பதை அன்னை அறியமாட்டாள்.

பூமாலை, லலிதகுமாரனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்து களைப்படைந்து விட்டாள். அத்தருணத்தில்தான் அவன் மெல்ல அடியெடுத்து அங்கு வந்து சேர்ந் தான். அவனைக் கண்டதும் அவளுடைய அகம் மகிழ்ந்ததெனினும் முகத்தில் அதனைக் காட்டாமல் கோபத்தைப் படரவிட்டிருந்தாள்.

அன்று மன்னர் தனக்களித்த புத்தம் புதிய வாளினை உறையிலிருந்து எடுத்து, அதன் கூர்மையினைப் பரிசோதிப்பது போல், தன் இடது சுண்டு விரலால் மெல்லச் சுண்டினான். விரலிலிருந்து பாய்ந்த இரத்தத் துளி ஒன்று பூமாலையின் வலது புயத்தில் பாய்ந்து வந்து அமர்ந்தது. திடீரென நெருப்புச் சுட்டதுபோல் துடித்தெழுந்த பூமாலை, லலிதகுமாரனின் கையிலிருந்து இரத்தம் பீறிடுவதைக் கண்டு துணுக்குற்றாள். ஓடிச் சென்று அவனைத் தழுவுமுன் அவன் தன் வாளினை உறையுள் செருகிக் கொண்டான். அவளுடைய கலக்கத்தை உணர்ந்த அவன் அன்று அவையில் நடைபெற்ற சம்பவங்களைச் சொன்னான். தன் வருங்காலக் கணவனக்குக் கிடைத் திருக்கும் வாய்ப்பை எண்ணி அவள் பூரித்துப்போனாள். ஆனால் அவன் அடுத்துக் கூறிய கதை அவளை மீண்டும் துன்பக்கடலில் ஆழ்த் தியது. பரதனுடன் கேகய நாடு செல்வதற்கு விடை தருமாறு அவன் கேட்டான். அவளோ கோபமும் துக்கமும் ஒருங்கிணைசேர அருகே இருந்த மரப் பீடத்தில் போய் விழுந்து விம்மினாள். அவளைச் சமாதானப்படுத்த எண்ணிய அவன் அவளருகில் போய் அமர்ந்து அவள் கால்களை வருடினான். பூமாலை அவனுடைய பரந்து விரிந்த தோளில் தன்னுடைய பாதங்களால் உதைத்து விட்டாள்.

*ஓர் ஆணுக்கு-அதுவும் தன் வருங்காலக் கணவனுக்கு-ஒருபெண் தன் கால்களால் உதைப்பாளா? என்று கேட்பீர்கள். அயோத்தி மாநகர வருணனையில் இத்தகைய · தொரு காட்சியைத் கம்பநாடர் நமக்குக் காட்டுகிறார்.*

**குதை வரிச் சிலைநுதல் கொவ்வை வாய்ச்சியர்**
**பதயுகத் தொழில்கொடு, பழிப்பு இலாதன**
**ததை மலர்த் தாமரை அன்ன தாளினால்,**
**உதை படச் சிவப்பன, உரவுத் தோள்களே.**

(பால காண்டம்: 141)

பொருள்:

***பெண்களின் நெற்றியானது, நாண் பூட்டப்பட்டமையினால் வளைந்த வில்லைப் போன்றது. அவர்களின் வாய் பழுத்த கொவ்வை போன்றது. அவர்களுடைய பாதங்கள் செம்மை பூத்து நெருங்கிய இதழ்களையுடைய தாமரையைப் போன்றன. அத்தகைய பாதங்களால் ஆண்களின் திரண்ட தோள்களில் உதைக்கின்றமையினால் அத் தோள்கள் சிவந்து காணப்படுகின்றன. (பெண்கள் ஆண்களை உதைப்பது உண்மையான கோபத்தினாலல்ல—ஊடலினால் தான்.)***

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி இல—11

பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்

**சரியான விடை** ஊர்மிளை

1. இராமநாதன். நர்மதா. டபிள்யூ.ஏ.பீ.சில்வா மாவத்தை, கொழு-06.
2. எம். உதயகுமார். சின்னச்சிப்பிக்குளம், வவுனியா.
3. வீரசிங்கம், ஜெயபாலன். ஹெந்தள, வத்தளை.
4. எம். முசம்மில். கொத்தாந்தீவு, புத்தளம்.
5. கிறிஸ்டி கிறிஸ்தோபர். பிரதான வீதி, மன்னார்.

### இராமாயணப் போட்டி 13

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:— லலிதகுமாரனை பூமாலை உதைத்தது ஏன்?**

ஜனவரி 06ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:13.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல— 1772
கொழும்பு.

Regd. as a News Paper at the G.P.O. (PRO/7/95)
www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
AROL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436333 1


# வல்லவன் ஒருவன்

அவுஸ்திரேலியாவின் சூப்பர் அழகன் ஜோன்ஸ். 26 வயதுதான். உயரம் 6 அடி 10 அங்குலம். நிறை 341 இறாத்தல். அசுரபலம். ஒரு சக்கர தள்ளுவண்டியில் 9 பெண்களை இருத்தி மிகச் சுலபமாக தள்ளிச் செல்வது, புகையிரதப் பெட்டியை இழுப்பது என்றெல்லாம் தனது பலத்தை காட்டத் தொடங்கிய ஜோன்ஸ் உலக அதிபார பலவான் போட்டியை குறிவைத்தார். பிரிட்டனில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற பலவான் போட்டியில் ஜோன்ஸ் பட்டம் வென்றார். விரைவில் ஹொங்கொங்கில் நடைபெறும் உலக அதிபார பலவான் போட்டிக்கு தயாராகி வருகிறார். இதற்கிடையே ஹொலிவூட் படவுலகின் பார்வை ஜோன்ஸ் மீது விழுந்திருக்கிறது.

அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் உள்ள இந்த மலை மீது ஹொலிவூட் நடிகைகள் சிலரும் கண் வைத்திருக்கிறார்கள்.


அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11
332033




# வீயோடீ

# அய்...புதுக் குடை

# தருவது



கைவீசம்மா கைவீச கடைக்குப் போகலாம் கைவீச. மழை பெய்தால் எப்படி கைவீசிக் கொண்டு போக முடியும். குடைபிடிக்க ஒரு கை வேணுமே. அந்தக் கவலையே வேண்டாம். மழைக்கு ஜாலியாக கைகள் குடையும் பிடித்துக்கொண்டு இரண்டையும் வீசிக் கொண்டு செல்ல முடியும். கடைக்குப் போய் இரண்டு கைகளிலும் பொருட்களை வாங்கிவரவும் முடியும். புதுவிதமான குடை ரெடியாகிவிட்டது.

ஜப்பான் டோக்கியோவில் பாவனைக்கு வந்துள்ளது இந்தப் புதுக்குடை. ஹெல்மெட்டுடன் இணைக்கப்பட்டிருக்கும். தேவையானால் ஹெல்மெட்டில் உள்ள பட்டனை தட்டிவிட்டால் போதும். தலையில் குடை விரியும்.

ஜப்பான் இளம் வட்டாரத்தில் இந்தக் குடைக்குத்தான் கிராக்கி. காதலர்கள் வட்டாரத்திலும் பலத்த வரவேற்பு. கைகளுக்கு குடைபிடித்துக் கொண்டிருக்கும் வேலை இல்லாமல் போவது வாய்ப்புத்தானே.

# அதிபர் கொடுத்த அதிர்ச்சி

இத்தனை புகழ் படைத்த ஜோன்ஸ் பற்றி அதிர்ச்சியான தகவலும் உண்டு. இருக்கிறது. தனது 17 வயதில் ஜோன்ஸின் பொழுது போக்கு கொள்ளையடிப்பது. ஒரு முறை வசமாக மாட்டி ஆறு வருடம் சிறையில் இருந்தவர். சிறையிலேதான் பாரம் தூக்கும் பயிற்சி எடுத்தார் ஜோன்ஸ். இப்போது ஜோன்ஸ் கொள்ளையடிப்பது தனது ரசிகர், ரசிகைகளின் உள்ளங்களை மட்டும்தான். அழகான கொள்ளைக்காரன்.

ரஷ்ய அதிபர் யெல்ட்சின் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் செய்த சில்மிஷம் உலகப் பிரசித்தமாகிவிட்டது.

நீண்டகாலம் நோயில் இருந்த யெல்ட்சின் தான் பூரண நலம் பெற்று விட்டதைக் காட்ட கமராக்கள் சகிதம் நடந்து வந்தார். என்ன நினைத்தாரோ தெரியவில்லை. தனது செயலாளரான பெண்ணை ஒரு கிள்ளுக் கிள்ளி விட்டார். பகிரங்கத்தில் இப்படி ஒரு கிள்ளுக் கிள்ளுவார் என்று எதிர்பார்க்காத செயலாளர் திகைத்து விட்டார். அதிர்ந்து போன செயலாளர் அக்காட்சியையும் கமரா எல்லாவற்றையும் செய்து விட்டது. பாருங்கள் எவ்வளவு தத்ருபமாக படம் வந்துவிட்டது!

இந்த நேரத்தில் இந்தியா பஞ்சாப் மாநிலத்தில் நடந்த சம்பவமொன்றும் சொல்ல வேண்டும். பஞ்சாப் பொலிஸ் கமிஷனர் கில் ஒரு விருந்தில் பெண் அதிகாரி ஒருவரை பின்புறத்தில் கிள்ளி விட்டார். அதிகாரிக்கு வந்ததே கோபம். நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துவிட்டார். வழக்கு இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. கில் எனில்லை என்று 'கில்' நிரூபிக்காவிட்டால் தண்டனை பெறுவார்.



யெல்ட்சினுக்கு அப்படி ஒரு தொல்லையும் இல்லை. என்ன பகிரங்கமாக கிள்ளித் தொலைத்தாரே பாவி மனுசன் என்று செயலாளர் கொஞ்சம் சங்கடப்பட்டிருப்பார். அவ்வளவுதான்.

# கற்றுக்கொள்ள ஆசை



"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?" என்பதெல்லாம் பத்தாம் பசலித்தனமான கேள்வி என்பதில் இப்போது யாருக்கும் சந்தேகமில்லை. சட்டம் இயற்றுவதிலும், திட்டம் போடுவதிலும், நிர்வாகம் நடத்துவதிலும் பெண்கள் தமது திறமைகளை முத்திரையாகப் பதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இன்னும் பெண்கள் நிலை அதல பாதாளத்தில் உள்ள நாடுகளும் இருக்கின்றன. நல்ல உதாரணம், ஆபிரிக்க நாடுகள். படிப்பு வாசனையே தெரியாத பெண்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர்.

தற்போது மெல்ல மெல்ல ஒளி தெரிகிறது. ஐக்கியநாடுகள் சபையின் கல்விக்கான அமைப்பு தாய்மார்கள் உட்பட சகல பெண்களுக்கும் கல்வியூட்டி வருகிறது. தென் ஆபிரிக்க நாடான 'மாலி' யில் தாய்மாருக்கான கல்விக்கூடத்தில் எடுக்கப்பட்ட படமே மேலே இருக்கிறது. ஏடறிய, எழுத்தறிய ஆசை இருக்கிறது. பால் கொடுத்தபடியே படிப்பில் கவனம் செலுத்தும் தாய் அதற்கு சாட்சி.

# வீசியதால் நாசம்



இப்படம் கொலன்னாவ எண்ணெய்க் குத சம்பவத்தை நினைவூட்டலாம். ஆனால் இது நடந்தது ஜோர்தான் நாட்டில். 1970ஆம் ஆண்டு VC-10 விமானத்தை கடத்தியவர்கள் ஜோர்தான் டோசன் ஃபீல்ட் விமானதளத்தில் வைத்து குண்டுவைத்து தகர்த்தபோது எடுக்கப்பட்ட படம்தான் இது. விமானத்தின் எரிபொருள் கொள்கலனில் பிடித்த தீயே இது.



இலங்கையிலிருந்து வெளிவரும் தினமுரசு பத்திரிகை ... கொழும்பு ... அச்சிட்டு வெளியிடப்படுகிறது.